www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ்-119
ஏப்ரல்.02-23,1997
விலை ரூபா.10.00

அடுத்த
இதழ்
ஏப்ரல் 24இல்

## 'தேவை புலிகளுடனான பேச்சுவார்த்தையே!'

— அலிசாகிர் மௌலானா



## ஜனாதிபதியின் பேச்சும் கூட்டணியின் கூத்தும்! தொண்டாவின் வீழ்ச்சி?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்

இரு வாரங்களுக்கொருமுறை

'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே'
-பாரதி

ஆசிரியர் குழு
ச.பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம்.றஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2, அலோ சாலை,
கொழும்பு-03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்
334, காலி வீதி,
இரத்மலானை

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை-ரூபா.300
வெளிநாடு-U.S.$.50
(தபாற் செலவு உட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும் MIRJE என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
சரிநிகர்
4, ஜயரத்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு-05

தொலைபேசி-593615, 584380
தொலைமடல்-594229

முன்னைய பிரதிகள் வேண்டுவோர் எழுதுக கைவசம் உள்ள பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்துக்கென அனுப்பப்படும் படைப்புகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

## அவசரகால சட்டத்தின் ஆதிக்கம்!

அனைத்து மின் உற்பத்தி ஆலைகள் தொடர்பான சூழல், சுற்றாடல் சட்டங்களும்செல்லுபடியற்றதென்ற விஷேட சட்டமொன்று அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மார்ச்12ம் திகதியிடப்பட்ட இல.699/11 கொண்ட மிக விஷேடமான வர்த்தமானி அறிவித்தலினூடாக ஜனாதிபதியால் இவ்வுத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட கூல் எயார் ரென்சர்ஸ் நிறுவனத்தினால் அத்துல் கோட்டே பிரதேசத்தின் சன அடர்த்திமிக்க இடமொன்றில் ஆரம்பிக்கப் பட்டுள்ள சிறிய மின் உற்பத்தி நிலையத்துக்கு எதிராக அப்பிரதேச மக்கள் நடத்தும் சட்ட நடவடிக்கையைச் செயலிழக்கச் செய்யவே இச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. இது தொடர்பாகக் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கையில் இவ்வுத்தரவு அவசர காலச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணியின் உறுப்புக் கட்சிகளுள் ஒன்றான லங்கா சம சமாஜக் கட்சி (ல.ச.ச.க.) நீடிக்கப்பட்ட அவசர கால விதிகளின் கீழ் 1997 மார்ச் மாதம் வெளியிடப்பட்ட மேற்படி வர்த்தமானி விதி தொடர்பாகத் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளது.

*(யுக்திய - 19970323/ தி ஐலண்ட் 30031997)*

## 'யால'வுள் சிங்களப் புலி!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உளவாளியாகப் பணிபுரிவதாகச் சந்தேகிக்கப்படும் சிங்களவர் ஒருவர் யால வன விலங்குச் சரணாலயக் காட்டின் மையப் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் காகிதக் கோவையொன்றும், பார்சலொன்றும், யாலவின் வரை படமொன்றும், சில ஆவணங்களும், கொஞ்சம் மருந்துகளும் இருந்தன.

அவர், தான் கிரியுல்ல பகுதியைச் சேர்ந்தவரெனவும் திருகோணமலையிலுள்ள நிலாவெளியில் நீண்ட காலமாக இருப்பதாகவும், நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் வேலைசெய்தவரென்றும் கூறியுள்ளார்.

அவர் திஸ்ஸமகராமவுக்குக் கொண்டு செல்லப்படுகையில் 60 மணி வேகத்தில் சென்று கொண்டிருக்கையில் ஜீப்பை விட்டு வெளியே பாய்ந்துள்ளார். திரும்பவும் கைது செய்யப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டபோது, தான் பாணந்துறையைச் சேர்ந்தவரெனவும் கதிர்காமத்துக்கு வந்ததாகவும் பின்பு, தான் சித்துல்பாவுவவுக்குச் செல்ல நினைத்துக் காட்டினுள் சென்றதாகவும் அப்போது பாதையைத் தவறவிட்டதாகவும் கூறியுள்ளார்.

*(தி ஐலண்ட் - 09031997)*

## முறையிட அச்சம்!

மார்ச் 17ம்திகதி மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேசத்திலுள்ள மைலம்பாவெளி கிரமத்தில் இராணுவத்தால் நடத்தப்பட்ட பாலியல் வல்லுறவு தொடர்பாகச் சந்தேக நபர்கள் நால்வர் தற்போது கைது செய்யப் பட்டுள்ளதுடன் அடையாள அணிவகுப்பொன்று மார்ச் 7ம்திகதி நடத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதற்கு முன்பும் இவ்வாறான சம்பவங்கள் பல நடைபெற்றுள்ளதாகவும், அச்சம் காரணமாகவும் அது தொடர்பாக முறைப்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லையெனவும் தெரிகிறது.

மார்ச் 17ம்திகதி பாலியல் வல்லுறவுக்குள்ளான பெண் ஒருவர் நஞ்சருந்தியதால், மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு, ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தெரியவருகிறது.

*(யுக்திய 19970330)*

## படையினர் மீது வழக்கு!

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் பிள்ளைகள் உட்பட 25பேர் படுகொலை செய்யப்பட்ட "குமாரபுரம் படுகொலை" விசாரணைகள் மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற போது 08 படையினர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அப்பகுதி மக்கள் தம்மைக் கொல்ல வேண்டாமென கெஞ்சி மன்றாடிக், காலில் விழுந்து கும்பிட்டபோதும் சீருடையில் வந்த படையினர் அட்டகாசம் புரிந்த விதம் பற்றிக் கண்ணால் கண்ட சாட்சிகள் விபரித்தனர். இவ்வழக்கு விசாரணை ஏப்ரல் 02ம்திகதி திரும்பவும் நடைபெறும் போது 128 நேரடியாகக் கண்ட சாட்சிகள் சாட்சியமளிப்பார்கள்.

*(மிட்வீக் மிரர் 26031997)*

## யாழ்ப்பாணம் உடைபடும் கடிதங்கள்!

யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கு வரும், அவர்களினால் யாழ்ப்பாணத்துக்கு வெளியே அனுப்பப்படும் அனைத்துக் கடிதங்களும் இராணுவ உளவுப் பிரிவினால் பிரித்துப் பரீட்சிக் கப்படுவது அங்குள்ள மக்களின் தனி மனித சுதந்திரத்துக்குக் குந்தகம் விளைவிப்பதாக யாழ்ப்பாணம் பொது மக்கள் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். இக்கடித உடைப்புச் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளரொருவர், இந்தியாவில் காஷ்மீர் பிராந்தியத்திலோ, இஸ்ரேலில் பாலஸ்தீன மக்களினதோ, ஆபிரிக்காவில் வெள்ளை இனத்தவர்களினதோ கடிதங்கள் அந்நாட்டு அரச படைகளினாலோ வேறு எவராலோ பிரித்துப் பார்க்கப்படுவதில்லை எனத் தெரிவித்தார்.

*(யுக்திய 19970216)*

## ரூபவாஹினியின் நடுநிலமை!

எவருக்கும் வாக்களிக்கவோ அல்லது வாக்களிக்காது விடுமாறோ பிரச்சாரப்படுத்தும் எதுவித விளம்பரத்தையும் அரச தொலைக்காட்சியில் ஒளிபரப்பக் கூடாதென்று முடிவொன்று இருப்பதால் "வன்முறை அரசியலில் ஈடுபடும் எவருக்கும் வாக்களிக்க வேண்டாம்" எனப்படும் அரசியல் வன்முறைகளுக்கு எதிரான கூட்டமைப்பின் பிரச்சார விளம்பரத்தை ஒளிபரப்ப முடியாதென ரூபவாஹினி நிராகரித்துள்ளது.

இலங்கைத் தேசிய தொலைக்காட்சியின் அதிகாரிகள் அதனை நிராகரித்து அக்கூட்டமைப்பின் பிரதிநிதிகளிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஆனாலும் அதன் பின்பு வாக்குக் கேட்ட அரசியல் கட்சிகளின் பிரச்சார விளம்பரங்கள் சிலவற்றை ரூபவாஹினியில் ஒளிபரப்பியது.

*(யுக்திய - 19970323)*

## திருமலை: பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலகம்: லஞ்சப் புலிகளின் குகை!

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலகம் லஞ்சக்கூடராமாக மாறிவிட்டது. பிரதேசச் செயலாளர் வேலும் மயிலும் நேர்மையான மனிதராக இருந்தும் அவரால் ஏன் இதைத் தடுக்க முடியவில்லை என்பதுதான் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வி.

பிரதேசச் செயலகம் பொது மக்களின் கல்லெறியில் இருந்து காப்பாற்றப்படுவதற்கான ஒரே காரணம் பிரதேசச் செயலர் மேல் மக்கள் கொண்டிருக்கும் மதிப்புதான். 90 ஜூலையில் தாங்கள் அகதிகளாகி வடமராட்சி சேர்ந்தபோது வரவேற்று உதவிய கரங்கள் வேலும் மயிலுடையவை என்பதை இன்றும் நெகிழ்ச்சியுடன் நினைத்துப்பார்ப்பதால்தான் கைகளைக் கட்டிக்கொண்டிருக்க வேண்டியிருக் கிறது என்கிறார்கள் பலர்.

90ல் வேலும்மயிலும் வடமராட்சியில் உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றிக்கொண்டிருந்த போது திருகோணமலை மக்கள் அகதிகளாகிச் சென்ற வேளை தன் குடும்பமே அகதியாவிட்டது போன்ற உணர்வுடன் ஓடியோடி உதவியவர். பிரதிபலன் கருதாது அப்போது அவர் ஆற்றிய சேவையால் அரசிடம் கைகட்டி விளக்கமளிக்க வேண்டிய நிலையும் பிற்பாடு ஏற்பட்டது. இந்த நன்றியுணர்வு திருகோணமலை மக்களிடம் நிறையவே உண்டு.

ஆனால் நிர்வாக ரீதியில் அவரின் கீழ்ப்பணிபுரிபவர் கள் பலர் லஞ்சப்புலிகளாகவே இருக்கிறார்கள். இவ் ஒய்வூதி யக்கிளை இத்துறையிலே உச்சஸ்தானத்தை வகிக்கிறது.

சப்ஜெக்ட் கிளாக்தான் இதில் நாயகன். இவரது பெயரை சற்றே மாற்றி ஒய்வூதியக்காரர்கள் துலைவான் என்று அழைக்குமளவுக்கு நிலைமை இருக்கிறது.

இவரின் கணிப்பில் ஒய்வூத்தியக்காரர் பிச்சைக்கு வருபவர்கள் போல் தெரிவிக்கிறார்கள். இவரைத் திருப்திப் படுத்தாமல் எந்தப் புதிய ஒய்வூத்தியக்காரரும் ஒய்வூதியம் பெற்றுக்கொள்ள முடியாது. முகத்தைக் கடுப்பாக வைத்துக்கொண்டு பணிந்து வரும் நாள் வரை பலதடவைகள் ஒய்வூத்தியக்காரரை இவர் அலைக்கழிப்பது சர்வ சாதாரணம். இவரிடம் நேரடியாகப் பணிந்து போகவேண்டும். அல்லது சப் ஏஜன்டுகள் மூலமாகப் பணிந்து போகவேண்டும். இல்லையேல் ஒரு வருடமானாலும் பென்சன் 'கணக்குப் பார்க்க' நேரமில்லையென்று கூறியே முடக்கி வைக்கப்படும்.

புகையிரத ஆணைச்சீட்டுக்கு வரும் ஒய்வூத்தியக்காரர் கள் பயபக்தியுடன் வந்து போகவேண்டியுள்ளது. தான் தனது செலவில் புகையிரதப் பயணச்சீட்டு பெற்றுத்தருபவர் போல்தான் இவர் நடந்து கொள்கிறார். முதியோர்களுக்கு விசேட அடையாள அட்டை, விசேட முன்னுரிமை என்ற விளம்பங்களும் இதே அலுவலகத்தில் விளம்பரப்பலகைகளில் அழகாகத் தொங்கிக்கொண்டிருப்பதுதான் சிறப்பான விடயம்.

இந்தத் "துலைவானின்" பகிரங்க நாடகம் அவரின் நேரடி உயரதிகாரியான கணக்காளருக்கோ, திணைக்களத் தலைவரான பிரதேசச் செயலாளருக்கோ தெரியாது என்று சொன்னால் அது மிகப்பெரிய பொய்யாகிவிடும்.

அடுத்தவர் சாரதி அனுமதிப்பத்திரப் பிரிவைச் சேர்ந்தவர். இவர் ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்திற்கும் ஒவ்வொரு ரேட் வைத்திருக்கிறார். ரேட் பட்டியலை விளம்பரப் பலகையில் தொங்க விடாதது தான் ஒரு குறை.

வாங்குவதில் ஏழை பணக்காரன், நண்பர் பகைவர் என்ற வேறுபாடெல்லாம் இவரிடம் கிடையாது. அப்படியொரு நேர்மையாளர். தனது மகனின் நண்பர்களிடம் கூட சற்றும் விட்டுக் கொடுக்காத கொள்கையாளர் இவர். சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான எழுத்துப் பரீட்சைமுறை வந்த பிறகு இவர் பாடு மேலும் கொண்டாட்டம்தான்.

இதே அலுவலகத்தில் சில ஆண்டுகளுக்கு முன் உத்தயோகத்தர் ஒருவர் வந்தார். வரும்போது மெலிந்து நடக்கச் சக்தியற்று இருந்தவர். சிலமாதங்களுக்குள்ளாகவே உடல்கொழுத்து, ஆடம்பர மோட்டார் சைக்கிளும் உயர் வகைப் பானக் குடிகாரருமாகக் கொடிகட்டிப் பறந்தார். இத்தனைக்கும் இவர் உணவுமுத்திரை விநியோகிக்கும் கிளாக்தான். கடைசியில் போலிக் கல்விச் சான்றிதழ் சமர்ப்பிக்கப் பட்டமை, கண்டிக்கப்பட்டு வேலையிலிருந்தே நீக்கப்பட்டார். தற்போது பழையபடி மெலிந்து போனார். வருமானத்தை மீறிய வசதியான வாழ்க்கை வர இவர் செய்த தில்லுமுல்லுகளை திணைக்களம் கண்டு கொள்ளவேயில்லை.

இதைவிட கப்பல் பயணிகள் விடயத்துக்குப் பொறுப் பான உத்தியோகத்தர்களின் கில்லாடித்தனம் இன்னொரு வகையானது. இவை ஏற்கெனவே பத்திரிகைகளில் வந்துள்ளன. இவர்களை விட இது சிறு சிறு லஞ்சவேந்தர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பிரதேசச் செயலக உத்தியோகத்தர்கள் பலர் தான் அரசிடம் சம்பளம் பெறாதவர்கள் போலவும், சேவையைப் பெறுபவர்களிடமென்பது கட்டாயமாகப் பணம் பெற வேண்டியவர்கள் போலவும் நடந்து கொள்கிறார்கள். விதி விலக்கான நேர்மையான உத்தயோகத்தர்களும் இவர்கள் முன் செயலிழந்து போகவேண்டியிருக்கிறது. இங்கு வரும் மக்கள் கூட அரசாங்க அலுவலகம் ஒன்றுக்குப் போகிறோம் என்ற நிலை மறந்து பணம் கொடுத்து சேவையைப் பெற்றுக் கொள்ளுமிடத்துக்குச் செல்வதாகவே உணரும் அளவுக்கு நிலைமை தாழ்ந்து போயுள்ளது.

பிரதேசச் செயலாளர் வேலும் மயிலும் தனது அதிகாரத்தைப் பிரயோகித்து அலுவலகத்தில் கடமையாற்றும் நேர்மையான உத்தயோகத்தர்களின் துணையுடன் சரியான களையெடுப்புகளை மேற்கொண்டாலொழிய பிரதேசச் செயலகம் சம்பந்தமான பொது மக்களது அருவருப்பான மனோ நிலையை மாற்றவே முடியாது.

விவேகி -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஜனாதிபதியின் பேச்சும் கூட்டணியின் கூத்தும்!

''இலங்கையில் இனத்துவப் பிரச்சினை என்று ஒன்று இல்லை. இங்கே இருப்பதெல்லாம், மனிதாபிமானமற்ற கொடூரத்தன்மை வாய்ந்த புலிகளுடனான ஒரு இராணுவ யுத்தம் மட்டுமே...

''நான் இதை இனத்துவப் பிரச்சினை என்று அழைக்க விரும்பவில்லை. ஏனென்றால் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் நிலவுவது போல ஒரு இன ஒதுக்கல் நிலையோ அல்லது அமெரிக்காவிலுள்ள கோட்பாடுகளோ இங்கு கிடையாது''.



எங்கோ கேட்ட விடயம் போலத் தெரிகிறதா? ஆம். ஜனாதிபதி பிரேமதாச கொல்லப்பட்டபின் அதிர்ஷ்டவசமாக ஜனாதிபதியாகிய முன்னாள் ஜனாதிபதி விஜேதுங்க, தனது முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டின் போது இதேபோன்ற ஒரு கதையைத் தான் சொன்னார். 'இந்த நாட்டில் இனப்பிரச்சினை கிடையாது. இங்கே இருப்பதெல்லாம் வெறும் பயங்கரவாதப் பிரச்சினையே' என்று அவர் அன்று தெரிவித்தார். அன்று அவரது இந்தக் கருத்துக்கு எதிரான பல கண்டனங்கள் தமிழ் மக்கள் சார்பாக வெளியிடப்பட்டன. அத்தகைய கண்டனங்களை தெரிவிக்க எந்த ஒரு தமிழ்க் கட்சிகளும் தயங்கவில்லை.

ஆனால் இப்போது மேலே மேற்கோள் காட்டிய வாசகங்களைப் பேசியவர் சாட்சாத் நமது ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்கள் என்பதாலோ என்னவோ ஒரு மூச்சுப் பேச்சும் யாரிடமிருந்தும் வெளிப்படவில்லை. ஜனாதிபதி செயலகத்தில் 200க்கும் மேற்பட்ட தொடர்பியலாளர்கள் கலந்து கொண்ட 'தருண அருண' என்ற செயற்திறன் வளர்ச்சிக்கான செயற்திட்டம் தொடர்பான வைபவத்தின் போது ஜனாதிபதி இவ்வாறு பேசியிருந்தார். ஆயினும் இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாக யாருக்கும் புலப்படவில்லை. எந்த ஜனாதிபதி இந்த நாட்டில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் போவதாக கூறிப் பதவிக்கு வந்தாரோ அந்த ஜனாதிபதியே இப்படிச் சொல்லியும் அதுவும் தேர்தலன்று வெளியான ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் இச்செய்தி வெளிவந்த பின்னும் கூட எந்தத் தமிழ்க் கட்சிகளும் இதுபற்றி வாய் திறக்கவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டும் வாய்திறந்தது. ஆம். அதன் முக்கியஸ்தர் ஒருவர் தமிழ் நாளிதழ் ஒன்றுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜனாதிபதியின் அந்தப் பேச்சைப் பிரசுரிக்காதீர்கள், அவர் வாய்தடுமாறி அப்படிச் சொல்லி விட்டார் என்று கேட்டுக் கொண்டார். அந்தப் பத்திரிகையும் அதைக் கேட்டுக்கொண்டு அச்செய்தியைப் பிரசுரிக்காமலே விட்டு விட்டது.

அதே பத்திரிகையில், அதுவரை காலமும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக மௌனம் சாதித்து வந்த த.வி.கூ., கடைசி நேரத்தில் பொ.ஐ.மு.வுக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கேட்டுக் கொண்டது.

(ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும் அதேபோல் தேர்தலுக்கு முதல் நாளன்று பொ.ஐ.மு. சார்பில் சுயேட்சையாக நிறுத்தப்பட்ட கணேசலிங்கம் நல்லவர், நாணயமானவர் என்ற பொருள்பட அறிக்கை விடுத்திருந்தார் என்ற விடயமும் உண்டு.)

பத்திரிகைச் செய்தியைப் படித்த எனது முன்னாள் தமிழரசுக்கட்சி நண்பர் ஒருவர் சொன்ன ஆத்திரம் பொங்கும் வார்த்தைகள் இவை:

தாம் செய்துவரும் அரசியல் பிழைப்பையும் தமிழ் மக்களின் முதுகில் சவாரி விட நினைக்கும் அயோக்கியத்தனத்தையும் மூடி மறைக்க அவர்களுக்கு இப்போது கடைசியாக கிடைத்திருக்கும் ஒரு வாய்ப்புத்தான் 'தந்தை செல்வாவின் நூற்றாண்டு' கொண்டாடும் வாய்ப்பு. தான் கொண்ட கொள்கையில் உறுதியாக நின்றவரும், இறுதிவரை தமிழ் முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகளுக்காக தேசம் பரந்த போராட்டத்தைத் தலைமையேற்று நடத்தியவருமான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களை அவரது அரசியல் எதிரிகள் கூட, அவரது அரசியற் பாதையுடன் உடன்படாதவர்கள் கூட கௌரவிப்பார்கள். ஆனால் இவர்களுக்கு? இவர்களை தலைவர்கள் என்று சொல்ல என்னதான் இருக்கிறது? அவர் உருவாக்கிய தேசிய எழுச்சியை, அதனால் உருவான தேசிய விடுலைப்போராட்டத்தை தமது சொந்தப்பதவிக்காகவும், தனிப்பட்ட பிற நலன்களுக்காகவும் காட்டிக் கொடுக்கவும் அதை விற்று பிழைக்கவும் தயாராகிவிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் இன்றைய 'ஐயாமாருக்கு' வேண்டியதெல்லாம், அவரை 'தந்தை' என்று ஒரு தங்கப்பிறேம் போட்டு மாட்டிவிட்டு, தமது வியாபாரத்தை நடாத்துவதுதான்.

தேசிய விடுதலை என்று வாய் கிழியக் கத்தியவர்கள் புலி என்றும், அம்பு வில்லென்றும் அடலேறாய் கர்ச்சித்தவர்கள், அதை அடைவதற்கு மக்கள் மத்தியிலே தேசிய எழுச்சிக்கான நடவடிக்கைகட்கு வழிகாட்டிய செல்வாவை வசதியாக மறந்து விட்டனர். இந்தியாவுக்கும், இங்கிலாந்துக்கும் பயணம் செய்து 'விடுதலைப் போராட்டப்' பணியில் ஈடுபட்டனர். சொந்த நாட்டிலே எழுச்சிபெற்று வந்த இளைஞர் அணிக்கு, தமது பாராளுமன்ற கதிரைகளை, உத்தரவாதம் செய்யும் அளவுக்கு போரிட்டால் போதும் என்று 'வழிகாட்டினர்'. விளைவு நாடே இன்று இரத்தக் களரியாகி விட்டிருக்கிறது. அவர்களோ தமது அரசியல் பிழைப்பை நடாத்தி வருகின்றனர். போராட்டத்தை ஒரு சில பத்திரிகை அறிக்கைகட்குள்ளும் மூடிய அறைக்குள் கூட்டம் போடுவதுடனும் குறுக்கிக் கொண்டனர். செல்வா தலைமையில் நடந்த போராட்டக் காலத்தை இரைமீட்டு மீட்டு தமது இருப்புக்கு நியாயம் கற்பிக்க முயன்று கொண்டிருக்கின்றனர்...'',

இவ்வளவு ஆவேசமான வார்த்தைகளை அவர் பாவிப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. பொ.ஐ.மு. அர்சாங்கம் பதவிக்கு வந்த போது, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை பேச்சுவார்த்தைகள் மூலமாக, அரசியல் தீர்வு மூலமாக தீர்ப்பதாக இந்த அரசாங்கம் அறிவித்தது. புலிகளுடனான யுத்தம் தொடங்கியதை அடுத்து, பேச்சுவார்த்தை என்ற விடயத்தை அது கைவிட்டு விட்டு அரசியல் தீர்வு என்று பசப்பியது. கூட்டணிப் பா.உ.க்களில் ஒருவரான நீலன் திருச்செல்வம் அவர்களும் சேர்ந்து உருவாக்கிய அரசியலமைப்பு திருத்த ஆலோசனைகளை வெட்டியும், குறைத்தும், சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு வளைந்து கொடுக்கும் விதத்தில் 'மெருகூட்டியது'. வடக்கு கிழக்கில் பாரதூரமான தாக்குதல்களை நடாத்தியது. ஆயிரக்கணக்கில் அப்பாவி மக்களைக் கொன்று குவித்தது. முழுக் குடாநாட்டையும் இன்று இராணுவத்தின் வேட்டைக் காடாக்கியுள்ளது. அரசியல் தீர்வு என்று கூறிய விடயம் தொடர்பாக எந்த உருப்படியான அறிவிப்பும் இல்லாமல் இழுத்தடித்த பின் இப்போது ஒரு அரசியலமைப்பு நகலை வெளியிட்டுள்ளது. பேரினவாதப் பெருந்தன்மையைக் காட்டும் விதத்துடன் தயாரிக்கப்பட்ட அதை வடக்கு கிழக்கு மக்களின் விடிவுக்கு வழிசமைக்கும் என்று கூறிவருகிறது.

ஐ.தே.க. அரசாங்கங்கள் எதையெல்லாம் செய்து தமது அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொண்டனவோ அவையெல்லாவற்றையும் இந்த அரசாங்கமும் தனது பாணியில் செய்து வருகிறது. கள்ளவாக்கு, ஆட்கடத்தல், கொலைமிரட்டல், தமிழ் மக்கள் மீதான தாக்குதல், அவர்களின் பாரம்பரிய பிரதேசங்களையுப் பறித்தது என்று எதிலுமே இவர்கள் குறைவிடவில்லை. பத்திரிகைத் தணிக்கை, அவசர காலச் சட்டத்தைத் தொடர்ந்து வைத்திருத்தல், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்களை விசாரணையின்றி தடுத்து வைத்தல் போன்ற எந்த விடயத்தில் தான் அது ஐ.தே.கவுக்கு சோடை போயிற்று?

இவ்வளவுக்குப் பிறகும், இந்த அரசாங்கத்திற்கு தமிழ் மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று கோருகிறது.

''தனக்குக் கிடைத்த மந்திரிப் பதவியை திருவுக்கு வழங்கியவர் செல்வா. வெறும் பாராளுமன்றப் பதவிக்காக தமக்குள் நாய்ச்சண்டை போடுவதும், பின் கதவாலேனும் பாராளுமன்ற கதிரையில் போய் இருக்க விரும்புவதும் இவர்களது பண்பு. அவர் எங்கே... இவர்கள் எங்கே...'' என்றார் அவர்.

இந்த இலட்சணத்தில் செல்வாவிற்கு விழா எடுக்கப்போகிறார்கள் என்றால், எவருக்குத்தான் எரிச்சல் வராது?

000

நடந்து முடிந்த தேர்தல் பொ.ஐ.முவின் அரசியல் சாதனைகட்கு மக்கள் அளித்த அங்கீகாரம்' என்று வீறாப்பு பேசுகின்றனர் ஆளும் கட்சியினர்.

கள்ளவாக்கு, மிரட்டல், ஆள்மாறாட்டம், அதிகாரத்தில் இருக்கும் வாய்ப்பினைப் பயன்படுத்தி எல்லா அரச வளங்களையும் பயன்படுத்துதல், ஏன் வெற்றியை உத்தரவாதம் செய்வதற்காக எல்லா விதமான கழிசடைகளுடனும் கூட்டுச் சேரத் தயாராக இருத்தல் என்ற அடிப்படையில் இயங்கும் ஒரு கட்சி தேர்தலில் வெற்றி பெறுவதில் வியப்படைய என்னதான் இருக்கிறது?

ஆனால் இவ்வளவுக்குப்பிறகும், பொ.ஐ.முவினால் அது எதிர்பார்த்த வெற்றியைப் பெறமுடிந்ததா என்பது ஒரு முக்கியமான கேள்வி. பாராளுமன்றத் தேர்தலின்போது அதற்கு கிட்டத்தட்ட 49% மான வாக்குகள் விழுந்திருந்தன. இந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதற்கு 'ஒரு சிறுபான்மை அரசுப்பலமே இருக்கிறது' என்பதால் ஜனாதிபதி பதவியையும் வழங்கி அதைப் பலப்படுத்த வேண்டும்; அது கூறும் நல்ல விடயங்களை செய்ய அது அவசியம் என்று வாக்காளர்கள் நினைத்ததாலோ என்னவோ ஜனாதிபதி தேர்தலில் 62% வாக்குகள் விழுந்தன. அங்கேயும் கணிசமானளவு கள்ள வாக்குகள் விழுந்ததாகக் கூறப்பட்டாலும் ஜனாதிபதித் தேர்தலின் போது சந்திரிகாவுக்கு அமோக ஆதரவு இருந்தது உண்மையே.

ஆனால் இந்தத் தேர்தலின் போது பொ.ஐ.மு.வுக்கு திரும்பவும் 49% வாக்குகளே விழுந்திருக்கின்றன. ஆக இந்த வெற்றியை வெற்றி என்று சொல்ல முடியுமா என்பது பரவலாக கேட்கப்படும் ஒரு கேள்வி.

இந்தத் தேர்தலில் அரசாங்கத்திற்கு மக்கள் அளித்துள்ள ஆதரவானது இலங்கையின் இனத்துவப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு அவசியம் என்ற அரசாங்கத்தின் முடிவுக்கு மக்கள் அளித்துள்ள ஆதரவையே காட்டுகின்றது என்று பேசியிருக்கிறார் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ். இந்தப்பேச்சைப் படிக்கும் ஒருவருக்கு அழுவதாத இல்லை சிரிப்பதா என்ற சந்தேகம் தான் எழும்.

ஒரு புறத்தில் பொ.ஐ.முவுக்கு செல்வாக்கு சரிந்துள்ளதை தேர்தல் முடிவுகள் காட்டும் போது, அதை வெற்றி என்று கொண்டாடுகிறார்கள் இவர்கள். கொழும்பிலே தமது கட்சி வெல்ல வேண்டும் என்பதற்காக முன்னாள் ஐ.தே.க. பொருளாளரும், அதன் சார்பில் உதவி மேயராக இருந்தவருமான கணேசலிங்கத்தின் சுயேட்சைக் குழுவுடன் சேர்ந்து தேர்தலில் நின்ற பொ.ஐ.மு. தனது சின்னமான கதிரையை விட்டு மணிக்கூட்டுச் சின்னத்தில் வாக்குக் கேட்டது. தேர்தலில் போட்டியிட்ட ஐ.தே.க. வேட்பாளர்களின் தலைவரான கரு ஜயசூரியவுக்கு எதிராக ஜனாதிபதி தேர்தலில் பிரச்சாரம் செய்தார். மற்றெவர்க்கும் இல்லாத ஜனாதிபதி என்ற பதவியின் காரணமாக கிடைக்கும் அதிகாரத்தையும் வாய்ப்பையும் பயன்படுத்தி அவருக்கு எதிராக தேர்தலுக்கு முதல் நாள் கூட ரூபவாஹினி செய்தியில் பிரச்சாரம் செய்தார். ஆயினும் பொ.ஐ.மு.வால் வெற்றி பெற முடியவில்லை. இத்தனைக்குப் பிறகும் தாம் வெற்றி பெற்றதாக இவர்கள் கூறுகின்றனர். இன்னொரு புறத்தில் அந்த வெற்றி, அரசியல் தீர்வுக்கான வெற்றி என்றும் கூறுகின்றனர்.

ஜனாதிபதியே இனத்துவப்பிரச்சினை என்று ஒன்று இங்கு கிடையாது என்று சொன்ன பிறகும், அதற்கான அரசியல் தீர்வுக்கு கிடைத்த ஆதரவு இது என்கிறார் இவர்.

'இல்லாத ஊருக்கு நாளை புறப்பட்டு நேற்றிரவு போய்ச்சேர' வழிகாட்டுபவர் பேராசிரியர் பீரிஸ் அவர்கள்.

அவர் பேசுவதைக் கேட்டு பலர் ஏற்கெனவே பைத்தியம் பிடித்துப் போய்விட்டார்கள் என்று கேள்வி. இன்னும் உள்ள மீதிப்பேருக்கும் பைத்தியம் பிடிக்காமல் இருக்க வேண்டுமானால் உள்ளே ஒரே ஒரு வழி பத்திரிகைகள், வானொலி, தொ(ல்)லைக்காட்சி பக்கத்திற்கு போகாமலே இருந்து விடுவதுதான். வேறு வழியில்லை!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வவுனியா: மோசடிக்கு முற்றுப்புள்ளி?

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப்பரீட்சையில், வவுனியா கல்வித்திணைக்கள உயரதிகாரி ஒருவர் தமது மகளுக்காக மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டதாகப் புகார் தெரிவிக்கப்பட்டு விசாரணைகள் முடுக்கிவிடப் பட்டுள்ளன.

வடகிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவின் பணிப்பின் பேரில் குறிப்பிட்ட உயரதிகாரியும் அவருக்கு அடுத்த பதவி நிலையில் ஓர் அதிகாரியும் கட்டாய விடுமுறையில் அனுப்பப் பட்டுள்ளார்கள்.


இதனையடுத்து மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளராகத் திருகோணமலையில் பணியாற்றி சி. புலேந்திரன் வவுனியா பிராந்திய கல்விப் பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பரீட்சை மோசடி விவகாரம் வெளிச்சத்திற்கு வந்ததையடுத்து, வவுனியா கல்வித்திணைக்களத்தைச் சீர்ப்படுத்தி அங்கு ஒரு சிறந்த நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு தீர்மானித்துச் செயற்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் தேவையான எந்த ஒரு முடிவையும் மேற்கொண்டு சுதந்திரமாக நடவடிக்கைகளை எடுப்பதற்குரிய அனுமதி புதிய பிராந்திய கல்விப்பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

புதிய பிராந்திய கல்விப்பணிப்பாளர் பொறுப்பேற்றதும், இங்கு கடமையாற்றிவந்த பிரதம லிகிதர் ரீ. ஜெயராஜ் உடனடியாக திருகோணமலைக்கு இடம் மாற்றம் செய்யப் பட்டுள்ளார்.

அத்துடன் பிரதி பிராந்திய கல்விப் பணிப்பாளர் மற்றும் உதவி கல்விப் பணிப்பாளர்களுக்குரிய கடமைப் பட்டியல்கள் வழங்கப்பட்டு உரிய அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.



இதற்கு முன்னதாக கடந்த பல வருடங்களாகவே கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கும் மற்றும் துறைகள் சார்ந்த உதவி கல்விப்பணிப்பாளர்களுக்கும் உரிய கடமைகளும் அதிகாரங்களும் வழங்கப்பட வில்லை என்ற பொதுவான குறைபாடு இருக்கத்தான் செய்தது.

அதுமட்டுமல்லாமல் அதிகாரங்களும், சின்னச் சின்ன விடயங்களுக்குரிய முடிவுகளை மேற்கொள்கின்ற அதிகார வலலமையும் பிராந்திய கல்விப்பணிப்பாளரிடமும் அவருக்கு அடுத்ததாக பிரதம லிகிதரிடமுமே இருந்து வந்தது. இதனால் திறமை மிக்க அதிகாரிகள் மாவட்டத்தின் கல்வி அபிவிருத்திக்குரிய செயற்பாடுகளில் ஈடுபட முடியாத நிலைமையே நிலவி வந்தது. மேலும் சக்தி மிகுந்து விளங்கிய பணிப்பாளருக்கும், பிரதம லிகிதருக்கும் நல்ல பிள்ளையாக நடந்து கொண்ட அதிபர்கள், ஆசிரிய சேவை ஆலோசகர்கள் சிரேஷ்ட ஆசிரியர்கள் போன்றோர் வழமைக்கு மாறான வழிகளின் மூலம் பல நன்மைகளை அனுபவிக்கக் கூடியதாக இருந்தது.

இவர்களது வழிகளில் எதிர்ப்பட்ட அதிபர்கள், ஆசிரியர்களும், குறுக்கீடு செய்தவர்களும் பலவிதமான கஷ்டங்களுக்கு உள்ளாக்கப் பட்டார்கள்.

கருத்த்ரங்குகள், பாடரீதியான ஆசிரியர்களுக்குரிய பயிற்சிக் கருத்தரங்குகள் என்பன அதிகார பலத்துடன் சார்ந்திருந்த அதிகாரிகளின் வசதிகளுக்கும் லாபமீட்டக் கூடிய இயல்புகளுக்கும் ஏற்பவே நடாத்தப்பட்டன. ஆங்கிலம், தமிழ், விஞ்ஞானம், கணிதம், புவியியல் போன்ற பாடங்களுக்குரிய - கல்வி அமைச்சினதும் தேசிய கல்வி நிறுவகத்தினதும் பிந்திய போதனை முறைகள் தொடர்பான விளக்கக் கருத்தரங்குகள் முறையாக ஆசிரியர்களுக்கு நடாத்தப்பட வில்லை.

குறிப்பாக ஆங்கில மொழிப்பிரிவின் நடவடிக்கைகள் மிகவும் மந்தகதியிலும் ஏனோ தானோ என்ற வகையிலுமே நடைபெற்று வந்தன. ஆங்கில மொழித்தினப்போட்டிகள் மாணவர்களின் திறமையை வ்ளர்ப்பதற்கு உரிய வகையில் நன்கு திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை.

போட்டிகள் தொடர்பான விதிகளும் நடைமுறைகளும் அதிகாரிகளின் வசதிக்கு ஏற்றவகையில் மாத்திரமே மேற்கொள்ளப்படுவது வழக்கமாயிற்று.

தம்பு

# மொகிதீனின் இடை நிறுத்தமும் மு.காவும்

உள்ளூராட்சித் தேர்தல் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்ற சமயம் வானொலி, தொலைக்காட்சி இரண்டு தொடர்பு சாதனங்களும் செய்தி வெளியிட்டது. அது 'தொப்பி முகைதீனி'ன் இடைநிறுத்தம் பற்றிய செய்தி. ''திகாமடுல்ல ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் கட்சியில் இருந்து தற்காலிகமாய் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.''

அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கு இச்செய்தி சலசலப்பையும் கிளுகிளுப்பையும் ஏற்படுத்திவிட்டது. குறிப்பாக சம்மாந்துறைத் தொகுதி மக்களுக்கு இவ்வறிப்பு பேரதிர்ச்சியாய் இருந்தது. முகைதீன் அவர்களுக்கே தனது தொகுதியில் செல் வாக்கு குறைவுதான் என்றாலும் முகைதீனின் இடைநிறுத்தத்தை நியாயப்படுத்த அவர்களின் மனம் இடம் கொடாது. அத்தோடு சம்மாந்துறை தொகுதிக்கு இது இரண்டாவது அநியாயமாகவும் இருக்கப் போகின்றது எனவும் சந்தேகம் கிளம்பியது.

முன்பும் காங்கிரசின் முன்னாள் தவிசாளர் சேகு இஸ்ஸத்தீன் விலக்கப்பட்டதும் இப்படியான ஓர் நிகழ்வுதான். சேகு இஸ்ஸதீனும் சம்மாந்துறை தொகுதியைச் சேர்ந்தவர் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் மேடைப்பேச்சை விபரித்து அல்லது கருத்து விளங்கப்படுத்தி பத்திரிகை அறிக்கை விட்டதனால் அவர் கட்சியிலிருந்து கல்தா கொடுக்கப் பட்டார். இன்று தொப்பி முகைதீன் மேடையேறிப் பேசியதனால் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இப்போது முகைதீனுக்கு வழங்கப் பட்டுள்ள தற்காலிக இடைநிறுத்தம் நாளை நீக்கப்படலாம். அல்லது முற்றாக கட்சியில் இருந்து விலக்கப்படலாம். மாறாக நீதிமன்றத்தில் விவாதம் நடக்கலாம். ஆனால் பிரச்சினை அதுவல்ல. எதிர்காலத்தில் முகைதீனுடைய நிலைப்பாடு எவ்வாறு அமையப் போகின்றது என்பது தான் வினாக்குறி?

கொழும்பு மாவட்டத்தில் பொ.ஐ.மு.வும் முஸ்லிம் காங்கிரசும் பொதுவான சின்னத்தில் (மணிக்கூடு) போட்டியிட்டது. இதன் சார்பாக முஸ்லிம் காங்கிரஸ் ரீ.கே.அஸுர் சட்டத்தரணியை நிறுத்தி இருந்தது. முஸ்லிம் காங்கிரஸ் பொதுச்சின்னத்தில் போட்டியிட்டாலும் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளருக்கே 3 வாக்குகளும் வழங்கப்பட வேண்டும் எனப் பிரச்சாரம் செய்தது. இப்பிரச்சாரம் கட்சியின் உறதியான தீர்மானமான கொள்கையா என்பது முகைதீனுக்கு புரியாத விளக்கமாம். பொ.ஐ.மு. மணிக்கூட்டுச் சின்னத்தில் அமைச்சர் பௌசியின் மகன் நவ்சர் பவுசியும் போட்டியிட்டார். இவருக்கு வாக்குச் சேர்ப்பதற்காக மாளிகாவதையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலேயே முகைதீன் அவர்கள் உரையாற்றினார் இக்கூட்டத்தில் முகைதீன் அவர்கள் பேசிய பேச்சு பெரிதாய் முஸ்லிம் காங்கிரசின் தலைமைத்துவத்தை தாக்கியிருக்காது. ஆனால் அவர் பேசிய 2 விடயங்கள் அவர்களை உசுப்பி இருக்கவேண்டும்.

முகைதீன் தன்னுடைய பேச்சிலே,

அமைச்சர் பௌசியை முஸ்லிம்களின் தலைவர் என்று போற்றியது. 3 விருப்பு வாக்குகளையும் நவ்சர் பவுசிக்கு வழங்க வேண்டும் எனச் சொன்னது. இப்பேச்சில் இரண்டாவது விடயத்தை வைத்தே சர்ச்சை எழுந்தாலும் உண்மையில் முதலாவது விடயமே இடைநிறுத்தத்தின் அடிப்படையாய் அமைந்திருக்க வேண்டும். ஏனெனில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரைப் பொறுத்தவரை எதை இழந்தாலும் முஸ்லிம்களின் தலைவர் -தான் தான் என்கின்ற மகுடத்தை இழக்க அவர் எப்போதும் தயாரில்லை.

எது எவ்வாறு இருப்பினும் பாராளுமன்ற உறுப்பினர் கட்சியின் மூத்த சிரேஷ்ட உறுப்பினர் எனும் எதனையும் கருத்திற் கொள்ளாது கேள்வி பார்வையின்றி தான் தோன்றித்தனமாய் இடைநிறுத்தம் செய்தது தலைமைத்துவத்தின் தலைபெருத்த தனம் அல்லவா என்றே மக்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

முஸ்லிம் காங்கிரசின் யாப்பு தலைவருக்கு வழங்கியுள்ள 'உயர் அதிகாரம்' எந்தளவுக்கு எதிர்காலத்தில் பிழைவழிப்படுத்தப்படலாம் என்பதைப்பற்றி ஒவ்வொரு முஸ்லிம் காங்கிரஸ் அபிமானியும் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். ஆனாலும் தனது கட்சியிலே வேட்பாளர் இருக்கும் போது மாற்றுக் கட்சிக்காருக்கு வாக்குக் கேட்டு பிரச்சாரம் செய்வது எந்தளவு சிறுபிள்ளைத்தனமான செயல் என்ற குரல் எழமலும் இல்லை. ஏலவே முகைதீன் அவர்களைப் பற்றி ஓர் தப்பான அபிப்பிராயம் இருந்தது. தான் எந்த வேலை செய்யப்போனாலும் அதைத் தலைவரிடமே கேட்க வேண்டும் என்ற தலைவர் பற்றில் இருப்பவர் என்று. அப்படிப் பட்டவர் தலைவருக்கே மாற்றமாய் எவ்வாறு நடந்தார் என்பதுதான் ஆச்சரியம்!!

ஐ.பயஸ் ரெஸ்ஸாக்

# பொல்கொட வழக்கு விசாரணை: கோவிந்தா.. கோவிந்தா....!?



"பொல்கொட ஏரி சடலங்கள் குறித்து உடனடியாக ஆராயப்படும், அவை பற்றி தகவல் தருவோருக்கு 5 லட்சம் ரூபா சன்மானமாக வழங்கப்படும்"

இவ்வாறு 1995 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் அறிவித்திருந்தார்.

ஆனால் மார்ச் 13ம் திகதியன்று முறைப்பாட்டாளரான அரசு தரப்பு சட்டத்தரணி நீதிமன்றத்துக்கு வராத ஒரோ காரணத்துக்காக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இது இன்று பரபரப்பாக பேசப்படும் ஒரு முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

1995 யூன் மாதத்திலிருந்து 90 நாட்களுக்குள் 25க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞகளின் சடலங்கள் பொல்கொட, தியவன்னா, அலவ்வ போன்ற வாவிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்டிருந் தன. அவர்கள் "புல்லர்ஸ்" வீதியிலிருந்த இராணுவ முகாமிலேயே வதை புரியப்பட்டு கொல்லப் பட்டிருந்தது தொடர்பான செய்தி ஏற்கெனவே சரிநிகரில் வெளியாகி இருந்தது தெரிந்ததே.

தமது அரசாங்கத்துக்கு எதிரான பாரிய பிரச்சாரமாகிவிடக் கூடாது என்பதற்காக ஜனாதிபதியால் சொல்லப்பட்ட போலி வாக்குறுதிகள் தான் மேற் சொன்னவை. இதனை விசாரணை செய்யவென இங்கிலாந்தில் க்ளாஸ்கொவ் பல்கலைக் கழகத்திலிருந்து விசேட நிபுணர்களையும் வருவத்திருந்தார்கள். ஆனால் அரசு இன்று எல்லோரும் அதனை மறந்துவிட்டார்கள் என நம்பியதோ என்னவோ வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

இவற்றை நிரூபிக்க சாட்சியமில்லை என கூறுவது கூட சில வேளை ஒரு சட்டபூர்வமான பதிலாக இருக்கக் கூடும். ஆனால் சடலங்கள் அத்தனையும் கிடைத்தன. சில சம்பவங்களுக்கான நேரில் கண்ட சாட்சிகளும் உள்ளனர் முறைப்பாடுகளும் உண்டு. ஏற்கெனவே கொழும்பு மாவட்ட நீதவானான எம்.எச்.எம்.கபுர் என்பவர் முன்னிலையில் விசேட அதிரடிப்படையினைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் இக்கொலைகளில் தாம் சம்பந்தப்பட்டிருப்பதாக வாக்கு மூலம் வேறு கொடுத்திருந்தார்கள். இப்படிப் பட்ட ஒரு வழக்கை அரசுதரப்பு சட்டத்தரணி வராத காரணத்துக்காக தள்ளுபடி செய்திருப்பது அசுரத்தனமானதும், முன்னொரு போதும் நடந்திராததுமான நடவடிக்கையாகும். அரசு வழக்கை வாபஸ் வாங்க விரும்பினால் கூட, அதை அரச வழக்கறிஞர் மூலமாக நீதிபதியிடம்

→20

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# விடுதலைப் புலிகளுடன் அரசும் முஸ்லிம்களும் பேசுவது காலத்தின் தேவை!

-அலிசாகிர் மௌலானா (ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்)

*வடக்கு கிழக்கு பிரதேசத்தில் வாழும் முக்கிய சமூகங்களான தமிழர்களையும் முஸ்லிம்களையும் சரியான புரிந்துணர்வுகளோடும் கொள்கைகளோடும் வேலைத்திட்டங்களோடும் இணைக்கும் தமிழ் மொழிக்கட்சிகள் தனித்த.தமிழ் கட்சிகளை விடவோ அல்லது தனி முஸ்லிம் கட்சிகளை விடவோ அதிகம் பயனளிக்கும்.*

*எனது வெற்றிக்கு காரணமான தமிழ் முஸ்லிம் மக்களின் வாழ்க்கையை நெருப்பில் வீசி எறிவதற்கு நான் என்றும் தயாரில்லை. அவர்களின் கனவுகளுக்கு உயிர் கொடுக்க ஆசைப்படுகிறேன். அதற்காக உழைக்கிறேன் என்கிறார் மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் செயற்குழு அங்கத்துவருமான சையத் அலிசாஹிர் மௌலானா.*

**சந்திப்பு- எம். பௌசர்.**



***முதன் முதலாக 1990க்குப்பின் நேரடியாக விடுதலைப்புலிகளுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே அண்மையில் நடந்து முடிந்த சந்திப்பில் - நீங்கள் அதிகம் பங்களிப் பாற்றியதாக அறிகிறோம். இச் சந்திப்புக் குறித்து சொல்லுங்கள்?***

எனது பங்களிப்பைப் பொறுத்தவரையில் மிகவும் இக்கட்டான ஒரு நேரத்தில்தான் இச்சந்திப்பை ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தது. ஆனால் ஓட்டமாவடி சம்பவம் நடப்பதற்கு முன்பே நாங்கள் ஏதோ ஒரு வகையில் விடுதலைப் புலிகளுடன் சந்தித்து பேசுவதற்கான தேவையிருந்தது. முஸ்லிம், தமிழ மக்களின் தொழில்சார் நடவடிககைகள் போக்குவரத்து ஜீவனோபாய் வாழ்வு என்பன ஒருவரில் ஒருவர் இரண்டறக்கலந்து இருப்பதனால் அம்மக்களினது வாழ்வின் சுமூக நிலையை உறுதிப்படுத்துவதற்காக இச்சந்திப்பு அவசியமாகவிருந்தது.

இச்சந்திப்பு ஏற்பாடு நடப்பதற்கு முன்பே ஓட்டமாவடி முஸ்லிம் மீனவர்களின் வள்ளங்கள் புலிகளால் எடுத்துச்செல்லப்பட்டபோது அதனை மீளப்பெற்றுக்கொள்வதற்காக அரச படைகளின் உதவியை பெற்றுக்கொள்ள முடியாதசூழலில் - ஓட்டமாவடி முஸ்லிம்களின் வேண்டுகோளின் பேரில் நான் பாதுகாப்பு படையினரிடம் கேட்டேன். உங்களால் மீட்டுத் தர முடியவில்லை. அவர்களின் வள்ளங்களை அவர்கள் புலிகளுடன் பேசிமீட்டுக்கொள்வதில் நீங்கள் தலையிடக்கூடாது எனச் சொல்லியிருந்தேன். தமிழ் மக்களும் எனது தமிழ் நண்பர்களும் சொன்னார்கள், நீங்கள் விடுதலைப் புலிகளுடன் பேசுங்கள் என்று. ஆகவே இச்சந்திப்பின் அவசியம் அதிகம் உணரப்பட்டிருந்த நேரத்தில் தான் ஓட்டமாவடிச் சம்பவம் நடந்தது. இச்சம்பவம் நடந்தவுடன் ஓட்டமாவடி மீது ஷெல் தாக்குதல் நடாத்தப் பட்டது. இராணுவம் சொன்னது இது புலிகளின் வேலைதான் என்று நாங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்ட போது புலிகள் அதனை மறுத்தார்கள். 3 அப்பாவி தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டது ஒரு பொலிஸ் நிலையத்திற்கு அருகில்; இச்சம்பவங்களால் நாங்கள் ஒரு முடிவிற்கு வரமுடியாது திகைத்து நின்றோம் - விடுதலைப் புலிகளுடன் நேசக்கரம் நீட்டும் வேளையில் இச்சம்பவம் நடந்தது பல கேள்விகளை எழுப்பியது - இதே நேரத்தில் தான் நான் பி.பி.சிக்கு பேட்டி அளித்தேன். அப்பேட்டியில் அன்றைய ஓட்ட மாவடி கிராமத்தின் உண்மை நிலையை உலகுக்கு பகிரங்கப்படுத்தினேன்.

எனது பி.பி.சி. பேட்டிக்குப் பின் விடுதலைப் புலிகள், இது தொடர்பாக முஸ்லிம் பிரதிநிதிகளுடன் எனது ஏற்பாட்டின் பேரில் தங்களது நிலைப்பாட்டை பேசுவதற்கு தயாராக இருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக எனக்கு அறிவித்தார்கள். கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு ஓட்டமாவடி முஸ்லிம் பிரதிநிதிகளை பேசுவதற்கு அனுப்பி வைத்தோம். - இச்சந்திப்பு முஸ்லிம் தமிழ் மக்களுக்கு உடனடியாகத் தேவைப்பட்டது. அச்சந்திப்பு மிகவும் பயனுள்ள ஒரு எத்தனமாகவே நான் கருதுகிறேன்- அதனால் நான் சந்தோசமடைகிறேன்.

***அச்சந்திப்பில் விடுதலைப்புலிகள் தரப்பில் பேசப்பட்ட விடயங்கள் உங்களை திருப் திப்படுத்துகின்றதா? உதாரணத்திற்கு ஊர்காவல் படை தொடர்பாக?***

சந்திப்பு நடந்ததுதான் இங்கு பிரதான விடயம். அங்கு பேசப்பட்ட விடயங்களுக்கு ஒரு சந்திப்பின் ஊடாக மாத்திரம் உடன் பரிகாரம் காணப்பட்டு விடும் என நம்பவில்லை. நீங்கள் குறிப்பிடும் விடயங்கள் அதிக சிரத்தையுடன் பரிசீலணைக்குட்படுத்தப்பட வேண்டியதே - இது விடுதலைப் புலிகளுடன் முஸ்லிம்கள் தொடர்ந்து பேசுவதன் ஊடாக தீர்க்கப்பட வேண்டியது. பூச்சியத்தில் இருந்துதான் ஆரம்பித்திருக்கிறோம். இனிவரும் காலங்களில் தமிழ் முஸ்லிம் மக்களின் முன்னிருக்கும் சவால்களை எதிர்கொள்ள ஒன்றுபட்டு பேசுவதற்கான முதல் அத்திவாரம் இடப் பட்டிருக்கிறது என்பதே முக்கியமானது.

***முஸ்லிம்களுக்கான தனிக்கட்சிகளின் தோற்றம் பற்றி எப்படிப் பார்க்கிறீர்கள்?***

முஸ்லிம்களுக்கான தனிக்கட்சி உருவாக்கத்தில் முதலாவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசை நோக்கினால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முற்றுமுழுதாக தமிழ் விரோத சிந்தனையாலும், சித்தாந்தங்களிலும் உருவான கட்சி என்பது எனது அபிப்பிராயம். நான் சுயாதீனமாக இருந்த காலத்தில் கூட முஸ்லிம் காங்கிரசை ஆதரிக்கவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் முஸ்லிம்களின் நலனை விட அவரது சொந்த நலன்களிலேயே அதிக அக்கறையுடையவர் என்று கூறப்பட்டது. அதனை இன்று எவரும் சரி என்பர்.

1991 மார்ச்சில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலின் போது நான் ஏறாவூர் பிரதேச சபை தேர்தலில் சுயேட்சைக்குழு தலைவராக போட்டியிட்டேன். அங்கு தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃப் , ''ஏறாவூர் மக்கள் எனக்கு வாக்களித்தால் ஏறாவூரில் உள்ள பள்ளிவாசல்களில் பாங்கொலிக்குப் பதிலாக மணி அடிக்கப்படும் என்றும் பள்ளிவாசல்கள் எல்லாம் தேவாலயங்களாக மாறிவிடும் என்று பகிரங்கமாகப் பிரச்சாரம் செய்தார். அவ்வளவு மட்டகரமான பிரச்சாரத்தில் ஈடுபட்ட அஷ்ரஃப்பையும் அவரது கட்சியையும் நான் முஸ்லிம் நலன்களுக்கான கட்சியாக எப்படிப் பார்ப்பது? அப்படி நான் நினைக்கவே விரும்புவதில்லை.

மேலும், முஸ்லிம் காங்கிரஸின் தோற்றத்திற்கு காரணமாக இருந்த பல ஸ்தாபக உறுப்பினர்கள் இன்று அக்கட்சியில் இல்லை. கட்சி கொள்கைகளை தனக்கான மந்திரிப்பதவிக்காக விற்க முனைவதாக அன்றே குற்றம் சாட்டி பிரிந்து போனதும் நாம் அறிந்ததே. குறிப்பாக, முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளராகவும், இரண்டாவது தலைவராகவும் இருந்த சட்டத்தரணி சேகு இஸ்ஸத்தீன் இன்று முஸ்லிம் காங்கிரஸிற்கு எதிராகவும் அதற்கு மாற்றுக் கட்சியாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சியை ஆரம்பித்திருக்கிறார். அவரது பத்திரிகை அறிக்கைகளையும், சிந்தனைகளையும் அறியும் போது முஸ்லிம் கட்சியின் தேவையும் அவசியமாகப் படுகின்றது.

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியை எம்.ஐ.எம்.முஹியத்தீன் எதற்காக ஆரம்பித்தார் என்பதற்கு இன்று விடை கிடைத்திருக்கிறது. அவர் இன்று முஸ்லிம் காங்கிரஸின் பிடியில் உறங்கிப்போய் இருக்கிறார்.

என்னைப் பொறுத்தவரையில் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் வாழும் முக்கிய சமூகங்களான தமிழர்களையும் முஸ்லிம் களையும் சரியான புரிந்துணர்வுகளோடும் கொள்கைகளோடும் வேலைத்திட்டங்களோடும் இணைக்கும் தமிழ் மொழிக்கட்சிகள் தனித் தமிழ் கட்சிகளை விடவோ அல்லது தனி முஸ்லிம் கட்சிகளை விடவோ அதிகம் பயனளிக்கும் என்றே நம்புகின்றேன்.

***வடக்கு கிழக்கு தமிழ் மொழிப் பிரதேசங்களில் பெரும்பான்மைக் கட்சிகள் வீழ்ச்சி கண்டு வருவதன் யதார்த்தத்தின் ஊடே தங்கள் ஐ.தே.கட்சி அங்கத்துவத்தின் எதிர்காலம் குறித்து எப்படிப் பார்க்கிறீர்கள்?***

வடக்கு கிழக்கை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது ஐ.தே.க. வீழ்ச்சி அடைந்து வருவதாக எனக்குத் தெரியவில்லை. கிழக்கைப் பொறுத் தவரை அதிக பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஐ.தே.க. தான் ஆறு உறுப்பினர்கள்" ஐ.தே.க. யை பிரநிதித்துவப்படுத்து கிறார்கள். வன்னியில் ஐ.தே.க.வுக்கு ஒரு பிரதிநிதித்துவம் உண்டு. யாழில் ஈ.பி.டி.பி. ஐ.தே.க. யின் ஆதரவுடன் தான் கடந்த தேர்தலில் போட்டியிட்டு வென்றது. ஆனால் வடகிழக்கில் தமிழ் மொழிப் பிராந்தியங்கள் உருவாகுமானால் இந்நிலை மாறலாம்.

வடக்கு - கிழக்குக்கென தனியான தமிழ் மொழிப்பிராந்தியங்கள் அமைக்கப்பட்டதும் முழு இலங்கையையும் ஆழப்போவது ஐ.தே.க. இன்றேல் ஸ்ரீ.ல.சு.க. தான். அந்தச் சூழ்நிலையில் வடக்கு கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழ் மொழிச் சமூகங்களின் நலவுரிமைகளைக் கண்காணிக்க நம்மவர்களுக்கு சரியான மாற்றுத்திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைக்கு வரும்வரை ஐ.தே.க.வை வீழ்ச்சியடையச் செய்வது நன்மை தரும் என்று நான் நினைக்கவில்லை.

***முஸ்லிம் காங்கிரஸின் கீழ் அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் பெருமளவு அணிதிரண்டிருந்த காலப்பகுதியில் தனியாக 1994 இல் பிரதேச சபைத் தேர்தலிலும் பின்னர் நடந்த பாராளுமன்ற தேர்தலிலும் வெற்றி பெற்ற நீங்கள், வெற்றியை எப்படிப் பார்த்தீர்கள்?***

இதனைத் தமிழ் முஸ்லிம்களின் ஒற்றுமையின் வெற்றியாகவே நான் பார்த்தேன். இந்த வெற்றிக்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவது முட்டக்களப்பு மாவட்ட தமிழ் முஸ்லிம் மக்கள் என்மீது பெருத்த நம்பிக்கை வைத்தார்கள்.

ஏறாவூர் பிரதேச சபைத் தேர்தலில் நான் போட்டியிட்ட போது என்னைத் தோற்கடிப்பதற்காக முஸ்லிம் காங்கிரசும், கேள்விக்கு உட்படுத்த முடியாத அதன் தலைவரும் எவ்வளவு கீழ்த்தரமாக இனவாத பிரச்சாரங்களை கட்டவிழ்த்து விட்டும், அப்பிரதேச சபைத் தேர்தலில் ஏறாவூர் முஸ்லிம்களினதும், தமிழர்களினதும் அதிக பட்ச வாக்குகள் எனக்களிக்கப்பட்டு நான் வெற்றியடைந்தேன்.

பாராளுமன்றத் தேர்தலில் முஸ்லிம்கள் எனக்களித்த வாக்குகளுக்குச் சமமாக தமிழ் மக்களும் ஏனையவர்களும் வாக்களித்திருந்தனர். அவர்கள் என்மீது வைத்த நம்பிக்கைக்கும் அன்புக்கும் நான் ஒருபோதும் துரோகம் செய்ய மாட்டேன். மந்திரிப் பதவிகளுக்காக எனது சமூகத்தையோ என்மீது நம்பிக்கை வைத்துள்ள ஏனைய சமூகத்தவர்களையோ நான் காட்டிக் கொடுக்க மாட்டேன். இனவாதத்தை நான் வெறுக்கிறேன், - இனவாதத்தை மூலதனமாக்கி அரசியல் நடத்துவதை விட நல்ல சமூகங்களின் ஐக்கியத்தையும் பரஸ்பர நம்பிக்கையையும் ஏற்படுத்த மனிதத் தொண்டு செய்வதே எனது ஆத்ம சுகம் பெற வழி என நம்புபவன் நான்.

எனது வெற்றிக்கு காரணமான தமிழ் முஸ்லிம் மக்களின் வாழ்க்கையை நெருப்பில் வீசி எறிவதற்கு நான் என்றும் தயாரில்லை. அவர்களின் கனவுகளுக்கு உயிர் கொடுக்க ஆசைப்படுகிறேன். அதற்காக உழைக்கிறேன்.

***விடுதலைப் புலிகளுடன் பேசாத சமாதானம் நிரந்தரமற்றது என நீங்கள் அடிக்கடி உரத்துச் சொல்லி வருகிறீர்கள். நிரந்தர சமாதானத் திற்கு தடையாக இருப்பவர்கள் புலிகளா அல்லது அரசாங்கமா? அல்லது இருதரப் பினருமா?***

நிரந்தர சமாதானத்தை உறுதிப்படுத்தக்கூடிய நியாயமான தீர்வொன்றிற்கு விடுதலைப் புலிகள் ஒருபோதும் தயாராக இருக்கமாட்டார்கள் என்பதே நான் அறிந்ததெல்லாம். விடுதலைப் புலிகளை ஒதுக்கி ஓரம்கட்டிவிட்டு ஒரு நிரந்தர சமாதானத்தை எய்த முடியுமென்று போடப்படும் தப்புக்கணக்கில் இருந்து நியாயமான விடை கிடைக்கும் என நான் நம்பவில்லை.

அன்று மாகாண சபை உருவாக்கத்தையே ஆக்ரோசத்தோடு எதிர்த்த இன்றைய அரசாங்கத்தின் முக்கிய பங்காளிகள் படி இறங்கி வந்து அதிகாரப் பரவலாக்கத்திற்கு அர்த்தம் கொடுக்க வேண்டும் என விதந்துரைத்து வருவதற்கு விடுதலைப் புலிகளின் இருப்புத்தான் காரணம் என்பதை யார் தான் மறுக்கப்போகிறார்கள்.

விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்க கங்கணம் கட்டிக் கொண்டு களத்தில் இறங்கியுள்ள இன்றைய அரசாங்கம் அம்முயற்சியில் வெற்றி பெறுமானால் அதிகாரப் பரவலாக்கத்திற்கு பதிலாக அராஜகப் பரவலாக்கத்தைத் தான் செய்யும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. விடுதலைப் புலிகள் கொச்சைப்படுத்தப்பட்ட சரணாகதிகளைத்தான் விரும்பவில்லை. இதனைப் புரிந்து கொண்டால் நிரந்தர சமாதானத்திற்கு வானம் எல்லையாக இருக்க முடியாது! கைக்கெட்டும் தூரத்தில் தான் அது இருக்கிறது.

***சந்திரிகா அம்மையாரின் தீர்வுத்திட்டத்திற்கு உங்கள் கட்சி ஆதரவு தெரிவிக்கவில்லை என எழுப்பப்படும் குற்றச்சாட்டு குறித்து...?***

சந்திரிகா அம்மையாரின் தீர்வுத்திட்டம் காலம் கடத்தும் ஏற்பாட்டில் செய்யப்பட்ட ஒன்றாகும். பரவலாக்கப்படும் அதிகாரங்களை பற்றி மட்டும் கூறிவிட்டு அந்த அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டிய வட - கிழக்கு அலகுகளைப் பற்றி மௌனம் சாதித்துள்ள தீர்வுத்திட்டம் இலாகா இல்லாத அமைச்சைப் போன்றதாகும் அலகைப் பற்றி எதையுமே குறிப்பிட விரும்பாமல் தமிழ் முஸ்லிம் கட்சிகளை பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு வெளியே சென்று பேசி முடிவெடுக்கச் சொன்னதும்.

→8

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



கிளிநொச்சியிலும், அதனைச் சூழவுள்ள இடங்களிலும் கடும் உணவுத் தட்டுப்பாடு நிலவுவதால் பாடசாலை மாணவர்கள்20-40பேர் மயக்கமடைந்தும், நோய் வாய்ப்பட்டும் உள்ளனரெனவும், கல்வித் திணைக்களம் இலவச சீருடைகளையும், பாடப் புத்தகங்களையும் மாணவர்களுக்கு வழங்கவில்லையெனவும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

1997 ஜனவரி 9,10ம்திகதிகளில் கிளிநொச்சிக் குடிமனைப் பகுதிகளின் மீது பொம்பர்களும், ஹெலிகொப்ரர்களும் வான் வழி எறிகணைத் தாக்குதல்களை நடத்தின.

1997 ஜனவரி 9ம்திகதி விஸ்வமடு மீது நடத்தப்பட்ட பாரபட்சமற்ற குண்டுத் தாக்குதலினால் பின்வரும் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.




மதுமதி திருச்செல்வம் (40)
சரவணை குறிஞ்சி(50)
சரவணை இரஞ்சித்

பின்வருவோர் காயமடைந்தனர்.

திருச்செல்வம் (40)
நிர்மலா(30)
இராஜேந்திரமதி (17)
இராஜேந்திரராஜா (40)
மார்க்கண்டு பாஸ்கரன் (30)
கந்தையா ஜெயக்குமார் (29)
ஜெயா ஜெயக்குமார் (25)
கந்தையா தங்கராஜா (55)
மாலா தங்கராஜா (12)
வேலன் சரவணன் (52)
சரவணன் இராமச்சந்திரன் (18)
சரவணன் இராமகிருஷ்ணன் (13)

இப்பகுதியில் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல் காரணமாக பல வீடுகளும் சேதமாக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு டிஸ்பென்சரியிலும், மல்லாவி டிஸ்பென்சரியிலும் மருந்து இல்லாத காரணத்தால் முறையே 40,50 நோயாளிகள் மரணித்தனர்.

நொச்சிக்குடாக் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற இரு தமிழர்களான அல்போன்ஸ்யோகநாதன் (45), செபஸ்ரியன் (40) ஆகியோர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மன்னார் வைத்தியசாலையில் திரளும் நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்க வைத்தியர்கள் எவருமில்லாதிருப்பதுடன், மருந்துப் பொருட்களுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது.

மன்னார் தென் முனையைச் சேர்ந்த நீலகரன் (25) சுற்றி வளைத்துத் தேடுதல் நடவடிக்கையொன்றின் போது கைது செய்யப்பட்டார். பொலிஸ் நிலையத்தில் வைத்து அவர் வாந்தியெடுக்கத் தொடங்கிப் பின்பு மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது. மர்மமான நிலையில் அவ்விளைஞர் இறந்துள்ளதால் மேலதிக விசாரணைகளை நடத்துமாறு இது தொடர்பாக விசாரித்த நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தால் யாழ்ப்பாணத்துக்கு முகவரியிடப்பட்ட 130 தபால் பைகள் ஐந்து வாரங்களுக்கும் மேலாகத் திருகோணமலையில் கிடக்கின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்கெனவே காணாமற் போனதாகப் புகாரிடப்பட்ட 64 பேருக்கு மேலதிகமாக மேலும் 27 பேர் காணாமற் போயுள்ளதாக பா.உ. ஜோசப்பரராஜசிங்கம் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

26.12.1996 அன்று வவுனியாவுக்குத் தனது குடும்பத்துடன் அகதியாக வந்து சேர்ந்த கர்ப்பிணிப் பெண்ணான விஜயகுமாரி கந்தசாமி (33) ஒரு மரத்தடியின் கீழேயே இரவைக் கழிக்க வேண்டியதாயிற்று. அங்கு அவர் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தார். ஆனால் மழைக் குளிர் காரணமாகத் தாயும் சேயும் மரணித்தார்கள்.

யாழ்ப்பாணம், மல்லாகத்தைச் சேர்ந்த எஸ். பாலச்சந்திரன் என்பவர் 1983ம் ஆண்டில் ஜேர்மனி சென்று அந்நாட்டின் ஒரு பிரஜையானார். அவர் அண்மையில் கொழும்புக்கு வந்திருந்த போது பொலிசாரினால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஐந்து வருடங்களாக எதுவித குற்றச்சாட்டும் இல்லாத பீ. இராஜேந்திரன், எஸ். சுரேஷ்குமார், கே. அன்டன், ஏ. மகேந்திரன், வீ.சௌந்தரராஜன் ஆகியோர் களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அண்மையில் அவர்கள் உண்ணாவிரதமொன்றை மேற்கொண்டுள்ளனர்.

திருகோணமலை மரக்கறிச் சந்தைக் குத்தகையை வர்த்தகரொருவருக்கு வழங்கியதை - அக்குத்தகைக்காரர் தமிழர் என்ற ஒரே காரணத்துக்காக- இரத்துச் செய்யுமாறு திருகோணமலை மாநகர சபை முதல்வருக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மணப்பெண்ணான யோகேஸ்வரியும் (25), அவரது தாயாரான செல்லம்மா (60), நிசாமலர் (42), புரூஸ் ஸ்ரீபன் (14) ஆகியோர் திருமணத்துக்காகச் சென்று கொண்டிருந்தபோது கொழும்பிலுள்ள கொம்பனித்தெருவில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் அங்கவீனர்களின் புனருத்தாரணப் பணிகளுக்காக நிதி சேகரித்துக்கொண்டிருந்த ஒன்பது பேர் கைது செய்யப்பட்டு ஏழு நாட்கள் தடுத்து வைக்கப்பட்டனர்.

மட்டக்களப்பில் கைது செய்யப்பட்டு எதுவித குற்றச் சாட்டும் சுமத்தப்படாமல் மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 15 தமிழ் இளைஞர்கள் தமது விடுதலை கோரி 20.01.1997 முதல் உண்ணா விரதமொன்றை மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பு மேல் நீதிமன்ற பல் கூட்டுத்தொகுதியில் தமிழர் ஒருவருக்கெதிரான விசாரணையின் போது அப்பாவி நபர்கள் துன்புறுத்தப்படும் விதத்தில் அவசரகாலச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி ஏ.ஆர்.பீ.அமரசிங்ஹ கருத்துத் தெரிவித்துள்ளார்.

20.01.1997 அன்று ஏறாவூரைச் சேர்ந்த ஜோன் இருதயநாதன் (34) அப்பாவித் தமிழரொருவர் ஸ்ரீ லங்கா இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மட்டக்களப்புக்குத் தென் திசையில் ஏழு மைல் தொலைவிலுள்ள தமிழ்க் கிராமமான புதுக்குடியிருப்பில் படையினரால் எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்படும் போதெல்லாம் அக்கிராமத்தவர்கள் தமது வீடுகளை விட்டு ஓடி நிலத்தில் விழுந்து படுத்திருப்பது ஒரு வழக்கமான செய்கையாகும். அப்படியான துரதிருஷ்டவசமான ஓர் நாளில் மேனகா அம்பலவாணரும் (21), அவரது மகளான துர்ஷாயினியும் (8) காயமடைந்தனர்.

20.01.1997 அன்று கிரானைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான எஸ்.கெங்கேஸ்வரன் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார். ஏனைய இரு முதியவர்களும் கூடவே காயமடைந்தனர்.

24.01.1997 அன்று வாழைச்சேனை இந்துக்கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் விளையாட்டுப் போட்டியொன்றில் பங்கெடுத்துக் கொண்டிருந்தனர். கடும் எறிகணைத் தாக்குதல்கள் நடத்த ஆரம்பிக்கப்பட்டதும் பிரதம விருந்தினர் உட்பட அனைவரும் நிலத்தில் விழுந்து எறிகணைத் தாக்குதல் நிறுத்தப்படும் வரை மிக நீண்ட நேரம் படுத்திருக்க வேண்டி ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்துக்குச் செல்லக்காத்திருக்கும் பயணிகளுக்காக ஐயாயிரம் பேரைக் கொள்ளக் கூடிய தற்காலிக இளைப்பாறும் மண்டபமொன்றை அமைக்குமாறு வவுனியா அரசாங்க அதிபர் அரசிடம் கோரியுள்ளார்.

வாகரையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதிகள் வழங்கி வரும் ஐ.சி.ஆர்.சி., எம்.எஸ்.எவ். போன்ற நிறுவனங்கள் இராணுவத்தின் போக்குவரத்துக் கெடுபிடிகளால் இம் மனிதாபிமானப் பணியைத் தொடர முடியாதுள்ளதாக முறையிட்டுள்ளன.

வாழைச்சேனை வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டவர்களில் 49 பேர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களால் கொல்லப்பட்டவர்கள் என வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையின் 1996ம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்குடாவுக்கும், வாழைச்சேனைக்கும் இடையேயுள்ள எல்லா வேலிகளையும், எல்லாச் சுவர்களையும் உடனடியாக அகற்றுமாறு இராணுவம் வற்புறுத்திக் கோரியுள்ளது.

இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலுக்கு அண்மையில் வாழைச்சேனை பிரதேசச் செயலகமே இலக்காகியது. உள்ளே வேலை செய்து கொண்டிருந்த ஊழியர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர்.

கிழக்கு மாகாணத்தின் கல்லாறைச் சேர்ந்த கருப்பர் நவநீதன் (30), குணசீலன் சதிஸ்குமார் (28) தமது உறவினர்களிடம் செல்லும் வழியில் நத்தோட்டை பஸ் நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

06.01.1997 அன்று இராணுவம் சுற்றிவளைத்துத் தேடுதல் நடவடிக்கையொன்றை வந்தாறு மூலை, கிரான், சந்திவெளி ஆகிய பகுதிகளில் மேற்கொண்டது. அப்பாவிப் பொது மக்களோடு ஆசிரியர்களும், மாணவர்களும் தடுத்துவைக்கப்பட்டனர்.

வாழைச்சேனைப் பிரிவைச் சேர்ந்த தெய்யவெட்டுவான் கிராமத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் ஒரு தாயும் மகளும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர்.

மண்டூரில் ஓட்டுத் தொழிற்சாலைக்கு அருகாமையில் இராணுவ முகாமொன்று உள்ளது. இம்முகாமைச் சேர்ந்த பந்துல கமகே எனப்படும் சிங்களச் சிப்பாய் ஒருவன் தமிழ்ப் பெண் ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினான்.

வாகரைப் பகுதி மீதான பொதுப் போக்குவரத்துக் கெடுபிடியால் பாவனைப் பொருட்களுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது. அத்துடன் மருத்துவ வசதிகள் எதுவுமே இல்லை.

மட்டக்களப்பு சந்திவெளி திகிலிவட்டைக் கிராமத்தில் 06.01.1997 அன்று 6 பிள்ளைகளின் தாயான எஸ். பொன்னம்மா (40) ஆற்றங்கரையின் எதிர்புறமாக நின்று கொண்டிருக்கையில் இராணுவத்தால் சுடப்பட்டதால் அவர் ஆற்றினுள் வீழ்ந்து உடனடியாக மரணமானார்.

வந்தாறு மூலையின் கீழுள்ள களுவங்கேணிப் பகுதியிலுள்ள பாலச்சோலையில் 09.01.1997 அன்று சுற்றி வளைத்துத் தேடுதல் நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டது. கைது செய்யப்பட்டவர்களில் 5 பெண்களும், 3 ஆண்களும் தடுத்து வைக்கப்பட்டனர். அதில் நான்கு பேர் காணாமற் போயுள்ளனர். வந்தாறு மூலை, சந்திவெளி ஆகிய பிரதேசங்களில் 06, 07. 01.1997 திகதிகளில் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதில் அநேகமானோர் விடுவிக்கப்படவில்லை. அவர்கள் தடுப்பு முகாம்களில் இருப்பதாக அறியப்படுகிறது. 06.01.1997 அன்று வீதியூடாக நடந்து சென்று கொண்டிருக்கையில் சின்னதம்பி சின்ன



ராசா(22), சின்னதம்பி ஞானசேகரம்(18) கைது செய்யப்பட்டு இருவரும் விடுவிக்கப்படவில்லை. கோரிக்கை விடுத்த போது இவ்விளைஞர்களைத் தாம் கைது செய்யவில்லை என இராணுவம் கூறுகிறது. இதைப் போலவே மன நோயாளியான தெய்வேந்திர ராஜா (15) நாசிவன் தீவில் வைத்து இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் பற்றி இதுவரை தகவல் எதுவும் இல்லை.

இப்பகுதிகளில் எவராவது ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டால் ஒவ்வொரு முறையும் பற்றுச்சீட்டொன்றை வழங்க வேண்டும் என்ற விதி நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இவ்விடயம் தொடர்பாக பல்வேறு தரப்பட்ட அமைப்புகளும், அரசியல்வாதிகளும் விடுத்த கோரிக்கைகள் யாவுமே ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் அலட்சியம் செய்யப்பட்டுள்ளது.

24.01.1997 அன்றிரவு ஏறாவூரிலுள்ள தமிழ்க் கிராமம் நோக்கிப் பாரிய எறிகணைத்தாக்குதல் நடத்தப்பட்டது. செல்வி சபாபதி மேகநாதன் மற்றும் காயமடைந்த ஏனையோருக்கும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

19.01.1997 அன்று கல்குடாவைச் சேர்ந்த மாட்டின் பெரேரா இலிங்கராசா (67), சந்திரன் சசிகரன் (22) ஆகியோர் இராணுவத்தினரின் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடு காரணமாகக் காயமடைந்தனர். படையினரால் பத்து வீடுகளும் சேதமாக்கப்பட்டன.

18.01.1997 அன்று வாழைச்சேனை விநாயகபுரம் கிராமத்தில் தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த ஒன்றரை மாதக் குழந்தையான பிரேமா சிவநாதன் எறிகணைத் தாக்குலொன்றினால் கொல்லப்பட்டது.

02.01.1997 அன்று மட்டக்களப்புப் பாலத்திலுள்ள பஸ் தரிப்பு நிலையத்தில் பஸ்ஸிற்குக் காத்திருந்த தம்பிராசா இராசலிங்கம் என்பவர் சீருடையின்றி இருந்த படையினரால் கடத்தப்பட்டு இதுவரை காணாமற் போயுள்ளனர்.

வெல்லாவெளிப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட பாரிய எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக கே. பரமேஸ்வரன் (22), எஸ். சீவரெட்ணம் (17), ரி. கோணேச மூர்த்தி (23), எம். கிருபராஜா (16) ஆகியோர் காயமடைந்தனர் செங்கலடி மீதான எறிகணைத்தாக்குதலில் 16 தமிழ் மக்களின் வீடுகள் அழிக்கப்பட்டன.

மண்டூர் அகதி முகாமில் தங்கியிருந்த சாஸ்திரியான அழகையா சாஸ்திரி (60) துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காரணமாக மரணமானார். 1996 டிசம்பர் 25ம்திகதி கிறிஸ்மஸ் தினத்தன்று ஏறாவூரைச் சேர்ந்த நிரஞ்சலா மைக்கல் (6) பூக்கள் பறித்துக்கொண்டிருந்த போது இராணுவத் துப்பாக்கிச் சூட்டினால் கொல்லப்பட்டார்.

22.12.1996 அன்று பி.ப.4மணிக்கு இராசநாயகம் மகாராஜாவின் (17) வீட்டுக்குப் படையினர் வந்து அவரைக் கொண்டு சென்றனர். பின்னர் அவரது இறந்த சடலம் கண்டு பிடிக்கப்பட்டது. தமது இருப்பிலிருந்து தப்பியோடியதால் அவரைச் சுடவேண்டிய ஏற்பட்டதாக விசாரணைகளில் படையினர் தெரிவித்துள்ளனர்.

'I.R.A.N., No.3, February 1997

தமிழில்:
சி.செ.ராஜா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# புதிய தேசியம் பன்முகத்தன்மையுடையது!

வி.கே.எஸ்.பாரதி

சென்ற இதழ் தொடர்ச்சி..

தேசியவாதத்தின் எல்லைகள் (?)


சரிநிகர், தனது தேசியவாதம் தொடர்பான கலந்துரையாடலை வெளிப்படையாக ஆரம்பிக்கும் முன்னரே சரிநிகரின் 49வது இதழில் "தேசியவாதத்தின் எல்லைகள்" என்ற தலைப்பில் ஒரு ஆசிரியர் தலையங்கத்தை எழுதி இருந்தது. அத் தலையங்கம் அடுத்த இதழிலும் தொடர்ந்தது. இத் தலையங்கங்களில் கூறப்பட்ட முரண்பாடான கருத்துக்கள் எனக் கருதுபவற்றை, மீளவும் இங்கு குறிப்பிடவில்லை. மாறாக இதற்குப் பதிலளிக்கும் வகையில், எனது கருத்தை பொதுவாக முதலில் கூறி அதன் பின் தேசியவாதம் தொடர்பான விவாதத்துக்குப் பதிலளிக்க முயற்சிக்கின்றேன்.

இந்த ஆசிரியர் தலையங்கங்கள் ஒன்றைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. நீண்ட காலமாக, மரபார்ந்த மார்க்ஸீயர்கள் எதைக் கூறிக் கொண்டு வந்தனரோ அதையே சரிநிகரும் தயக்கத்துடன் மீண்டும் கூறுகின்றது.


வரலாறு எமக்கு உணர்த்தும் ஒரு உண்மை என்னவெனில், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு அதிலிருந்து முன்னேறிய கோட்பாடுகளை உருவாக்க முனையாமல், தாம் அறிந்த, தம் மீது ஆதிக்கம் செலுத்தும், கோட்பாடுகளிலிருந்து, மக்களின் பிரச்சினைகளைப் பார்க்க முனைபவர்களையும் கருத்துக்களை கூறுபவர்களையும் இயல்பாகவே மக்களிடம் இருந்து அந்நியப்படுத்தி விடுகின்றது. இங்கு ஒன்றை வலியுறுத்தலாம். சமூகத்தில் நிலவும் எந்த ஒடுக்குமுறையும் ஒன்றைவிட ஒன்று குறைந்ததுமல்ல; கூடியதுமல்ல. இந்த அடிப்படையில், தேசிய ஒடுக்குமுறைக்கும் அதற்கேயுரிய முக்கியத்துவம் உண்டு. ஒடுக்குமுறைக்கு உள்ளாவோர் தமது ஒடுக்குமுறை மட்டுமே நியாயமான ஒடுக்குமுறை எனக் கருதி மற்றைய ஒடுக்குமுறைகளை கருத்தில் எடுக்காது தம்மீதான ஒடுக்குமுறையிலிருந்து விடுதலையடைவதுதான். சமூகத்தில் நிலவும் அனைத்து ஒடுக்கு முறைகளிலிருந்தும் மனித குலம் விடுதலையடையும் எனத் தீர்வு கூற முற்படுவது தான் ஆபத்தானது. இது குறுகிய கண்ணோட்டமாகும். கடுமையான விமர்சனத்திற்கு உட்படுத்த வேண்டியது. ஆனால், ஒவ்வொரு ஒடுக்குமுறைக்கும் எதிராக அவ்வொடுக்கு முறைக்குள்ளாவோரால் தீர்வாக முன்வைக்கப்படும், முன்னேறிய கோட்பாடானது, அக் குறிப்பிட்ட ஒடுக்குமுறையிலிருந்துவிடுதலை அடைவதற்கான முழுமையான நியாயமான தீர்வாக அமையலாம். இத் தீர்வுகளை யாரும் விமர்சிக்கலாம், ஆனால் நியாயமற்றது எனக் கூறமுடியாது. சமூகத்தில் யதார்த்தத்தில் பல ஒடுக்குமுறைகள் நிலவிய போதும் குறிப்பிட்ட ஒரு ஒடுக்குமுறை உக்கிரமடையும் போது, அதற்கெதிரான போராட்டமும் தீவிரமடையும் பிரதான அரசியல் நீரோட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கும். இப் பிரதான போராட்டத்தில் தலைமை ஏற்கும் சக்திகள், மற்றைய ஒடுக்குமுறைக்குள்ளானவர்களால் முன்வைக்கப்பட்ட தீர்வுகளை ஏற்றுக் கொண்டு, ஒன்றிணைந்து போராடுவதே மனித குலம் முழுமையும் விடுதலையடைய வழிவகுக்கும்.

இத் தலையங்கத்தில் தேசியப் பிரச்சினைக்கான தீர்வாக மறைமுகமாக முன்வைக்கப்படுவது என்னவென்றால் ஒடுக்கப்படும் தேசம், தனது தேசிய விடுதலைப் போராட்டத்தைக் கைவிடுவதைத்தான். ஏனெனில் இத் தலையங்கத்தில் வரும் கருத்துக்கள் ஒடுக்கப்படும் தேசங்களை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக ஒடுக்கப்படும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து வலுக்கட்டாயமாக இணைத்து வைக்கப்பட்டிருக்கும், அல்லது வலுவிழந்துபோன "இந்திய தேசியம் அல்லது தேசம்" இலங்கை தேசியம் அல்லது தேசம் போன்ற தேசங்களை - தேசியங்களை நியாயப்படுத்தி அங்கீகரித்து ஏற்றுக் கொள்வதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

கூட்டமைப்புகள், பிரதேசக் கூட்டாட்சிகள் போன்றவற்றை யாரும் மறுக்க மாட்டார்கள். அவை வரவேற்கப்பட வேண்டியவை. ஆனால் எந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டது உருவாக்கப்பட வேண்டும் என்பதில் சரியான புரிதலும் தெளிவும் இருக்க வேண்டியது இன்றியமையாதது. வெறும் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் மட்டும் பார்க்கும் போதே, இக் கூட்டமைப்புகள் வரவேற்கக் கூடியவையாக இருக்கின்றன. ஆனால் இவை பெரும்பாலும் அரசாங்கங்களில் வீற்றிருப்பவர்களை மட்டும் திருப்தி செய்வதுடன் தமது செயற்பாடுகளை நிறுத்தி விடுகின்றன. மக்களைத் திருப்தி செய்வதற்குப் பதிலாக மக்களின் விருப்பங்களுக்கு மாறாகவே ஆட்சியில் உள்ளவர்களால் உருவாக்கப்படுகின்றன. ஆனால் சமத்துவமான அடிப்படைகளிலும் சுய விருப்பிலும் ஒன்றிணைந்து அமைக்கப்படும் கூட்டமைப்புகள்,



பயனுள்ளவையாகவும், நியாயமானவையாகவும் உறுதியானவையாகவும் இருக்கும் என நம்பலாம். மக்கள் குழுமங்களுக்கு, தாம் சமத்துவமான, சமதர்மத்துடன் நடத்தப்படுகின்றோம், தாம் சுதந்திரமானவர்கள் என்ற உணர்வுகளே இப்படியான கூட்டமைப்புகள் வெற்றியளிப்பதற்கான அடிப்படைக் காரணிகளாக இருக்க முடியும். தேசிய எழுச்சிகளையும், மீள் எழுச்சிகளையும் வளம் பெற்ற மேலை நாடுகள் தமது நலன் கருதி ஊக்குவிக்கின்றன எனக் கூறுகின்றது இவ் ஆசிரியர் தலையங்கங்கள். மேலை நாடுகள் ஊக்குவிக்கின்றன என்பதற்காக மட்டும் தேசிய விடுதலைப் போராட்டங்கள் தமது நியாயத் தன்மையை இழந்துவிடமாட்டா. வளம்பெற்ற நாடுகள், ஒரு நாட்டின் அரசாங்கத்தை தனது கைப்பாவையாகப் பயன்படுத்தி, இன, நிற, மொழி, கலாசார, மத



அடிப்படைகளில் முரண்பாடுகளை உருவாக்கிவிடலாம். அல்லது ஒரு நாட்டில் உருவாகிய நிலவும், முரண்பாடுகளை தமது நலன்களுக்காகப் பயன்படுத்தலாம். இதனால் அந்நாட்டில் நிலவும் ஒரு மக்கள் குழுமத்தின் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவது தவறாகி விடாது. ஏனெனில், இம் மக்கள் மீதான ஒடுக்குமுறையே அவர்களைப் போராடும்படி நிர்ப்பந்திக்கின்றது. தமது விடுதலைக்காகப் போராட்டத்தில் பங்குபற்றுகின்றார்கள். இதுவே யதார்த்தமான உண்மையாகும். இப் போராட்டத்தை தலைமை தாங்கி மக்களை வழி நடத்திச் செல்லும் தலைமைகள் விடும் தவறுகள் மூலம் எந்தவகையிலும் போராட்டத்தின் நியாயத் தன்மையை மறுத்துவிடவோ பிழையெனக் கூறவோ முடியாது. வளம் பெற்ற நாடுகள், ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களை தம் நலன்களுக்காகப் பயன்படுத்தி பயன்பெறக் கூடாது என்பதில் அக்கறையாக இருக்க வேண்டும். அதற்காகப் போராட்டம் பிழை என்றோ, அல்லது கைவிடவோ கூறுவதல்ல இதற்கு தீர்வு. மாறாக நிலவும் முரண்பாடுகளை தீர்ப்பதற்கும் ஒடுக்குமுறைகளை நீக்குவதற்கான வழிவகைகளைக் கண்டு பிடிப்பதுமே அந்நியத் தலையீடுகளைத் தடுத்து நிறுத்த உதவும். முன்னைய தீர்வுகளை முன்மொழிவதானது, ஆளும் வர்க்கங்களுக்கு துணை போகும் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான ஒரு நிலைப்பாடாகும் என்றால் மிகையல்ல.

ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டம் என்பது ஒடுக்கப்படும் மக்களை அழிவில் இருந்து பாதுகாப்பதும், அம் மக்களின் தேசத்தை ஆக்கிரமிப்பில் இருந்து விடுதலை செய்வதுமே, மாறாக சரிநிகரின் ஆசிரியர் தலையங்கம் கூறுவது போல மற்றைய பிரதேசங்கள், தேசங்கள் மீதான ஆக்கிரமிப்பு போராட்டமல்ல. ஒடுக்கும் அரசும் தேசமும் தான் ஒடுக்கி ஆக்கிரமிப்பு செய்கின்றது என்ற உண்மை வெட்ட வெளிச்சமான யதார்த்தம்.

சமூகங்களில் நிலவும், ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களின் நடைமுறை வரலாற்றில் தலைமைதாங்கிய சக்திகளால் பல தவறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பிற்போக்கான கருத்துக்கள் ஆதிக்கம் செலுத்தியுள்ளன. இவை உண்மை என்பதற்காக, இப் போராட்டங்களை "நாஸிசம்", "பாஸிஸம்" போன்றவற்றுடன் ஒப்பிடுவது எந்தவகையிலும் சரியான நிலைபாடு அல்ல. ஏனனில், நாஸிசம், பாஸிஸம் என்பன அடிப்படையில் இன அழிப்பிலும் பிரதேசங்களின் மீது ஒடுக்குவோரால், அதிகாரத்தில் இருப்பவர்களால் முன்னெடுக்கப்படுவது. தேசிய விடுதலைப்போராட்டங்கள், அதிகார வர்க்கத்தின் ஒடுக்கு முறைகளுக்கு எதிரானது. இவை ஒன்றுக்கொன்று முற்றிலும், எதிரான தளங்களிலிருந்து இயங்குபவை என்பது இலகுவாய் புரியக் கூடிய ஒன்று. ஆனால் சரிநிகரின் ஆசியர் இவ் இரண்டையும் ஒன்று எனக் கூறுகின்றார்.

தேசிய விடுதலைப் போராட்டம் ஒன்று சீரழிவது தேசியவாதக் கோட்பாட்டிலுள்ள பிழையினாலல்ல. மாறாக அப் போராட்டத்தை முன்னெடுக்கும், தலைமையின் வர்க்க குணாம்சப் போக்கினாலும், அதை ஆதிக்கம் செலுத்தும் கருத்துகளாலுமே சீரழியலாம் எனக் கூறுவதே சரியான நிலைப்பாடாக இருக்க முடியும். மானுட விடுதலை என்பது, தேசிய விடுதலைப் போராட்டத்தினால் மட்டும் கிடைக்கக் கூடிய ஒன்றல்ல. ஏனெனில் தேசிய விடுதலைப் போராட்டமானது குறிப்பாக தன் மீதான ஒரு ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடி விடுதலை பெறுவதையே நோக்கமாகக் கொண்டது. ஆனால் போராட்டத்தை முன்னெடுக்கும் தலைமையைப் பொறுத்து எந்த ஒரு குறிப்பிட்ட ஒடுக்கு முறைக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தையும் முழுமையான மானுட விடுதலை என்ற கட்டத்திற்கு முன்னெடுத்துச் செல்ல முடியும் ஏனெனில், சமூகத்தில் நிலவும் சகல ஒடுக்கு முறைகளிலும் இருந்து விடுதலை பெறுவது என்பது மானுட விடுதலையை நோக்கிச் செல்வது தான். தேசியவாதக் கோட்பாடும், ஒரு ஒடுக்கு முறைக்கு எதிரான விடுதலைக் கோட்பாடே. ஆகவே ஒரு போராட்டத்தை தலைமைதாங்கி செல்லும் தலைமையின் போக்கை கருத்துக்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, அப் போராட்டத்தின் கோட்பாட்டின் தன்மையை வரையறை செய்வது நல்லதல்ல. ஏனெனில் ஒரு விடுதலைப் போராட்டத்தின் கோட்பாட்டை வரையறை செய்வதில் அப் போராட்டத்திற்கு காரணமாக இருக்கும் "ஒடுக்குமுறை" என்ற அம்சமே முக்கிய பங்காற்றுகின்றது என்பது கவனிக்க வேண்டிய ஒன்று.

அத் தலையங்கம், தேசியவாதமானது, மற்றவர்களை வெளியார்கள் என்று விரட்டியடிப்பது ஜனநாயகமற்ற இயல்பு, என்று பலவாறு, தேசியவாதக் கோட்பாட்டின் மீது குறை கூறுகின்றது. இது மீண்டும், மீண்டும் கோட்பாட்டையும், போராட்ட தலைமையின் செயற்பாடுகளையும் ஒன்றோடு ஒன்று கலந்து கோட்பாட்டை பிழை கூறும் தன்மையே காணப்படுகின்றது.

எந்தக் கோட்பாடும் வரலாற்றில் மாறாமல் அப்படியே கறாராக இருப்பதில்லை அப்படி இருப்பவை வரலாற்றிலிருந்து மறைந்துவிடும். தன் ஆதிக்கத்தை இழந்துவிடும். அல்லது அவற்றுக்கு எதிரான போராட்டம் பரந்தளவில் முன்னெடுக்கப்படும். ஆகவே கோட்பாடுகள் காலத்துக்கு காலம், அக் கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப, சமூகத்தின் முன்னேறிய பிரிவினரின் பங்களிப்புடன் பரிணாமமடைந்து, முன்னேறுகின்றது. அந்த வகையில், வரலாற்றில், ஆரம்ப காலங்களில் இருந்து தோன்றி வந்த தேசியவாதக் கோட்பாடு தன்னளவில் சில பல குறைபாடுகளை, கொண்டிருப்பது தவிர்க்க முடியாததல்ல. அக் குறைபாடுகளை இனங்கண்டு, நீக்கி தேசியவாதத்தை மிகவும் முன்னேறிய கோட்பாடாக தேசிய ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை பெறுவதற்கான சிறந்த கோட்பாடாக உருவாக்கி வளர்த்தெடுப்பதே மானுட விடுத்லையில் அக்கறையுடையோரின் பணியாக இருக்க முடியும். மானுட விடுதலையை நோக்கமாகக் கொண்டு, உருவான ஒவ்வொரு கோட்பாடும், அதாவது பெண்ணியம், மார்க்ஸியம், தேசியம், தலித்தியம் ..... எதுவாக இருந்தாலும் ஒவ்வொன்றும் தம்மளவில் சில குறைபாடுகளைக் கொண்டுள்ளன. கொண்டிருக்கலாம். அக் குறைபாடுகளை இனங்கண்டு, நீக்கி மேலும் முன்னேற்றகரமான கோட்பாட்டு நிலைக்கு எடுத்துச் செல்வதே நமது பணி. மாறாக முழுக் கோட்பாட்டையுமே, தூக்கி எறிவதல்ல. ஏனெனில், இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஒடுக்குமுறைக்கும் எதிரான, மானுட விடுதலையை வேண்டி நிற்கும் கோட்பாடுகள் என்றால் மிகையல்ல.

உலகத்தில் தோன்றும் எதுவும் பரிசுத்தமானதுமல்ல. புனிதமானதுமல்ல. வாய்மையானதுமல்ல.

மக்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தது போலவே இப்பொழுதும் வாழவேண்டும் என்று அடம்பிடித்ததில்லை. காலத்துக்குக் காலம் ஏற்படும் சமூக, சூழல், சிந்தனை மாற்றங்கள் வளர்ச்சிகளுக்கு ஏற்ப, தாமும், தம்மை இயற்கையோடு இணைந்து முரண்பாடுகளை முடிந்தளவு களைந்து இசைவாக்கமடைந்து முன்னேறியே செல்கின்றனர், அல்லது அதற்கு முயற்சிக்கின்றனர். இல்லையென அடம்பிடித்து நிற்போர், டார்வினின் கருத்துப்படி அழிந்து போவர். அதேபோல, 'தேசியம்" என்பதும் மாற்றற எந்த ஒரு மூலகத்தையும் தன்னுள் கட்டிப்பிடித்து வைத்திருக்கவில்லை. அது தன் மீதான ஒடுக்கு முறைக்கு எதிரான ஒரு கோட்பாடாக மட்டுமே உயிர்வாழ்கின்றது காலத்துக்கும், சூழலுக்கும் ஏற்ப தன்னை "கற்பிதம்" செய்து கொள்கின்றது.

தமிழ் பேசத் தெரியாத ஒரு பெரிய தலைமுறைக்கு இன்றைய தமிழ் தேசியவாதத்தினுள் இடம் கிடைக்குமா என அவ் ஆசிரியர் தலையங்கம் கேட்கின்றது.

இன்றைய தேசியம் மொழியில் மட்டும் தங்கியிருக்கவில்லை. ஒருவர் தமிழ் தேசியத்தினுள் உள்வாங்க தமிழ்மொழி பேசத் தெரிய வேண்டும் என்பது பழைய அளவுகோல் . இன்றைய தமிழ் ஒரு ஒடுக்கப்படும் இனத்தின் குறியீடு. ஒரு ஒடுக்கப்படும் தேசத்தின் குறியீடு. இந்த தேசத்தின் மீதான ஒடுக்கு முறையை யார் உணர்வுபூர்வமாக உணர்கின்றார்களோ, அதற்கு எதிரான போராட்டத்தில் பங்களிக்கின்றார்களோ, அவர்கள் அக் குறிப்பிட்ட தேசியத்தினுள் அடையாளங் காணப்படுவர். ஒரு ஒடுக்கப்படும் தேசியமானது, நிற, மொழி .மத கலாசார அடிப்படைகளைக் கடந்து ஒடுக்கு முறைக்கு எதிரான (போராட்ட) உணர்வுடைய அனைவரையும் உள்வாங்கக் கூடியதே இன்றைய தேசியம்.

இக் கருத்துக்களின் அடிப்படையில், சரிநிகரின் ஆசிரியர் தலையங்கம் குறிப்பிட்ட தேசியவாதத்தின் எல்லைகள் உடைக்கப்பட்டு விட்டதாகவும், இன்றைய தேசியம் பன்முகத் தன்மை உடையது எனவும் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் கருதுகின்றேன்.

இதுவரை அறியப்பட்ட தேசியம் எனக் கூறப்பட்டவைகள் வலுவிழந்து வருகின்றன. இன்றைய தேசியம் புதிய கருத்துக்களை பரிமாணங்களை வேண்டி நிற்கின்றது. இத் தேசியம் தன்னைச் சுற்றியிருக்கும் எல்லைகளை உடைக்கின்றது. புதிய தேசியம் உருவாகின்றது.

www.tamilarangam.net



# மலையகம்: ஒரு புதிய வரலாறு உருவாகிறது!

- வ.ஐ.ச.ஜெயபான்

மலையகத் தமிழ் மக்கள் இன்று உண்மையாகவே வரலாற்றின் திருப்பு முனையில் நிற்கிறார்கள். இனங்களினதும் வர்க்கங்களினதும் வரலாற்றுத்திருப்பு முனைகளில் ஏற்படுகின்ற தலைமைத்துவ நெருக்கடியை இன்று அவர்களும் எதிர்நோக்குகின்றார்கள். அண்மைய உள்ளூராட்சித் தேர்தலில் தொண்டமான் - ஆறுமுகம் தொண்டமான் அவர்களது இ.தொ.கா. தலைமைத்துவத்தினதும், சந்திரசேகரன் அவர்களின் தலைமையிலான மலையக மக்கள் முன்னணியின் தலைமைத்துவத்தினதும் சரிவை நான் இந்த வகையிலேயே இனங்காணுகின்றேன். தொண்டமானின் தலைமைத்துவ வீழ்ச்சியை தொழிற்சங்க மென்ற வகையில் இ.தொ.காவின் வீழ்ச்சியாகக்கொள்ள வேண்டியதில்லை. இ.தொ.கா. தொழிற்சங்கத் தலைமை போட்ட அரசியல் தலைமை வேடம் மட்டுமே கலைந்துள்ளது. புதிய நிலைமைகள் பலமான ஒரு தொழிற்சங்க சம்மேளனத்திற்கு வழிவகுப்பதுடன் ஐக்கிய முன்னணி நடவடிக்கைகளுக்கூடாக முதன் முதலாக மலையகத் தமிழர்களது அரசியல் தலைமை ஒன்று கட்டப்படுவதற்கும் வழிவகுக்கும். இதுகாறும் தொழிற்சங்கத் தலைமையே மலையக அரசியலையும் செய்தது. இந்தப் பொருத்தமற்ற அரசியல் நடவடிக்கையே வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே மலையக தமிழர்களது அரசியல் வீழ்ச்சியடைந்து விட்டது என்ற பேச்சுக்கே இடமில்லை. இது சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. மேலும் இலங்கையின் ஏனைய இனங்களது முக்கியமாக, சிங்கள இனத்து அறிஞர்களும் சமூக சக்திகளும், அரசியல் தலைமைத்துவமும் தொண்டமான் - ஆறுமுகம் தொண்டமான் அவர்களது தலைமைத்துவத்தின் தோல்வியை மலையக மக்களது அரசியல் வரலாற்றின் முடிவு எனப் பிழையாக இனம்காணுகிற ஆபத்தான தவறை இழைப்பவர்களாக இருக்கிறார்கள்.

இத்தகைய தவறு இந்திய - இலங்கை (Indo Sri Lankan Tamil) உறவுகளில் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் இத்தகைய தவறும், இத்தகைய தவறான முடிவின் தொடர்ச்சியாக இடம் பெறக்கூடிய இன ஒடுக்குதல் - இன ஒதுக்குதல் நடவடிக்கைகளும் மலையக இளைஞர்களை வலுக்கட்டாயமாக வன்முறைக்குள் தள்ளி விடும் என்பதையும் முழு இலங்கையையுமே சோமாலியாவாக மாற்றி விடும் என்பதையும் சிங்களப் புத்திஜீவிகளுக்கும் சமூக அரசியல் சக்திகளுக்கும் அறிவுறுத்த வேண்டிய ஒரு கடமை எமக்குள்ளது.

தேர்தல் சமயத்தில் நான் அட்டன் நகரில் இருந்தேன். ஐ.தே.கவுக்கு எதிராக கள்ள வாக்குப் போட்டதாக ஒரு மலையகத் தமிழர் கரிசன் சில்வா என்ற ஐ.தே.க வேட்பாளரினாலும் அவரது காடையர்களாலும் தாக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து ஐ.தே.கவில் தேர்தலுக்கு நின்ற மலையகத் தமிழ் வேட்பாளர்கள் உட்பட எல்லாத் தரப்பு மலையகத் தமிழரும் கும்பலாக கரிசன் சில்வாவுக்கெதிராக போர்க்குணத்துடன் திரண்டு விட்டார்கள். மலையகத் தமிழ் ஐ.தே.க. வேட்பாளர் ஒருவர் இனி, தான் எந்த ஒரு தேசியக் கட்சி சார்பாகவும் தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை என்று சபதம் செய்தாராம். கட்டுமீறிய நிலைமையை உணர்ந்த கரிசன் சில்வா மிகவும் பணிந்து போய் மன்னிப்புக் கேட்டு உடனடியாக சமரசம் செய்து கொண்டதாகத் தெரிகிறது.

உண்மை நிலை இதுதான். இதை விடுத்து இத்தேர்தல் முடிவுகளை ஐ.தே.கவின் வெற்றியாகவோ அல்லது செல்லச்சாமி, புத்திரசிகாமணி போன்றவர்களது வெற்றியாகவோ காண்கிறவர்களும் தவறு இழைக்கிறார்கள்.

மலையக மக்கள் மத்தியில் நடேசையர் அவர்கள் பணியாற்றத் தொடங்கிய நாட்களில் இருந்தே இனத்துவ அடையாள உருவாக்கமும் வெளிப் பாராளுமன்ற நடவடிக்கைகளும் போர்க்குணமும் வெளிப்படத் தொடங்கியிருந்தது. நடேசையருக்குப் பின்னர் வரலாற்றில் தொண்டமான் அவர்கள் முக்கியமான ஒரு தலைமைத்துவ சக்தியாக நெடுங் காலம் இருந்துள்ளார்.

நவீன மலையகத் தமிழர்கள் பற்றிய ஆய்வு ஒருபுறத்தில் பிரிட்டிஷ்காரரின் அரசியல் சீர்திருத்த காலங்களில் இருந்து இன்று வரையிலான இந்திய இலங்கை தமிழர்கள் அனைவரதும் சமூக பொருளாதார இனத்துவ அமைப்பில் உள்ளார்ந்ததும் வெளிவாரியாக ஏனைய இனங்களது உறவு நிலையிலும் ஏற்பட்டு வந்த, வருகிற வளர்ச்சிப் போக்கும் மாறுதல்களும் பற்றிய ஆய்வாகும்.

மலையகத்தைத் தொடர்ச்சியாகவே போர்க்களமாக மாற்றி வந்த இந்த வரலாற்று வளர்ச்சி, தேயிலை ரப்பர் தோட்டங்களிலும் ஈரவலய தென் பகுதி நகரங்களிலும் தொழிலாளர்களாகவும் முதலாளிகளாகவும் பரந்துபட்டிருந்த இலங்கை - இந்திய தமிழர்களில் பெரும்பகுதியினரை தற்காப்புத் தேடி நுவரெலியா மாவட்டம் மையப்பட்ட உயர் நில தேயிலை தோட்டப் பிரதேங்களில் ஒன்று குவித்தது. இந்த வரலாற்றுப் போக்கில் தான் மலையகத் தமிழர்கள் என்ற இனத்துவ அடையாளத்தை இந்திய - இலங்கைத் தமிழர்களது மையப் பகுதியினர் வரித்துக் கொண்டார்கள்.

1958களில் இருந்து 1983 வரை ஏன் என்று தெரியாமலே தொடர்ச்சியாக இனரீதியாக வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு உட்காரக்கூட அனுமதிக்கப்படாமல், வன்முறையாலும் இனவாத அடிப்படையிலான சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தத்தாலும் இந்தியா நோக்கியும் வடகிழக்கு மாகாணம் நோக்கியும் துரத்தப்பட்ட இந்த மக்கள், இனிப்பட முடியா இத்துயரம் என்று 1986களில் மத்திய மலை நாட்டில் நிமிர்ந்தமை அவர்களது வரலாற்றின் திருப்பு முனையாகும். இந்த வரலாற்றின் உச்சக்கட்ட நிகழ்வுகளுக்கு சிங்கள அறிஞர் கலாநிதி கே. டியூடர் சில்வா (யாத்திரை 1987) பின்வருமாறு சாட்சியுரைக்கிறார்.

*''நாட்டின் சிறுபான்மை இனமொன்று ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் ஒன்று குவிதலை, அவர்களது வாழ்க்கைக்கு பொது பயமுறுத்தலொன்று ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், ஏதேனுமொரு கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கையினை மேற்கொள்வதற்கான ஒரு முயற்சி என்ற வகையிலேயே அணுகவேண்டும்''* மேற்படி கட்டுரையில் கலாநிதி டியூடர் சில்வா 1986ன் முற்பகுதியில் சிங்கள பேரினவாதிகளின் தாக்குதல்களை மலையகத் தமிழர்கள் ஒன்றுகூடி முறியடித்த வரலாற்றைப் பின்வருமாறு குறித்துள்ளார்.

*''இந்த நிகழ்வுகளின்போது இப்பிரதேச தமிழரிடையே முன்னொரு போதும் காணப்படாத அளவிற்கு ஒழுங்கமைந்த வன்செயல் வெளிப்பட்டது. கடைகளுக்குத் தீமூட்டல், தோட்ட நிர்வாகிகளையும் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் தாக்குதல் போன்ற சம்பவங்கள் இடம பெற்றன. மேற்குறிப்பிட்ட நிகழ்வுகள் **தன்னிச்சையாக** (அழுத்தம் எனது) ஏற்பட்டன என்பதிலும் அவை நுவரெலியா மாவட்டத்தில் ஒன்று குவிந்துள்ள இந்தியத் தமிழர்களது கூட்டு நடவடிக்கை எனக் கருதலாம்''*

அட்டன் நகர சபை ஐ.தே.க வேட்பாளரான கரிசன் சில்வா தனது வெற்றி முகத்தில் தமிழர் ஒருவர் மீது மேற்கொண்ட காடைத்தனத்துக்கு எதிராக அவரது அரசியல் சகபாடிகள் உட்பட அனைத்துப் பிரிவு மலையகத் தமிழ் இளைஞர்களும் போர்க்குணத்துடன் ஒன்று திரண்ட நிகழ்வை, தொண்டமான் - ஆறுமுகம் தொண்டமான் தலைமையின் வீழ்ச்சியுடன் மலையக தமிழர்களது வரலாறு முடிந்து விட்டதாகக் கருதும் சிங்கள பேரினவாதிகளின் கோட்பாடுகளின் அடிப்படையில்லல, கலாநிதி டியூடர் சில்வா கண்டுரைத்த தற்காப்பு நிலையில் மத்திய மலைநாட்டில் ஒன்று குவிந்துள்ள மலையகத் தமிழர்களது தன்னிச்சையான கூட்டு நடவடிக்கையின் போர்க்குணத்தின் வளர்ச்சிப் போக்கின் அடிப்படையிலேயே இனம் காண முடியும். இதனால் தான் தொண்டமான் - ஆறுமுகம் தொண்டமானின் தலைமைத்துவ வீழ்ச்சியை மலையக தமிழர்களது இந்திய - இலங்கைத் தமிழர்களது தோல்வியாக, சரணாகதியாக அல்லது தேசிய கட்சிகளின் வெற்றியாக பிழையாக இனம் காணுவது மிகவும் ஆபத்தானது என நான் சகலரையும் குறிப்பாக எனது சிங்கள புத்திஜீவி- பத்திரிகையாள நண்பர்களை எச்சரிக்க விரும்புகிறேன்.

இது ஒருங்கிணைந்த இனத்துவடையாளத்தைப் பெற்று வந்த மலையகத் தமிழர்கள் தமது அரசு கட்டிலில் இருந்து தொழிற்சங்கம் என்கிற இராமனின் பாதுகைகளை அகற்றி விட்டதனையும் இனி ஐக்கிய முன்னணி நடவடிக்கைள் ஊடாக புதிய அரசியல் தலைமை என்கிற இராமனை உருவாக்கி அங்கு இருத்தப் போகிறார்கள் என்பதையுமே காட்டுகிறது.

உறும்...

# விடுதலைப்...

டுக்கச் சொன்னதும், ஐ.தே.க.வோடு தமிழ் முஸ்லிம் கட்சிகளே பேசி முடிவெடுக்கச்சொன்னதும் அம்மையாரின் அரசாங்கம் தான்.

எதிர்க்கட்சியின் தலையில் பொழுது விடிய வேண்டும் என்று அரசாங்கம் தந்திரமாகச் செயற்படும் போது ''நனைந்து விட்டுத் தூக்குவதற்கு ஐ.தே.க. மறுக்கிறது'' எனக் குற்றம் சாட்டுவது அரசாங்கத்தின் இயலாமையை வெளிப்படுத்துகின்றது. அதிகாரப் பரவலாக்கத்தை அறிமுகப்படுத்தியதும் வட கிழக்கிற்கு தற்காலிக இணைப்பை நடாத்திக் காட்டியதும் ஐ.தே.க. தான்.

அரசாங்கம் பூரண தீர்வுத்திட்டத்தை தெளிவாக முன்வைத்துவிட்டு ஆதரவு தேடும்போது அந்நேரத்தில் ஐ.தே.க. யின் நிலைப்பாடு தொடர்பாக விமர்சிக்கப்படுவதே உண்மையான பார்வையாக இருக்கும்.

***முஸ்லிம்களுக்கான தனிமாகாணக் கோரிக் கையில் உள்ள நிலைப்பாடு என்ன?***

முஸ்லிம்களது எந்தக்கோரிக்கையும் தமிழர்களது நியாயமான போராட்டத்தை பின் தள்ளுவதாகவோ முறியடிப்பதாகவோ இருக்கக்கூடாது! முஸ்லிம்களுக்கான தனிமாகாணக் கோரிக்கையை முன்வைத்துள்ளவர்கள். அந்த முஸ்லிம் தனிமாகாணத்திற்கான நியாயத்தக்க எல்லைகள் பற்றி இன்றும் ஒரு முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரியவில்லை.

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள சகல முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசங்களையும் இணைத்த நிலையில் ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாகாணத்தையும் தமிழர் பெரும்பான்மை பிரதேசங்கள் இணைந்த வடகிழக்கு பெரும்பான்மை மாகாணத்தையும் அமைப்பதே நிபந்தனையுடனான வடக்கு கிழக்கு இணைப்பு என முஸ்லிம் காங்கிரஸ் சொல்லி வந்தது.

கிழக்கை வடக்கோடு இணைக்கும் போது 33%மாக கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் இணைக்கப்பட்ட வடகிழக்கில் 18%மாக மாற்றப்படுவதனால் அவர்கள் அரசியல் முக்கியத்துவமற்றவர்களாக ஆக்கப் படுவார்கள் என்றும் அதனால் முஸ்லிம்களது அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் அவ்வாறான நிபந்தனையற்ற இணைப்பு பாதகமாய் அமைந்து விடும் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் சொல்லி வந்தது.

இப்போது கிழக்கிலுள்ள முஸ்லிம்களில் சுமார் அரைப்பங்கு முஸ்லிம்களைக்கொண்ட அம்பாறை மாவட்ட முஸ்லிம்களை தனியாகப்பிரித்தெடுத்து அவர்களுக்கு மாத்திரம் ஒரு தென்கிழக்கு மாகாண சபையை அமைக்க வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் ஏதாவது கோரிக்கையை முன்வைத்திருக்குமானால் கிழக்கு மாகாணத்தில் மீதமுள்ள மட்டக்களப்பு திருமலை மாவட்டங்களை மட்டும் வடக்கோடு இணைக்கும் போது அவ்வாறு இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கில் முஸ்லிம்கள் 18% வீதத்தில் இருந்தும் சுமார் 10% மாக மேலும் குறைக்கப்படுவார்களே. அதனால் அவர்கள் மேலும் அரசியல் முக்கியத்துவமற்ற சமூகமாக மாற்றப்படுவார்களே என்ற கேள்விகள் இன்று முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த தென்கிழக்கு மாகாணம் என்ற கோரிக்கையில் இருந்து எழுகிறது.

இச்செய்கையானது என்னைப் பொறுத்தவரை வடகிழக்கில் தமிழ் மொழிச் சமூகத்தில் ஒரு கூறான முஸ்லிம்களை தென்கிழக்கு முஸ்லிம்கள் வடகிழக்கு முஸ்லிம்கள் என இரண்டாகப் பிரித்துவைப்பதைத் தவிர வேறொன்றையும தரப்போவதில்லை.

தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆறு பேரில் இருவர் மாத்திரமே அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள். மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட முஸ்லிம்கள் தெரிவு செய்து அனுப்பிய முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நான்கு பேரும் அம்மக்களுக்கு என்ன பதில் சொல்லப்போகிறார்கள். இந்த நான்கு மாவட்டங்களிலும் இருக்கும் முஸ்லிம்களின் தொகை அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம்களின் தொகையை விட அதிகமானதாகும்.

அம்பாறை மாவட்டத்தில் மாத்திரம் தான் நிலத்தொடர்பான ஓர் அலகை முஸ்லிம்களுக்கு உருவாக்க முடியும் என முஸ்லிம் காங்கிரஸ் கூறுவது உண்மையா? அம்பாறை மாவட்டத்திலுள்ள எட்டு தமிழ் மொழிப் பிரதேச சபைகளில் ஆறு பிரதேச சபைகள் முஸ்லிம் பிரதேச சபைகளாகும். இதில் கருங்கொடித்தீவு, அட்டாளைச்சேனை ஆகிய இருபிரதேச சபைகள் மாத்திரம் தான் நிலத்தொடர்புள்ள பிரதேச சபைகளாகும். இதே போலத்தான் மட்டக்களப்பு, திருகோணமலையிலுள்ள பிரதேச சபைகளும் நிலத்தொடர்பு அற்றதாகவே இருக்கிறது.

ஆகவே இந்த உண்மைகளின் அடிப்படையில் வட-கிழக்கில் வாழுகின்ற தமிழ் முஸ்லிம் சமூகங்களையோ அல்லது எந்தவொரு சமூகத்தையுமோ துண்டாடும் முயற்சிகள் நன்மை விளைவிக்கும் என்று இப்போது நான் நம்பவில்லை.

***பொன்னன்வெளி காணி தொடர்பாக ஐ.தே. கட்சியின் நிலைப்பாடு முஸ்லிம்களுக் கெதிரானதாக இருந்ததே?***

ஐ.தே.கட்சியிலுள்ள சிலரின் நடவடிக்கைகளை ஐ.தே.க. மீது சுமத்த முடியாது. ஐ.தே.கவில் உள்ள சிலர் முஸ்லிம்களுக்கு பொன்னன்வெளி காணிக்குப்பதிலாக காணி வழங்குவதை எதிர்த்தார்கள் என்பதற்காக இந்த அரசாங்கம் மாற்றுக்காணிகள் வழங்குவதை நிறுத்திக் கொண்டது என்று நம்புவதை விட அதனையே சாட்டாக வைத்துக்கொண்டு மாற்றுக்காணிகளை வழங்குவதை நிறுத்திக் கொண்டது என்று எடுத்துக் கொள்வதில் என்ன தவறு இருக்கிறது. இந்த அரசாங்கம் கொண்டு வரும் திட்டங்களையோ சட்டங்களையோ ஐ.தே.கட்சி எதிர்ப்பதற்காக தனது திட்டங்களையும் சட்டங்களையும் நிறுத்தவில்லையே. இந்த விடயத்தில் மாத்திரம் ஏன் பழியைப் போடவேண்டும்.

முஸ்லிம்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்குவதில் அரசாங்கம் உறுதியாக இருந்தால் அஷ்ரஃப் விடயத்தை சீர்குலைக்காமல் உறுதியாக இருந்தால் காணி கிடைத்திருக்கும். பழியை சுமத்துவதற்கு ஆள் அகப்பட்டால் பாவம் செய்பவர்கள் பாடு கொண்டாட்டம் தான். என்னைப் பொறுத்தவரையில் பொன்னன்வெளியில் காணி இழந்த முஸ்லிம்களுக்கு மாற்றுக்காணிகளும் நட்டஈடும் வழங்கப்படல் வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# 'முறிந்த பனை' காலிலிருந்து... 1

# துயரத்தில் முடிந்த நம்பிக்கை!

எவ்வாறாயினும் இலங்கை அரசின் ஏமாற்ற முனையும் கபடத்தனத்தை, அதற்குச் சமதையாய் நின்று சமாளிக்கக்கூடியவர் பிரதமர் இந்திரா காந்தி என்று இலங்கைத் தமிழர்கள் பொதுவாக நம்பினர். ஒக்டோபர் 1984ல் யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் வைத்து இந்திரா காந்தியின் படுகொலை பற்றிய செய்தியைக் கேள்வியுற்ற விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் சில நிமிடங்கள் பேச்சு மூச்சற்ற நிலையில் இருந்ததாகக் கூறப்படுகிறது. வேறு எந்தப் பகுதியை விடவும் யாழ்ப்பாணத்தில் தான் இந்திரா காந்தியின் மறைவுக்கு ஆழ்ந்த துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. அது எப்படித்தானிருந்தாலும் சில நெளிவு சுளிவுகளில் சில மாற்றம் இருந்தாலும் கூட இந்திரா காந்தியின் மறைவுக்குப்



பிறகு இந்தியாவின் கண்ணோட்டத்தில் கணிசமான மாறுபாடு தோன்றியது என்று கருதுவது தவறாகும்.

அவரது மறைவையடுத்து தமிழ்ப் போராளிகளும் விடுதலைக் கூட்டணியும் உள்ளிட்ட தமிழ்த் தலைமையானது ஓரளவு மரியாதைக் குறைவாகவே நடத்தப்பட்டதாக உணரப்பட்டது. இந்தப்போக்கு விடுதலைப் புலிகளுடன் இந்தியா நடந்து கொள்ளும் முறையில் நீண்ட கால நோக்கில் தீவிர எதிர்மறை விளைவுகளைக் கொண்டு வந்து சேர்த்திருக்க வேண்டும்.

1987 ஒக்டோபர் யுத்தத்தின் போது இந்தியா நடந்து கொண்ட விதம் தற்போது இலங்கைத் தமிழர்களின் மத்தியில் பெருங்குழப்பத்தையும், அதிர்ச்சியையும் தோற்றுவித்திருந்தது. இந்தியா மீது இலங்கைத் தமிழர்கள் கொண்ட வேதனையும், அறிவுபூர்வமாக ஏற்பட்ட அதிருப்தியும் அவர்கள் உடல் ரீதியாக அனுபவித்த துன்பங்களைக் காட்டிலும் ஏதோ கொஞ்சம்தான் குறைவானதாக இருந்தது. ஆகாயத்திலிருந்தும் தரைவழியாகவும் இந்தியர்கள் தங்கள் மீது குண்டுமாரி பொழிந்ததை மக்களால் நம்பவே முடியவில்லை. ''இருக்காது, இது தவறுதலாகத்தான் தெரியாத்தனமாய் நடந்திருக்கும். இந்திய இராணுவ வீரர்கள் இலங்கை இராணுவ வீரர்களிலிருந்து வித்தியாசமானவர்கள். அவர்கள் ஒருமுறை இங்கு வந்ததும் நல்ல முறையாக நடந்து கொள்வார்கள்'' என்று தான் மக்கள் கூறிக் கொண்டனர். இந்த நம்பிக்கையுங்கூட துக்ககரமான முறையில் அதிருப்தியில் தான் முடிந்தது. இந்தியத் துருப்புகள் கோபாவேசம் கொண்டிருந்த போது அந்த இடத்திலே இருந்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் நூற்றுக் கணக்கானோர் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர்.

மக்கள் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி ஏன் இவ்வாறு நடந்தது என்று இந்திய இராணுவ அதிகாரிகளைக் கேட்டபோது அவர்களுக்குக் கிடைத்த பதில் இதுதான்:

''இது போர். நாங்கள் முந்நூறு பேரை இழந்திருக்கிறோம். நீங்கள் உயிரோடு இருப்பது பற்றிச் சந்தோஷப்படுங்கள். இனி எதிர்காலத்தைப்பற்றி யோசியுங்கள்''

''எங்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக இந்தியா தனது படைகளை அனுப்பியதாகக் கூறியது. ஆனால் இப்பொழுதோ இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளால் எங்களின் குழந்தைகளை, தந்தையரை, தாய்மாரை இழந்து நிற்கிறோம். எங்கள் வீடுகளையும் பொருட்களையும் இழந்திருக்கிறோம்'' என்று மக்கள் கூறியபோது, ''இது போன்ற சம்பவங்கள் போரில் சகஜம். எங்களால் செய்யக்கூடியது எதுவுமில்லை'' என்று அவர்களுக்கு பதில் கிடைத்தது. இந்தியத் தலையீட்டினால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி உலகம் என்ன எதிர் பார்த்துக் கொண்டிருந்ததோ அதற்கு முற்றிலும் நேர்மாறாகவே எல்லாம் நடந்துகொண்டிருந்தது.

தமிழ்ப் பிரதேசங்களில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக இந்திய அரசு அயராது தொடர்ந்து முன்வைத்த விமர்சனங்களை ஒரு முறை திரும்பிப் பார்ப்பது நல்லது. இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கையால் தமிழ்ப் பொதுமக்கள் துன்புற்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்தியா தமிழர்கள் குறித்து தன்து அக்கறையைத் தெரிவிப்பதில் ஒரு போதும் தவறியது கிடையாது. பொது மக்கள் மீது ஷெல் அடிப்பது, குண்டு வீசுவது, ஆஸ்பத்திரிகளுக்கு ஷெல் அடிப்பது, நோயாளிகளைக் கொல்வது, பொது மக்களைப் பெருவாரியாகப் படுகொலை செய்வது, சித்திரவதை செய்வது, மக்களை இடம் பெயர்ப்பது என்று இலங்கை அரசின் இராணுவ வெறியாட்டம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. இவை அனைத்தும் ஒட்டு மொத்தமாக இந்தியாவினால் மீண்டும் மீண்டும் கண்டிக்கப்பட்டது. ஐ.நா.சபையின் மனித உரிமைகள் துணைக்குழுவிடம் இலங்கைக்கு எதிரான மனுவை இந்தியாவே தொடுத்தது. இனப் பிரச்சினைக்கு இராணுவ ரீதியான தீர்வு காணமுயல்வதற்கு எதிராக இந்தியப் பிரதமர் இலங்கை அரசை மீண்டும் மீண்டும் எச்சரித்திருக்கிறார், அரசியல் ரீதியான தீர்வு மட்டுமே அனுகூலமானது என்றும் வலியுறுத்தியிருக்கிறார். யாழ்ப்பாண மருத்துவமனை மூடப்படுவதைத் தடுக்க மனிதாபிமான அடிப்படையில் இந்திய அரசு இலங்கை அரசாங்கத்தின் மீது தன் நெருக்குதலைப் பிரயோகித்திருந்தது.

1987 ஜுன் 4ம்திகதி இந்திய அரசு விமானம் மூலம் உணவுப் பொதிகளை யாழ் மக்களுக்கு வழங்கியமையும் இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் யாழ்ப்பாண மக்களுக்கு உணவு வழங்கியமையும், இலங்கை அரசாங்கத்தின் வடமராட்சித் தாக்குதலைத் தொடர்ந்து வெளியேறிய எண்ணற்ற அகதிகளின் துயரத்தின் காரணமாக வெளிப்படையாகவே ஊக்குவிக்கப்பட்ட நிகழ்ச்சிகளாகும்.

இலங்கையில் இந்திய அமைதிப் படை வகிக்க வேண்டிய பங்கு ஓரளவுக்கு மிகவும் அசாதாரணமானது என்று சர்வதேச சமுதாயத்திற்குத் தெளிவாகத் தெரிந்தது. இது குறித்த சட்ட நுணுக்கங்கள் திருப்திகரமாக இருந்த போதிலும் இலங்கையின் தேசிய சுதந்திரமும் இறைமையுமே கேள்விக்கு இலக்காக்கப்பட்டு விட்டன என்ற உணர்வு பரவலாக நிலைபெற்றிருந்தது என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும். இருந்த போதிலும் இலங்கை அரசாங்கத்தால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமல் போனதால் இந்த ஏற்பாட்டினை சர்வதேச சமூகம் வரவேற்றிருந்தது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற உத்வேகம் இலங்கை அரசாங்கத்திடம் இல்லை. அத்துடன் தான் விளைவித்த சொல்லொணாத மானுடத் துன்பங்களின் பின்னர் இப்பிரச்சினைக்கு மீண்டும் தீர்வு காண முயல்வதற்கான தார்மீக உரித்து இலங்கை அரசுக்கு இல்லாது போய்விட்டது. இவ்வாறாக, இந்தியா மிகவும் உயர்ந்த தரத்தில் இப்பிரச்சினையை அணுகும் என்று சர்வதேச சமூகம் எதிர்பார்த்தது. இலங்கை அரசு கைக்கொண்ட வழிவகைகளைப்போல அல்லாமல் இந்தியா இப்பிரச்சினைக்கு உன்னதமான தீர்வு காண வேண்டும் என்றும் அது எதிர்பார்த்தது. தேவை ஏற்படுமானால் விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களை முழுமையாகக் களைய தம்மிடம் சாமர்த்தியகரமான வழிமுறைகள் உள்ளன என்ற அபிப்பிராயத்தை தெற்கிந்திய படைப்பிரிவின் தலைவர் லெஃப்டினென்ட் ஜெனரல் தெபீந்தர் சிங் உள்ளிட்ட இந்தியப் பிரமுகர்கள் யாவருமே ஏற்படுத்தி வைத்திருந்தனர். இதனை விட இந்தியா ஒரு அமைதி காக்கும்படை என்ற முறையில் இலங்கைக்கு வந்ததன் காரணமாக தனது நடவடிக்கைகளை ஒரு கூட்டுத் திட்டத்திற்குள் கொணர்ந்து நிதானமாகச் செயற்படும் என்றும் கருதப்பட்டது. அமைதிப்படை வீரர்கள் கட்டுப்பாடு மிகுந்தவர்களாக இருப்பார்கள் என்றும் பொது மக்கள் பிரச்சினைகள் குறித்து உணர்வுபூர்வமான அக்கறை கொண்டவர்களாக இருப்பார்கள் என்றும் கூட எதிர்பார்க்கப்பட்டது.

வரும்...

## உடைப்புகள்

எனது கவிதைகளுக்கு ஆடையில்லை
என்னை நான்
உரிந்து கொண்டு எழுதுகையில்
எப்படி நான் ஆடை அணிவேன்?
சோடனைகளும் ஒப்பனைகளும் இல்லாத
எனது கவிதைகளுக்கு
கோவணமும் இல்லை, மார்புக் கச்சையுமில்லை
பெண்களே, கதவைப் பூட்டுங்கள்
ஆண்களே, கண்களை மூடுங்கள்
எனது கவிதைகளுக்கு ஆடையில்லை.

ஓடி வராதே, ஓடி வராதே,
அகதியே,
உனக்கு அல்ல என் பாடல்.

கண்ணீருக்கும் செந்நீருக்கும்
கதறலுக்கும் ஒப்பாரிக்கும் அல்ல என் பாடல்.
நிரை நிரையாய்ப் புறப்பட்ட மூட்டை முடிச்சுகளின்
இனப்படிமத்திற்கு
அல்ல என் பாடல்.

இரவில் கிசுக்கென்று பறக்கும்
தீக்குண்டு எனது பாடல்.
வீரர்கள் மடிகையில்,
விமானங்கள் நொறுங்கும், கப்பல்கள் மூழ்கும்,
கவச வாகனங்கள் தகரும்
எனது பாடல்கள்.

புதைத்திருக்கிறேன், புதைத்திருக்கிறேன்
எனது கவிதைகளில்
கண்ணிவெடிகளை புதைத்திருக்கிறேன்.

கிட்ட வராதீர்.
தொட்டுப்பார்ப்பதற்கு அல்ல என் கவிதைகள்.
மென்று சுவைப்பதற்கு அல்ல என் கவிதைகள்.
வெடித்துப் பறக்கையிலே
மிஞ்சுவது ஒன்றுமில்லை
மனதில் உடைப்பெடுக்கும்
பாரிய குழியைத்தவிர.

* SUNDAY TIMES 26.01.97



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உள்ளூராட்சி ச
# மலையகத்தின் எ

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் மத்திய, ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களைச் சார்ந்த மலையக வாக்காளர்கள் வாக்களித்துள்ள விதமானது பலருக்கு அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. மலையக மக்களின் காவல் தெய்வமாக தன்னை நிலை நாட்டிக் கொள்ள கடந்த இரு தசாப்தங்களாக தொண்டமான் அவர்கள் மேற்கொண்ட கண்கட்டி வித்தையை மலையக மக்கள் இனம் கண்டுள்ளமையை இத்தேர்தலில் மலையக வாக்காளர்கள் நிரூபித்துள்ளனர்.

இத்தேர்தலில் தொண்டமானின் இ.தொ.காவிற்கு ஏற்பட்ட தோல்வியானது பேரினவாத சக்திகளை குதூகலிக்கச் செய்துள்ளதையும் காண முடிகிறது. தனது வாழ்நாள் முழுவதும் மலையகத் தமிழர்களின் நலனுக்காகவே பாடுபட்டு வந்தவர் தொண்டமான் என்னும் மாயை தகர்ந்ததனால் தொண்டமான் விரோத உணர்வு கொண்ட பேரினவாத சக்திகளுக்கு சந்தோசப்படுவதற்கு இதை விடச் சிறந்த சந்தர்ப்பம் எதுவும் இருக்க முடியாது. ஆனால் தொண்டமான் அவர்கள் பேரினவாதத்தின் சிறந்தவொரு தோழன் என்னும் உண்மையை ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு மலையக மக்கள் அரசியல் யதார்த்தங்களைத் தெரிந்து வைத்திருப்பவர்கள் அல்லர். நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் மலையகத் தமிழர்களின் வாக்குகளில் பெரும்பான்மையானவை ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்ததன் காரணமாக அக்கட்சியிலுள்ள தமிழ் பச்சோந்திகள் தமது குதூகலத்தையும் வெளியிட ஆரம்பித்துள்ளன. தொண்டமானையும் இ.தொ.கா வையும் அரசியல் ரீதியில் பலவீனப்படுத்துவதன் மூலமே, ஐக்கிய தேசியக் கட்சியினுள்ளே இவர்களின் வயிற்றுப் பிழைப்பை வலுப்படுத்திக் கொள்ள முடியும் என்பதுதான் இவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

மலையக சமூக அரசியலில் ஏற்பட்ட இந்தத் திடீர் மாற்றத்திற்கான காரணங்களையும் இதன் மூலம் மலையக சமூகத்திற்கு ஏற்படக்கூடிய எதிர்கால விளைவுகளையும் இனங் காண்பதுவும், மலையக மக்களின் எதிர்கால அரசியலில் ஒரு திடகாத்திரமான நிலைமையைத் தோற்றுவிக்க முயற்சிகள் மேற்கொள்வதுவும் தவிர்க்க முடியாத விடயங்களாகும். அதுவும் பௌத்த ஆணைக்குழு போன்ற நடைமுறைகளின் மூலம் தீவிர பேரினவாத சக்திகள் ஓரணி திரண்டு செயற்பட முயற்சிகள் மேற்கொண்டிருக்கும் இவ்வேளையில் சிறுபான்மையின சமூகத்தின் எதிர்கால நலன் தொடர்பாக யதார்த்த ரீதியான நிலைப்பாடுகளுடன் செயற்படுவது மிகவும் முக்கியமானதாகும்.

## இ.தொ,காவும் தொண்டமானும்

பெருந்தோட்ட முதலாளியான தொண்டமான் பண பலத்தின் மூலம் முதலாளிமார்களின் கட்டுப்பாட்டிலிருந்த இ.தொ.காவின் தலைமைப் பதவியை ஆக்கிரமித்துக் கொண்டவர். அதனைத் தொடர்ந்து அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இ.தொ.காவை தனது தனிச் சொத்தாகப் பயன்படுத்துவதற்கு ஏதுவான வகையில் தனக்கு ஆமாம் சாமி போடும் நபர்களைக் கொண்ட ஒரு ஜனநாயகக்(?) கட்டமைப்பை பெயரளவில் ஏற்படுத்திக் கொண்டார். மலையகத் தொழிலாளர்களின் சந்தாப் பணத்தின் மீது அவருக்கு இருந்த ஆர்வத்தில் பத்து சதவீத ஆர்வம் கூட அம்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இருந்ததில்லை என்னும் அனுபவ ரீதியான உண்மையையும் இங்கு குறிப்பிட வேண்டும். அதேபோல இ.தொ.காவையோ அல்லது தொண்டமானையோ மலையக மக்களின் ஏகபோக தலைமையென மலையகத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டதற்கான வரலாற்றுச் சான்றுகளும் இருந்ததில்லை.

தோட்டங்கள் அரசுடமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து 70-77 ம் ஆண்டுகளில் ஆட்சி செய்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான கூட்டரசாங்கம் மலையகத் தமிழ் தொழிலாளர்களுக்கெதிராக மேற்கொண்ட பேரினவாத அடாவடித்தனங்களானது மலையகத்தில் தொண்டமான் அலை வலுப்பெறுவதற்கு உதவியது. அவ்வரசு மேற்கொண்ட நடவடிக்கைகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் தொண்டமான் அவர்கள் ஐ.தே.கட்சியில் சரணடைந்ததன் விளைவாக அவ்வடக்கு முறையால் பாதிப்புற்ற மலையகத் தமிழ் மக்களில் பெரும்பாலானோர் ஐ.தே.கட்சியின் பக்கமே சாய்ந்தனர். 1977ம் ஆண்டுத் தேர்தலில் நுவரெலியா-மஸ்கெலியா மூன்று அங்கத்தவர் கொண்ட தேர்தல் தொகுதியின் முடிவுகளும் அத் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அபேட்சகரான அநுர பண்டாரநாயக்காவின் ஆதரவாளர்கள் (அநுராவை முதலாவது உறுப்பினராகத் தெரிவு செய்வதை நோக்கமாகக் கொண்டு) தமிழ் ஆதரவாளர்களை காமினி திசநாயக்காவுக்கு வாக்குப் போட வேண்டாம். தமிழரான தொண்டமானுக்கு வாக்குப் போடும்படியும் பிரச்சாரம் செய்த சம்பவமும் இதற்குச் சான்றாக அமைகின்றன.

1977ம் ஆண்டுத் தேர்தலில் ஐ.தே.கட்சி வெற்றி பெற்றதோடு 1978 ல் தொண்டமானுக்கு அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டது. இந்த அமைச்சர் பதவியும் அதன் மூலம் தொண்டமான் பெற்றுக் கொண்ட சலுகைகளும் மலையக மக்கள் மத்தியிலே தன்னுடைய செல்வாக்கை வலுப்படுத்திக் கொள்ளுவதற்குப் பேருதவியாக அமைந்தது. அதிகாரத்திற்கு தலை வணங்குகின்ற அரசியல் கலாசாரம் கொண்ட மலையகத் தோட்டத் தொழிலாளர் மத்தியிலே தன்னுடைய அமைச்சர் பதவியைக் காட்டி தொண்டமான் மேற்கொண்ட பிரச்சாரங்களும் உண்மைக்குப் புறம்பான வகையிலே தொண்டமானுக்குச் சார்பாக வீரகேசரி போன்ற பத்திரிகைகள் மேற்கொண்ட பிரச்சாரங்களும் தொண்டமானுடைய சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளை மூடிமறைத்து அவரைப் பிரபல்யப் படுத்துவதற்கு உதவின. அத்தோடு இலங்கை - இந்திய சமுதாயப் பேரவை போன்ற அமைப்புக்களின் மூலம் தொண்டமானுக்கு துதிபாடுவதற்கு நகர்ப்புற வர்த்தகர்கள் முன்வந்தமையும் தொண்டமான் பிரபல்யமடைவதற்கு மற்றுமொரு காரணமாக அமைந்தது. 16 வருட காலத்தில் அமைச்சர் பதவியைப் பாதுகாத்துக் கொள்வதையும் ஐ.தே. கட்சியின் பேரினவாத கொடுமைகளை மூடிமறைக்க முகமூடியாகப் பயன்பட்டதன் விளைவாகவும் பல வழிகளிலும் அரசியல் ரீதியாக மலையக மக்களை ஏமாற்றி வாழ வேண்டிய நிலை தொண்டமானுக்கு ஏற்பட்டது. இந்த ஏமாற்றத்தின் உச்சக்கட்டமாக 17-7-1994 ம் திகதி ஆயிரக்கணக்கான மலையகத் தொழிலாளர்களை நுவரெலியா நகருக்கு வரவழைத்து அப்போதைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையிலே, தொழிலாளர்கள் குடியிருக்கின்ற வீடும் அவர்கள் தோட்டம் செய்கின்ற காணித்துண்டும் அவர்களுக்கே சொந்தமாக்கப்பட்டு விட்டது என்ற அப்பட்டமான பொய்யை முன்வைத்து தெளிவில்லாத தமிழிலே எழுதப்பட்ட ஒரு பத்திரத்தை இதற்கான உறுதிப் பத்திரமென வழங்கிய சம்பவம் அமைந்தது. 1994 ம் ஆண்டு பொதுத் தேர்தலிலே இ.தொ.காவின் அபேட்சகர்களையும் ஐ.தே.கட்சியையும் வெற்றியுறச் செய்வதற்காக இவ்வகையான ஒரு பொய்யை பட்டப் பகலிலேயே கூறியதுடன் பத்திரிகைகளிலெல்லாம் விளம்பரம் செய்து மலையக சமூகத்தையே அவமானப் படுத்திய சம்பவமானது தொண்டமானுடைய இந்த வீழ்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.

இ.தொ.காவின் சொத்துக்களை ஈவிரக்கமற்ற வகையிலே கொள்ளையடித்ததோடு இந்தியாவிலிருந்த தனது பேரனை இ.தொ.காவின் தலைமைப் பொறுப்பிற்கு கொண்டு வருவதற்கு மேற்கொண்ட முயற்சியும் தொண்டமானுடைய வீழ்ச்சிக்கு மற்றொரு காரணமாக அமைந்தது.

ஐ.தே.கட்சியின் தேசியப் பட்டியலிலே பாராளுமன்றப் பிரதிநிதியாக அமர்ந்து கொண்டு 1994 ஜனாதிபதித் தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்பு ஒருவருக்கும் தெரியாமல் பின்புற வாயில் வழியாக சுற்றுலாத்துறை அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து அரசாங்கத் தரப்பு ஆசனத்திலே அமர்ந்ததன் மூலம் இவர் வெளிப்படுத்திய இவரது சந்தர்ப்பவாத அரசியலானது மலையக மக்கள் இவர் மீது வைத்திருந்த நம்பிக்கை தளர்வதற்கு இன்றுமொரு காரணம்



தோட்டங்கள் தனியார் மயப் படுத்தல் தொடர்பாக இவர் கொண்டுள்ள நிலைப்பாடும், சமீபத்திய சம்பள உயர்வுப் போராட்டத்திலே தோட்டத் தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்து தனியார் தோட்ட நிறுவனங்களுடன் இவர் செய்து கொண்ட உடன்படிக்கையும் மலையக மக்களின் வெறுப்புணர்வுக்கு ஆளாக வழிவகுத்தது. இவ்வகையில் கடந்த இருபது வருடங்களாக தனது பிரச்சாரங்களின் மூலமாகவும் வார்த்தை ஜாலங்களின் மூலமாகவும் அப்பாவித் தொழிலாளர்களை ஏமாற்றி வந்த இவரது சுயரூபத்தை மலையக மக்களில் கணிசமானவர்கள் இனம் கண்டுள்ளார்கள் என்பதை நாம் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலமாக தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

நிலைமைகள் இப்படியிருக்க, இரண்டரை வருடங்களாக பொது ஜன முன்னணி ஆட்சியானது மலையக மக்களுக்கு எதையுமே செய்யவில்லை, அதனால்தான் தான் தோல்வியைத் தழுவ வேண்டி யேற்பட்டது என ஒட்டு மொத்தமாக பழியை பொது ஜன முன்னணி மீது சுமத்த முயலுகின்றார் தொண்டமான். இ.தொ.கா சேவல் சின்னத்திலே போட்டியிட்ட நுவரெலியா அம்பேகமுவ போன்ற பிரதேச சபைகளிலும் அட்டன்-டிக்கோயா நகர சபையிலும் இ.தொ.கா தோல்வி அடைந்ததற்கு இக்கூற்றைக் காரணமாக ஏற்றுக் கொள்ள முடியாது. தன்னுடைய தவறை ஏற்றுக் கொண்டு சுயவிமர்சனம் செய்வதன் மூலமாக உண்மையை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக பழியை வேறொருவர் மேல் சுமத்தி விட்டு தான் தப்பித்துக் கொள்ளுவது தொண்டமானுக்குப் புதியதொரு விடயமல்லவே.

## பொதுஜன முன்னணியும் மலையக மக்களும்

பிறப்பிலேயே பேரினவாதக் கட்சியாக உருவாகிய சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதிக்கத்திற்குட்பட்டதே பொதுஜன முன்னணி எனினும் பொ.ஜ. முன்னணிக்கு 1994 ம் ஆண்டு நடை பெற்ற தேர்தலிலே மலையக மக்களில் குறிப்பிடத்தக்க அளவினர் வாக்கை அளித்தனர். 1994ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் மலையகப் பிரதேசங்களிலும் கணிசமான தமிழர்கள் தமது வாக்கை சந்திரிகா குமாரதுங்காவிற்கு வழங்கியிருந்தனர். பொதுஜன முன்னணி முன்வைத்த சமாதான சுலோகமும் ஜனநாயகத்திற்கான வாக்குறுதியுமே இந்நிலைமைக்குக் காரணமாக அமைந்தது.

ஜனாதிபதி பதவியை வென்றதன் பிறகு புலிகளுடனான பேச்சு வார்த்தை முறிவடைந்ததைத் தொடர்ந்து பொது ஜன முன்னணி நடைமுறைப்படுத்திய இனவாத அடக்குமுறை நடவடிக்கையில் பரவலாகப் பாதிக்கப்பட்டவர்கள் மலையக மக்களாவர். கொழும்பு போன்ற பிரதான நகரங்களிலே தொழில் செய்து வந்த மலையக இளைஞர்களில் கணிசமானவர்கள் பொலிஸாரின் இனவாத கெடுபிடிக்ளுக்கு முகம் கொடுக்க முடியாமல் தமது தொழில்களை விட்டு தோட்டங்களுக்குத் திரும்பி, தமது ஏழைப் பெற்றோருக்குப் பாரமாக வாழவேண்டிய நிலையேற்பட்டது. மலையகப் பிரதேசம் எங்குமே தமிழர்களுக்கெதிரான பிரச்சாரங்களும் கெடுபிடிகளும் அதிகரித்துக் காணப்பட்டன. இதனால் மலையக மக்களின் மன நிலையிலேற்பட்ட தாக்கமானது, 70க்கும் 77க்குமிடையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிபுரிந்த காலத்திலேற்பட்ட அனுபவங்களை மீட்டெடுத்ததோடு பொது ஜன முன்னணிக்கெதிரான உணர்வுகளையும் தூண்டிவிட்டது. மேலும் பாரியளவிலே யுத்தத்தை மேற்கொள்வதற்கு இவ்வரசாங்கம் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக ஏற்பட்ட வாழ்க்கைச் செலவின் பழுவைத் தாங்கிக் கொள்ள முடியாத பொருளாதார நெருக்கடிக்கு மலையக மக்கள் உட்படுத்தப்பட்டுள்ளார்கள். இதுவும் இவ்வரசாங்கத்திற்கெதிரான மனநிலையை ஏற்படுத்துவதற்கு ஒரு காரணமாக அமைந்தது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாகத் தென் மாகாணத்திலே பாரிய அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ள பல நடவடிக்கைகளை

அரசு மேற்
பொருளாதார ரீ
தங்கிய மலை
புபிவிருத்தி
பூர்வமாக என
இவ்வரசு மே
மலையக இளை
நிலையுட்பட, ம
ரின் பிரச்சினை
வதற்கு ஜனாதி
நியமிக்கப்பட்டு
மாதங்களுக்கு
யிடம் கையளிக்
இதுவரை அவ்
நடந்ததென்று
றது. மலையக ச
இவ்வரசு காட்
அசமந்தப் போ
மக்கள் இவ்வ
நம்பிக்கையை
வதற்கே உதவி
யில் தொண்ட
மேலே கூறிய கா
ஜன முன்னணி
கூறிய காரணங்க
மலையக மக்
முன்னணி, இ.
ஐ.தே.கட்சிக்கு
வழிவகுத்து விட்

## ஐ.தே.கட்சி
## மலையக ம

இலங்கையி
ஆட்சியை நிறு
இன முரண்
மயப்படுத்துவதி
மேற்கொண்ட மு
பாதிப்புக்குள்ளா
மக்களாவர். எ
யின் பேரினவாத
மூடிமறைத்து
பாதுகாப்பதற்
மேற்கொண்ட
மூலம் யானைச்சி
வர்ணத் ம்
எதனையுமே சீ
ளவுக்கு மூளைச்ச
குறிப்பிடத்தக்கள
வாழ்ந்து வருகி
காரணங்களை
மக்களுக்கு வி
பொதுஜன
தொண்டமான் இ
சம்பவமானது இ
ஐ.தே.கட்சியின்
விடுபட வைப்ப
உதவவில்லை
தொண்டமானுக்
முன்னணிக்கும்
எதிர்ப்புணர்வை
வதற்கு ஒரு
ஐ.தே.கட்சியை இ
இனம் கண்டுள்ள
தனது பேரின
களிலிருந்து மீள
முரண்பாட்டின்
தெளிவான
ஐ.தே.கட்சிக்கு,
அளித்த வாக்கா
சிறுபான்மையின
கொள்கையையே
டையோ ஏற்று
அமையாது.
ஜனாதிபதித் தே
யிலிருந்த ஜே.ஆ
விற்கெதிராக
வாதியான ஹெ
கடுவைக்கு யாழ்
பெருமளவில் வ
யும் 1988 ஜனாதி
பதவியிலிருந்த பி
ராக - சிறிம

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ...பைத் தேர்தலும்: ...ர்கால அரசியலும்!

ண்டிருந்தாலும்
ாக மிகவும் பின்
க மக்களின்
டர்பாக ஆக்க
மே இதுவரை
ாள்ளவில்லை.
ளுடைய விரக்தி
யக சமூகத்தின
டர்பாக ஆராய்
ஆணைக்குழு
ன் அறிக்கை பல
ன்பு ஜனாதிபதி
பட்டிருந்தாலும்
க்கைக்கு என்ன
யாமலிருக்கின்
யம் தொடர்பாக
ன்ற இத்தகைய
கள், மலையக
மீது வைத்த
ல்லாமல் செய்
ளது. இவ்வகை
சம்பந்தமாக
ங்களும் பொது
டர்பாக மேலே
ஒன்று சேர்ந்து
பொது ஜன
காவுக்கெதிராக
ாக்களிப்பதற்கு

### ...ளும்

பேரினவாத
படுத்துவதிலும்
ட இராணுவ

ஐ.தே.கட்சி
சிகளில் பாரிய
ர்கள் மலையக
ம் ஐ.தே.கட்சி
லைப்பாடுகளை
தே.கட்சியைப்
தொண்டமான்
ச்சாரங்களின்
ந்தையும் பச்சை
விட வேறு
க்க முடியாத
வக்கு உட்பட்ட
லையக மக்கள்
ார்கள். தக்க
முன்வைத்து
கமளிக்காமல்
ன்னணியுடன்
ந்து கொண்ட
க்காளர்களை
ாகத்திலிருந்து
எள்ளளவும்
மறுபுறத்திலே
பொதுஜன
ிராகத் தமது
வளிப்படுத்து
று சக்தியாக
ர்தலில் மக்கள்
.
நிலைப்பாடு
பாமலும் இன
தொடர்பாக
லைப்பாடுமற்ற
லையக மக்கள்
அக்கட்சியின்
தொடர்பான
நிலைப்பாட்
கொண்டதாக
ம் ஆண்டு
லிலே பதவி
ஜயவர்த்தனா
மொரு இன
ர் கொப்பே
ணத்து மக்கள்
ரித்திருந்தமை
தேர்தலிலே
தாஸவிற்கெதி
பண்டார

நாயக்கவிற்கு யாழ்ப்பாணத்து மக்கள் பெருமளவில் வாக்களித்தமையும் அரசுக்கெதிரான வெறுப்புணர்வின் வெளிப்பாடாகும். நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலிலே மலையக மக்களில் கணிசமானவர்கள் ஐ.தே.கட்சிக்கு வாக்களித்தமையும் இத்தகைய தொரு நிலைமையாகவே உணர முடிகின்றது.

### மலையக மக்கள் முன்னணியும் மலையக மக்களும்

சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி, இ.தொ.காவுக்கு ஒரு மாற்றீடாக அமையுமென எண்ணியவர்கள் பலர் இருந்தார் இப்பொழுதும் அப்படி எண்ணிக் கொண்டிருப்பவர்கள் சிலரேனும் இருக்கின்றார்கள் எனினும் மலையக மக்கள் முன்னணி இ.தொ.காவினுடைய சந்தர்ப்பவாத அரசியலுக்கு மாற்றீடாக அமைய முடியாது என்பதையும் இ.தொ. காவை விட சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளை நாடி, தம்மைத் தக்க வைத்துக் கொள்வதில் முக்கிய கவனம் செலுத்துகின்ற அமைப்பு என்பதையும் குறுகியதொரு காலத்திற்குள்ளே மக்கள் இனம் கண்டு கொண்டுள்ளார்கள். விசேடமாக கடந்த இரண்டரை வருடங்களாக பொதுஜன முன்னணி அரசுடன் இணைந்து செயற்படுகின்ற இவர்களின் தன்மையும் மலையக மக்களுக்கெதிராக பொதுஜன முன்னணி அரசு மேற்கொண்ட கெடுபிடிகளையெல்லாவற்றையும் பார்த்தும் பார்க்காதது போல பாசாங்கு செய்வதன் மூலம் தனது பிரதியமைச்சர் பதவியையும் அதன் மூலம் கிடைக்கும் சலுகைகளையும் பாதுகாத்துக் கொள்ள இவர்கள் மேற்கொண்டு வரும் முயற்சிகளும் மலையக மக்கள் இவர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழப்பதற்கு வழிவகுத்துள்ளது.

இத்தேர்தலிலே இவர்களுக்கு அதிக செல்வாக்குள்ள நுவரெலியா மாவட்டத்தில் ஒரு சில பிரதிநிதிகளைத் தெரிவு செய்ததை விட ஏனைய பிரதேசங்களிலே இவர்கள் நிராகரிக்கப்பட்டதானது இவர்களின் அரசியலை மக்கள் நிராகரிக்கத் தயாராகிவிட்டார்கள் என்பதைக் காட்டியுள்ளது.

### தேர்தல் முடிவுகளின் விளைவுகள்

இத் தேர்தலிலே மலையக மக்கள் வாக்களித்த விதமானது அவர்களுக் கெதிரான பாரதூரமான விளைவுகளுக்கு வழிவகுக்கக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கலாம்.

1) எவ்வகையிலும் தேர்தலை வென்றுவிட வேண்டுமென்ற வேட்கையுடன் பாரிய பிரயத்தனங்களை மேற்கொண்ட பொது ஜன முன்னணியின் இனவாத முரண்பாடுகள் கூர்மையடைவதற்கும் மலையக மக்களுக்கெதிரான கெடுபிடிகளை மேற்கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும் வழிவகுக்கலாம். 70 களின் முற்பாதியில் சிறீலங்கா சுதந்திரக்கட்சியினர் மலையக மக்களுக்கெதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு சமமான நடவடிக்கைகளில் பொது ஜன முன்னணி இறங்கலாமென்ற ஒரு சந்தேகமும் வலுப்பட்டு வருகின்றது.

2) கடந்த இரண்டு தசாப்தங்களாக தொண்டமானுக்கு இருந்த பிரபல்யமானது மலையக மக்களுக் கெதிராக இனவாத ரீதியாக செயற்படுபவர்களை ஓரளவுக்கு சிந்திக்க வைத்தது என்பதை எவரும் மறுக்க முடியாது. அதே போல இந்த செல்வாக்கை வைத்துக் கொண்டு பேரம் பேசக்கூடியதொரு ஆற்றலும் தொண்டமானுக்கு இருந்தது. ஆனால் இவ்வாற்றலை மலையக மக்களின் நலனுக்காகப் பயன்படுத்தாமல், தனது தனிப்பட்ட செல்வாக்கை வலுப்படுத்துவதற்காகவே இவர் பயன்படுத்தினார் என்பதுவும் மறுக்க முடியாத உண்மை. ஆனால் இத் தேர்தலில் தொண்டமானுக்கு ஏற்பட்டுள்ள பலவீனமானது பேரினவாதிகளை உற்சாகப்படுத்தியுள்ளதோடு, மலையக மக்களுக்கெதிராக செயற்படுவதற்கு அவர்களைத் தூண்டக் கூடிய சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு பத்திரிகைகளிலே பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டுரைகளின் தொனியானது இந்நிலைமையைத் தெளிவு படுத்துகின்றது.

3) பேரினவாத நிலைப்பாடு கொண்ட ஐ.தே.கட்சியானது மலையக மக்களுக்கு ஒரு மாற்றுக் கட்சியாக அமைய முடியாது என்பதோடு, இக்கட்சியை ஆதரித்தமைக்காக மலையக மக்களுக்கெதிராக அரசோ அல்லது இனவாத சக்திகளோ மேற்கொள்கின்ற அடக்கு முறை நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கோ, அதிலிருந்து மலையக மக்களைப் பாதுகாப்பதற்கோ ஐ.தே.கட்சி முன்வரப்போவதில்லை பேரினவாத சக்திகள் ஓரணி திரளுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருவதோடு, பாரியளவிலே தமிழர்களுக் கெதிரான உணர்வுகளைத் தூண்டி விடுகின்ற இச்சந்தர்ப்பத்திலே மலையக மக்களின் பாதுகாப்பும் அவர்களது எதிர் காலமும பற்றியதொரு பிரச்சினையை இத்தேர்தல் முடிவுகள் எழுப்பியிருக்கின்றன. நீர்க்க சிந்தனையுடனும் மலையக மக்களின் எதிர்காலம் தொடர்பான திட்ட வட்டமான இலக்குடனும் செயற்திட்டத்துடனும் சிந்தித்துச் செயற்படாவிட்டால் மலையக சமூகத்திற்கெதிராக மேற் கொள்ளப்படும் இனவாத கெடுபிடிகளின் விளைவாக உருவாக்கப்படக்கூடிய நிலைமை, அச்சமூகத்தில் ஒரு அராஜக நிலைமை ஏற்படுவதையும் அதன் மூலம் மலையக சமூகம் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையும் தவிர்க்க முடியாமல் போய்விடலாம்.

எனவே இந்நிலைமைகளைத் தவிர்த்துக் கொள்ளவும், மலையகத் தமிழர்கள் ஒரு இனக்குழுமம் என்ற வகையில் அவர்களின் சமத்துவத்தையும் சுய கௌரவத்தையும் நிலைநாட்டிக் கொள்வதன் மூலமும் ஒரு சமாதானமான சக வாழ்வை எதிர்காலத்தில் ஏற்படுத்திக் கொள்ளவும் எவ்வகையில் செயற்பட வேண்டுமென்பது தான் இன்று மலையக சமூகத்தின் முன்னுள்ள பிரதான கேள்வியாகும். இதற்கு பின்வரும் இருவிதமான அணுகு முறைகளைக் கையாளலாம்.


(1) மலையகத் தமிழ் தொழிலாளர்களின் உழைப்பினால் உருவாக்கப்பட்ட அமைப்பு என்ற வகையில் இ.தொ.காவும், அதன் தலைமைப்பீடமும் இதுவரையில் மேற்கொண்ட சந்தர்ப்பவாத மலையக மக்கள் விரோத நடவடிக்கைகள் செயற்பாடுகள் தொடர்பாக சுய விமர்சனம் ஒன்றை முன்வைப்பதற்காக அழுத்தத்தைப் பிரயோகிப்பது. அவ்வகையில் சுய விமர்சனம் முன் வைக்கப்படுமேயானால் அவ்விமர்சனத்தின் அடிப்படையில் மலையக மக்களின் எதிர்காலம் தொடர்பாகவும், மக்களுக்குப் பொறுப்பின்மை மிக்கதாகவும், பொறுப்புக்கூறக்கூடிய வகையிலுமான இ.தொ.காவின் பங்கு எவ்வாறு மறுசீரமைக்கப்படல் வேண்டும் என்பது போன்ற விடயங்கள் மலையகம் முழுவதும் கலந்துரையாடப்படல் வேண்டும். இவ்வகையான நிலைமையை ஏற்படுத்திக் கொள்வதற்கு மலையக சமூகத்தின் கல்விமான்கள், படித்த இளைஞர்கள், சமூக அமைப்புக்கள், மலையக நேச சக்திகள் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் இ.தொ.கா தலைமைப் பீடத்திற்கு நெருக்குதல்கள்க் கொடுக்கலாம்.

(2) இத்தகைய வேண்டுகோள்களையும், நெருக்குதல்களையும் ஏற்று சுயவிமர்சனத்துடன் மக்களுடன் கலந்துரையாட இ.தொ.காவின் தலைமைப்பீடம் முன்வர மறுக்குமேயானால் மலையக மக்களின் எதிர்காலம் நன்மை தொடர்பாக செயற்பட மாற்று வழிகளில் இறங்குவது தவிர்க்க முடியாத விடயமாகும்

மலையக மக்களின் கடந்தகால அரசியல் அனுபவங்கள் காட்டிக் கொடுப்புகள், சமூக விரோத செயற்பாடுகள் போன்ற பின்னணிகளையும், அதன் மூலம் ஏற்பட்ட விளைவுகளையும் அடிப்படையாகக் கொண்டு மக்கள் மத்தியில் விமர்சன ரீதியான மன நிலையை உருவாக்குவதன் மூலம் மக்களை அரசியல் மயப்படுத்துவதும், அதனடிப்படையில் மனித உரிமைகளையும், ஜனநாயக மரபுகளையும் கௌரவிக்ககூடிய வகையிலும், மலையக சமூகம் தேசிய நீரோட்டத்தில் உரிய அங்கீகாரத்தைப் பெறுவதையும் நோக்கமாகக் கொண்ட ஜனநாயக செயற்பாடுகளை அரசியல் ரீதியாக ஆரம்பிப்பதன் மூலம் தனி நபர் வந்தனைகளுக்கு அப்பாற்பட்ட அமைப்பு ரீதியான ஒரு தலைமையை மலையகத்திற்கு ஏற்படுத்துவது மலையக சமூகத்தின் முன்னுள்ள ஒரேயொரு மாற்று வழியாகும்.

இம்மாற்றத்தை நோக்கி செயற்படுவதன் மூலம் மலையக மக்களை கௌரவமான இனமாக அரசியல் ரீதியாக நிலை நிறுத்திக் கொள்ள மலையகம் தயாராக இருக்கின்றதா அல்லது சந்தர்ப்பவாத, எதேச்சாதிகார சக்திகளுக்கு தொடர்ந்தும் பலியாவதன் மூலம் தன்மானமிழந்து வாழ்வதா என்பதை மலையகம் காலதாமதமின்றி முடிவுசெய்தல் வேண்டும்.

-எஸ்.பாலகிருஷ்ணன்




அன்பான என் நண்பிக்கு
ஒரு கிழட்டு நாயின் காமத்திற்கு
கூலியும் கொண்டு போன - உனது
அடக்க முடியா விம்மலை
கொட்டியழும் சிறு இதயத்து
விழிநீர் மந்தாரக் கோடிட்ட
கடிதம் கிடைத்தது.

எனது படிப்பை தொடரவும்
உடம்பை கவனிக்கவும்
மகிழ்ச்சியாய் இருக்கவும்
காதலிக்கவும்
என நீ எழுதிய
என் மீதான உன் கரிசனைக்கு
நன்றி.

எனது புத்தகங்களும்
எனது நலனும்
எனது மகிழ்வும்
எனது காதலனும்
துப்பாக்கிமுனையில் தீயிடப்பட்டது
உனக்குத் தெரியாதா என்ன?

இப்போதோ,
றோட்டோரக் காடுகளில்
எல்லாவற்றினதும் கடிப்புக்கும்
குதறல்களுக்கும் மத்தியில்
வாழ்க்கை (?). நடாத்துவதும்,
புழுக்களுக்கிடையே தெரியும்
ஓரிரு பருக்கை அரிசியில்
கஞ்சி குடிப்பதும்,
அதுவுமில்லாதார் பார்த்திருக்க
எம்விதி நினைத்து அழுவதும்,
எமை நோக்கி வரும்
குண்டுகளுக்கு பயந்து
கீழ்நெல்லி மரத்தின் கீழ் பதுங்குவதுமாய்
எனியும் எங்கு போவதென்று அறியாத
எதையும் சிந்திக்க விரும்பாத
மனநோயாளியின் நிலையில் உள்ளேன்
நான்.

இனிமேல் எனது எது பற்றியும்
கேட்டெழுதாதே
ஒரேயொரு வரியுடன்
முடித்துக்கொள்.
நீ இன்னும் உயிருடன்தானே!?
இருந்தால் பதில் போடுகிறேன்.



www.tamilarangam.net

## குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 27

### 'அந்நியரை' அறிமுகம் செய்தல்

குழந்தைக்கு எத்தகைய முஸ்தீபுகளும் இன்றி ஒரு குழந்தையின் வருகை குறித்து தெரிவிக்கலாம். 'நாம் எங்கள் குடும்பத்திற்கு ஒரு புதிய குழந்தையைக் கொண்டுவரப் போகிறோம்' என்ற அறிவிப்பு மட்டுமே போதுமானதாகும். குழந்தையின் உடனடி எதிர்வினை எப்படி இருப்பினும், அதன் மனதில் ஆயிரம் கேட்கப்படாத கேள்விகள் தோன்றும் என்பதையும், பல வெளிப்படுத்தப்படாத கவலைகள் உருவாகும் என்பதையும் நாம் அறிவோம். இத்தகைய நெருக்கடியான நிலைகளை எதிர்கொள்வதில் குழந்தைக்கு நாம் உதவ வேண்டும். புதிய குழந்தை, ஏற்கெனவே உள்ள குழந்தையின் பாதுகாப்புக்கு ஒரு மிரட்டல்தான் என்ற உண்மையை எந்த விடயங்களும் மாற்றி விட முடியாது. எமது புத்திசாதுரியம், செயற்திறன் என்பதைப் பொறுத்தே அக்குழந்தையின் தன்மை அல்லது இயல்பு நன்றாய் வருவதும் பாழாய்ப் போவதும் தங்கியுள்ளது.

புதிய ,குழந்தை பற்றிய ஒரு மோசமான அறிவிப்பு இப்படி அமையலாம்.

''ஜோன் பிறந்தபோது எனது தகப்பனார் என்னை அவனைப் பார்ப்பதற்காக அழைத்துச் சென்றார். அம்மாவின் கைகளில் இருந்த அந்தச் சிவப்பு நிறக்குழந்தையை



நான் பார்த்தபடி இருந்த பொழுது அப்பா இப்படிச் சொன்னது இன்னமும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. 'இப்போது நீ இன்னும் அதிகளவு கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் இப்போது எமக்கு ஒரு புதிய குழந்தை வந்திருக்கிறது.இப்ப நீ மட்டுமில்லை. இப்பவிலிருந்து இன்னும் ஒருவர் - உனது தம்பிப் பாப்பாவும் இருக்கிறான். நீங்கள் இப்போது இருவர். முன்பென்றால் ஒருவர் தான்...' நான் நினைக்கிறேன் அன்றிலிருந்து எனது வாழ்க்கை எனது தம்பியையிட்டு கவனமாக இருப்பதற்காகவே அர்ப்பணிக்கப்பட்டதாய்... எனது வாழ்க்கையை அவனுக்காக நரகமாக்குவதாய் ஆகிவிட்டது...''

(வேர்ஜினியா எம்.எக்சலீன்)

இதற்கு நேர்மாறாக கீழ்வரும் உதாரணம் ஒரு பயனுள்ள அறிமுகமாக அமைகிறது.

வேர்ஜினியா, ஐந்து வயதாக இருக்கும் போது தாய் கர்ப்பமாக இருப்பதைக் கண்டுபிடித்தாள். அவள் இதை மிகவும் சந்தோசமாக வரவேற்றாள். அவள் றோசா மலர்கள் பூத்த காலை நேரத்தை தனது தம்பியுடனான வாழ்வாக சித்திரிக்கும் படியாக வரைந்தாள். தாய் இத்தகைய வாழ்க்கையை பற்றி ஒரு பக்கப் பார்வையை ஊக்குவிக்கவில்லை. அவள் சொன்னாள்:

''சில வேளைகளில் அவன் சந்தோசம் தரலாம். சில வேளைகளில் கஷ்டம் கொடுக்கலாம். சில வேளைகளில் எங்கள் எல்லோருக்கும் அவன் ஆய்க்கினையாகக் கூட இருக்கலாம். அவன் கீழாடையை நனைக்கலாம்; சட்டையுடன் 'கக்கா' கழிக்கலாம், சில வேளைகளில் அவன் நாற்றமும் கொடுக்கலாம். அம்மா அவனை கழுவ வேண்டும், சாப்பாடு கொடுக்க வேண்டும், அவனைக் கவனமாகப் பார்க்க வேண்டும். உங்களுக்கு அம்மா உங்களை விட்டு விட்டு இருப்பதாக தோன்றக் கூடும். சில வேளைகளில் பொறாமையாகவும் இருக்கலாம். நீங்கள் சிலவேளை 'அம்மாவுக்கு என்னில் விருப்பமில்லை. இந்தக் குழந்தையில் தான் விருப்பம்' என்றும் நினைக்கலாம். அப்படி உங்களுக்குத் தோன்றினால், உடனே வந்து எனக்கு சொல்ல மறக்க வேண்டாம். நான் உங்களுக்கு மேலதிகமாக அன்பைத் தருவேன். எனவே நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை, உங்களுக்கு, நான் உங்களை விரும்புகிறேன். என்பது தெரியவரும்...''

சில பெற்றோர்கள் இத்தகைய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கத் தயங்குகிறார்கள். குழந்தைகளின் மனதில் ''பயங்கரமான'' எண்ணங்களைப் போடுவதற்கு அவர்கள் பயப்படுகிறார்கள். இந்தப் பெற்றோர்கள் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய எண்ணங்கள் குழந்தைகட்கு புதிது அல்ல. எமது இவ்வாறான சொற்கள் அவர்களுக்கு தீமையை அல்ல நன்மையையே செய்கின்றன. இது குற்ற உணர்விலிருந்து குழந்தை தன்னை தடுத்துக் கொள்ளவும், மேலும் நெருக்கத்தையும், தொடர்பையும் ஏற்படுத்திக் கொள்ளவும் உதவுகிறது. ஒரு குழந்தை புதிய குழந்தையையிட்டு கோபப்படவும், எரிச்சலடையவும் உரித்துடையது. அது தனது கோபத்தை உரத்துச் சொல்ல அனுமதிப்பது அது இரகசியமாக அவற்றை வெளிப்படுத்துவதை விடச் சிறப்பானதாகும்.

## பொறாமையை வெளிப்படுத்துதல் சொற்களா ?அல்லது அறிகுறிகளா?

ஆங்கிலமூலம் :
டொக். ஜெயிம் ஜி ஜினோட்
தமிழில் :
அருண்.

### பொறாமையை வெளிப்படுத்துதல்:

குழந்தைகள் தமது பொறாமை உணர்ச்சியை அடக்க முயலும் போது, அது அறிகுறிகளாகவும் குளப்படியாகவும் பூடகமாக வெளிப்படுகிறது. தனது சகோதரனை வெறுக்கும் ஒரு குழந்தை, தனது வெறுப்பை வெளிக்காட்டுவது தடைசெய்யப்பட்டிருக்கும் போது, அவனை ஒரு பத்துமாடிக் கட்டிடத்திலிருந்து தள்ளி வீழ்த்துவதாகக் கனவு காணக்கூடும். இப்படிக் கனவு காணும் குழநதை தூக்கத்தில் திடுக்கிட்டுப் பயந்து அழுது கொண்டே விழிப்படையக்கூடும். அது சில வேளை இரவு நேரத்தில் எழுந்து தனது சகோதரனது படுக்கையை நோக்கி ஓடிப் போய், அவன் இன்னமும் அங்கு படுத்திருக்கிறானா என்று பார்க்கவும் கூடும். தனது சகோதரன் எந்த விதமான பாதிப்புமில்லாமல் படுத்திருப்பதைப் பார்த்து அது தன் மனதைச் சாந்தப்படுத்திக் கொள்வதை பெற்றோர்கள் தனது சகோதரன் மீதான அன்பு மிகுதியால் குழந்தை இப்படிச் செய்வதாக தவறாக நினைக்கக்கூடும்.

தான் சொற்களால் சொல்ல அஞ்சுவதை ஒரு குழந்தை கனவுகளின் மூலமாகச் சொல்கிறது. குழந்தைகள் இவ்வாறு உணர்வுகளை கனவுகளில் வெளிப்படுத்துவதை விட வார்த்தைகளால் சொல்ல அனுமதிப்பது மிகவும் நல்லது.

ஐந்து வயதான வாரனுக்கு, சகோதரி பிறந்ததையடுத்து தொடர்ச்சியான இழுப்பு நோய் வரத்தொடங்கியது. அவனது பெற்றோர்களே வாரன் தனது சகோதரியை உயிருக்கு மேலாக நேசிப்பதாக நம்பினார்கள்; தனது சகோதரியையிட்டு அவன் மிகவும் கவனமாக இருப்பதாக நினைத்தார்கள். வைத்தியரால் வாரனது இழுப்பு நோய்க்கு எந்த உடற்கூற்றியல் அடிப்படைகளையும் கண்டு பிடிக்க முடியவில்லை. அவனது ஆஸ்துமா நோயை அவ்வைத்தியர் ஒரு மனோதத்துவ வைத்திய நிலையத்தில் காட்டுமாறு சொன்னார். அங்கு காட்டினால், அவன் தனது பொறாமையையும் கோபத்தையும் இழுப்பு நோயின் மூலம் வெளிப்படுத்துவதைவிட வார்த்தைகளால் வெளிப்படுத்தக் கற்றுக்கொள்வான் என்று அவர் கருதினார்.

சில குழந்தைகள் தமது பொறாமையை வார்த்தைகளால் அல்லாமல் இருமல், தோற்சொறி நோய் போன்றவற்றினூடாக வெளிப்படுத்துகிறார்கள். வேறு சிலர் படுக்கையில் சலம் கழிப்பதன் மூலமாகக் காட்டுகிறார்கள். அதாவது தமது உணர்வை ஒன்றின் மூலமாகக் காட்டமுடியாத போது வேறொன்றினால் வெளிப்படுத்துகிறார்கள். வேறு சில குழந்தைகள் அழிவு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாக மாறுகிறார்கள். அவர்கள் தமது வெறுப்பை வெளிப்படுத்துவதற்குப் பதில் பாத்திரங்களை உடைக்கிறார்கள். வேறு சில குழந்தைகள் நகம் கடிப்பதையும், தலைமுடியை வெட்டுவதையும் செய்கிறார்கள். தமது சகோதரர்களை வெட்டுவதையும், கடிப்பதையும் தாம் விரும்புவதை மறைக்க அவர்கள் இப்படிச் செய்யக்கூடும். எல்லாக் குழந்தைகளுக்கும் தமது உணர்வுகளை வார்த்தைகளினூடாக வெளிப்படுத்துவதே இத்தகைய அறிகுறிகளினூடாக வெளிப்படுத்துவதை விடவும் அவசியமாக உள்ளது. பெற்றோர்கள். குழந்தைகள் இத்தகைய உணர்விலிருந்து விடுபட உதவுவதில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.

வரும்...

## ஈழத்து இஸ்லாமிய/முஸ்லிம் சஞ்சிகைகள்

இலங்கை முஸ்லிம்களிடையே இன்று அனேக பத்திரிகைகள் சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவற்றில் பெரும்பாலானவை தமிழ் மொழியிலேயே வருகின்றன. முஸ்லிம்கள் ஏனைய சில மதத்தினரைப்போல் மத சுயத்துவ அடையாளம் உடையவர்கள் என்ற படியால் அவர்களது வெளியீடுகள் யாவும் சமயக்கருத்துக்களை கொண்டேயுள்ளன. அத்துடன் இஸ்லாமிய கிறிஸ்தவ மதங்கள் பிரசார மதங்கள் (Missionary Religions) ஆனபடியால் அவை வெளியீடுகள் மூலம் முன்வைக்கிற கருத்துக்களும் பிரசாரத்தன்மை கொண்டவையாக இருக்கின்றன.

அண்மைக்காலமாக உலகெங்கிலும் ஏற்பட்டுவரும் இஸ்லாம் சார் விழிப்பலைகள் மற்றும் எதிர்ப்பலைகள் இஸ்லாத்தை தொடர்பு சாதன உலகில் மையப் பொருளாக்கியுள்ளன. இந்த மாற்றங்களும் இலங்கை இஸ்லாமிய/ முஸ்லிம் சஞ்சிகைகளின் போக்கினும் மாற்றங்களை விரிவான முறையில் ஏற்படுத்தியுள்ளன. ஆன்மீகக் கருத்துக்களையே மிகவும் பிரதானப்படுத்தி வந்த இந்த சஞ்சிகைகள் பலதரப்பட்ட விடயங்களை உள்வாங்கி சமகாலத்தேவைகளை இஸ்லாமிய சுயத்துவத்துடன் முஸ்லிம் வாசகர்களை கருத்திற்கொண்டு முன்வைத்த வாரம்பித்துள்ளன.

இம்மாற்றங்கள் பெரும் எண்ணிக்கையான முஸ்லிம் குழாமை படித்த விழிப்புற்ற நிலைமைக்கு கொண்டு வந்துள்ளன. முஸ்லிம்களின் படிப்பறிவு வீதமும் மிக அண்மைக்காலமாக மாறிவருவதும் இங்கு அவதானிப்பிற்குரியது. இதற்கு இந்த சஞ்சிகைகள் அவை ஏற்படுத்தும் கருத்தியல் முன்வைப்புக்களும் ஓரளவு காரணமாயும் அமைந்துள்ளன.

தற்போது வந்து கொண்டிருக்கும் பிரதான இஸ்லாமிய/முஸ்லிம் சஞ்சிகைகளைப் பார்ப்போம்.

அல் -ஹஸனாத், இஸ்லாமிய சிந்தனை, மீள்பார்வை, உண்மை, உதயம், முஸ்லிம் நேசன், தூது, எழுச்சிக்குரல், வான்சுடர்,அல் - இஹ்ஸான், அம்சம், அல்-இஸ்லாம், (விடுபட்டவை மன்னிக்க..) என்பவற்றைக் குறிப்பிடலாம். இதில் நேசன் அண்மையில் நின்று விட்டது. மிகப்புதிதாய் வந்தது 'அம்சம்' இண்ட(ர்) நஷனல், ஆக்கபூர்வமாயும் மாற்றாயும் வந்து கொண்டிருக்கிறது. 'மீள்பார்வை', சித்திலெப்பையின் 'முஸ்லிம் நேசன்' மீண்டும் அண்மையில் பிறப்பெடுத்துள்ளது. ஆய்வுச் சஞ்சிகையாக பலவருடமாக வந்து கொண்டிருக்கிறது. 'இஸ்லாமிய சிந்தனை'', சகல தரப்பினருக்குமான ஓர் இதழாக வருகிறது 'அல் - ஹஸனாத்'. மும்மொழிகளிலும் (ஒரே இதழிலேயே) வருகிறது 'அல் இஸ்லாம்'.

இந்தச் சஞ்சிகைகள் பொதுவாக ஒரு வாசகனைச் சென்றடைகையில் ஒரு பூரணத்துவமான தொகுப்பான விடயத்தைப் பெற்றுக்கொள்ள உதவுகிறதாக உள்ளது.

எனினும் துரதிருஷ்டவசமாக அதிக முஸ்லிம் வாசகர்கள் ஏதாவது ஒரு சஞ்சிகையையே தங்கள் ஆஸ்தான சஞ்சிகையாக எடுத்து ஏனையவற்றை முத்திரை குத்தியும் கருத்துக்களை 'தேடல்' என்ற வகையிலாவது உள்வாங்காமலும் புறக்கணித்து விடுகிறார்கள்.

இது ஆரோக்கியமான விடயமல்ல. அத்துடன் சமூகத்துள்ளான மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் கண்டுகொள்ளாத தன்மையையும் இது ஏற்படுத்திவிடுகிறது. சிலர் எல்லாத்தரப்பு மக்களையும் திருப்திப்படுத்துவதற்காய் ஜனரஞ்சகத் தனத்தையும் கைக்கொள்கிறார்கள்.

இவ்வாறான சில விடயங்கள் உள்ளார்ந்த குறைகளானாலும் முஸ்லிம் வாசிப்பு மட்டத்தை உயர்த்திய பணியை இவ்வொவ்வொரு சஞ்சிகைகளும் செய்திருக்கின்றன. தம் தேடலையும் தற்போது அகலித்திருக்கின்றன. அகலித்து வருகின்றன.

இன்னொரு புறம் ஏனைய பொதுத் தமிழ்ப்பத்திரிகைகளையும் பல்வேறு காரணங்களுக்காக முஸ்லிம் வாசகர்கள் அதிகமாக பரவலாக வாசிக்கிறார்கள். இதன் மூலம் இன்னொரு பக்க வாசிப்பின் தேவையை இவர்களால் நிவர்த்திக்க முடிகிறது.

இப்படியும் பல்வேறு வழிகளிலும் இஸ்லாமிய / முஸ்லிம் சஞ்சிகைகளின் போக்கு மாறிக்கொண்டும், விடயங்களின் உள்வாங்கல் விரிவாகிக் கொண்டும் வர, இது இன்னொரு கருத்தென்ற வகையில் அரசியல் பாஷையில் சொல்வதனால், மதச்சுயத்துவமுடைய சிறுபான்மையினரின் கருத்தென்ற வகையில் பிற தமிழ் வாசகர்கள் (முஸ்லிமல்லாதோர்) எதையாவது இச்சஞ்சிகைகள், பத்திரிகைகள் மூலம் அறிய முயற்சிக்கிறார்களா என்றொரு கேள்வி எழுகிறது.

ஏனெனில், தற்போது ஒவ்வொருவரின் அரசியலை வேறொருவர் கதைக்கிற தீர்மானிக்கிற போக்கே நிகழ்கிறது. அந்தந்த சமூகத்தவரது அடையாளத்தை மற்றும் பிற கருத்தியல்கள் அந்த சமூகத்தவரிலிருந்து அதனது தனித்துவ அரசியல் உட்படுத்தாமல் எழுந்தமானமாகக் கதைக்கப்படுகிறது. ஈழத்தின் சிறுபான்மை இனங்களின் அரசியல் அடையாளங்களில் எழுகின்ற சிக்கல் நிலைக்கு இப்போக்கு காரணமாகின்றது.

இந்தச் சிக்கல் நிலைக்கே முஸ்லிம் அரசியல்வாதிகளும் முகங்கொடுத்து தங்களை வளர்த்துக்கொள்கிறார்கள்.

அறிவார்ந்த சுய அடையாளம் சார்ந்த அரசியல் கருத்தாக்கங்களை யாரும் கண்டுகொள்வார் போலில்லை. அரசியலுக்கென்று வேறொரு முஸ்லிம் கருத்தாக்கத்தையும், மதத்துக்கென்று வேறொரு கருத்தாக்கத்தையுமே (இதே போல் இன்னும் சிலதுக்கு...) பலர் கொண்டுள்ளனர். இவ்வாறான நிலைமை தற்போது இஸ்லாமிய/முஸ்லிம் சஞ்சிகைகளில் கேள்விக்குள்ளாக்கப்படுவதுடன் ஆராயவும் படுகிறது.

உ+மாக இனப்பிரச்சினை, சிறுபான்மையினர் எடுத்துக்கொள்வோம். இப்பிரச்சினையை மேற்சொன்னவரான வகையில் அரசியலுக்கென்றே உருவாக்கப்பட்டிருக்கிற் முஸ்லிம் கருத்தாக்கப் பார்வையிலேயே பார்க்கிறோம். பார்க்கப்படுகிறது. ஆனால் உண்மையில் பார்க்க வேண்டியது முஸ்லிம்களின் மதச் சுயத்துவத்துடனான பார்வையிலேயே - இது அரசியலை வேறு மதத்தை வேறாகக் கூறுபடுத்திப் பார்ப்பதில்லை. அத்துடன் இது முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்கிற நாடுகளில் அதற்கேற்ப அணுகுகிற தன்மையையும் கொண்டிருக்கிறது.

இவ்வாறான ஒரு பார்வையை 'மீள்பார்வை' என்ற பத்திரிகை முன்வைத்து வருகிறது. ''இனப்பிரச்சினை - ஓர் இஸ்லாமியக் கண்ணோட்டம்'' என்ற தொடர் கட்டுரை முஸ்லிம் சுயத்துவப் பார்வையில் ஆராய்கிறது. இந்தப் பார்வையை நாம் கண்டுகொள்வதில்லை. ஏனெனில் எமது பார்வையையே எல்லோரினது பார்வையாகவும் கருதுகிறோம். உருவாக்குகிறோம்.

ஆனால் இது, உலக நிகழ்வுப் போக்கைப் பார்க்கையில் மாற்றப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. முஸ்லிம்களை அரசியலுக்கு வேறு மதத்துக்கு வேறு என்று பிரித்துப்பார்க்கிற நிலை நீண்ட காலத்துக்கு இருக்கப்போவதில்லை.

இதற்கான முன்னெடுப்புக்களையும் அகலித்த ஆழமான சுயத்துவமான தேடல்களையும் இஸ்லாமிய/ முஸ்லிம் சஞ்சிகைகள் மேற்கொண்டு வருகின்றன. முஸ்லிம்கள் தன் மதத் தேசியம், தனித்துவம் உடையவர்கள் என்று கூறுகிற எல்லோரும் இவற்றை உள்வாங்கத்தான் வேண்டும்.

சத்யா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஜே.வி.பி.யின் வளர்ச்சி எதனை குறிக்கிறது?

**உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஜே.வி.பி. பெற்ற முடிவுகள்**

| மாவட்டங்கள் | மாவட்டத்தில் மொத்த உறுப்பினர்கள் தொகை | போட்டியிடக்கூடிய மொத்த வேட்பாளர்கள் | போட்டியிட்ட வேட்பாளர்கள் | மொத்த சபைகளின் எண்ணிக்கை | போட்டியிட்ட சபைகள் | வெற்றி பெற்ற சபைகளின் எண்ணிக்கை | வெற்றி பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| அனுராதபுரம் | 201 | 269 | 220 | 19 | 16 | 2 | 2 |
| பதுளை | 216 | 228 | 204 | 17 | 15 | 5 | 5 |
| கொழும்பு | 287 | 355 | 244 | 12 | 10 | 10 | 14 |
| காலி | 241 | 319 | 286 | 17 | 15 | 9 | 9 |
| கம்பஹா | 349 | 446 | 320 | 19 | 11 | 9 | 9 |
| ஹம்பாந்தோட்டை | 138 | 183 | 169 | 11 | 10 | 9 | 13 |
| களுத்துறை | 326 | 280 | 206 | 14 | 9 | 5 | 5 |
| கேகாலை | 195 | 255 | 203 | 11 | 8 | 5 | 5 |
| குருநாகல் | 338 | 438 | 438 | 19 | 19 | 11 | 11 |
| கண்டி | 326 | 427 | 359 | 22 | 16 | 2 | 2 |
| மாத்தறை | 197 | 258 | 237 | 14 | 13 | 9 | 10 |
| மொனராகலை | 104 | 138 | 138 | 10 | 10 | 4 | 5 |
| புத்தளம் | 161 | 212 | 131 | 12 | 6 | 0 | 0 |
| இரத்தினபுரி | 227 | 279 | 245 | 15 | 12 | 2 | 2 |
| நுவரெலியா | 140 | 179 | 147 | 8 | 6 | 1 | 1 |
| மாத்தளை | 137 | 183 | 162 | 12 | 10 | 4 | 4 |
| பொலன்னறுவை | 82 | 110 | 110 | 6 | 6 | 4 | 4 |
| *மொத்தம்* | *3665* | *4559* | *3819* | *238* | *192* | *91* | *101* |

– கோமதி

'49 வருடங்களாக நமது நாட்டை மாறி மாறி அரசாண்ட, இது வரை நாட்டை நாசத்துக்கு இட்டுச் சென்ற யானை-கதிரை ஆகிய திருட்டுக் கும்பலுக்கு கும்பிடு போடுவோம்!"

"நபர்களை அல்ல, கொள்கையை வென்றெடுக்க மணிச் சின்னத்தை வெற்றிபெறச் செய்வோம்..."

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜே.வி.பி (மக்கள் விடுதலை முன்னணி) மேற்படி கோஷத்தை முன் வைத்து களத்தில் இறங்கியது. தேர்தலில் நாடு முழுவதுமாக 101 ஜே.வி.பி. உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

### 101 உறுப்பினர்களின் விலகல்

மார்ச் 29ம் திகதியன்று ஜே.வி.பி தமது 101 உறுப்பினர்களையும் விலக்கிக் கொள்வதாக சகல பத்திரிகைகளுக்கும் அறிக்கையொன்றை அனுப்பியிருந்தது. தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்குப் பதிலாக அமைப்பின் முக்கிய தகுதி வாய்ந்த; பொருத்தமானவர்களை அவ்விடத்துக்கு தெரிவு செய்வதாகவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டமை ஜனநாயக விரோதச் செயலென்றும் தகுதியானவர்கள் தான் தெரிவு செய்யப்பட வேண்டுமெனில் போட்டியாளர்கள் அத்தனை பேரும் தகுதியற்றவர்களா? அவ்வாறெனில் "தகுதியற்றவர்களை" ஏன் போட்டியிடச்செய்ய வேண்டும். என்பது போன்ற வினாக்களை பலர் எழுப்பிய போது, நாங்கள் எமது கட்சிக்குத் தான் வாக்களிக்கச் சொன்னோம். நபர்களுக்கல்ல. அதன் அர்த்தம் தமது "கொள்கைகளை வெல்லச் செய்யுங்கள்" என்பதே. விருப்பு வாக்குகளை படிநிலை வரிசையாக வைத்து உறுப்பினர்களை தெரிவு செய்யும் முறையோடு எமக்கு உடன்பாடில்லை. எமது இலக்கினை எட்டச்செய்ய பொருத்தமுடைய ஊழியர்களை அப்பதவிகளுக்கு அமர்த்துவதே எமது நோக்கம். இந்த அடிப்படையில் தான் சகல உறுப்பினர்களும் போட்டியிட்டனர். எல்லோரும் ஏற்கெனவே உடன்பட்ட விடயத்தை எவ்வாறு ஜனநாயக் விரோதமென்று கூற முடியும்?" என்றார் ஒரு ஜே.வி.பி. முக்கியஸ்தர்

ஜே.வி.பி. இம்முறை நடந்து முடிந்த தேர்தலில் தம்மை மூன்றாவது சக்தியாகவும், பெரும் பலத்தை நோக்கி தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு கட்சியாகவும் காட்டியுள்ளது. இந்த நிலையை எட்ட மிகுந்த நெருக்கடிகளை எதிர்கொண்டதாகச் சொல்கிறார்கள் அவர்கள்.

### ஜேவிபியின் வளர்ச்சி: அதிகார வர்க்கத்துக்கு அச்சம்!

ஜே.வி.பி. மக்கள் செல்வாக்கை பாரிய அளவு திரட்டிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களிலெல்லாம் அவ் இலக்கை அடையவிடாமல் செய்ய அதிகார வர்க்கம் ஒவ்வொரு முறையும் தமது அரச அதிகார இராணுவ இயந்திரத்தை உயர்ந்தபட்சம் பாவித்து ஒடுக்கிய பல சந்தர்ப்பங்கள் இலங்கையில் நடந்துள்ளது.

### தலைமறைவுக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட முதற் சந்தர்ப்பம்

ஜே.வி.பி. 1967இல் உருவாக்கப்பட்டு அதன் கீழ் பலர் அணிதிரண்டு கொண்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில்தான் அன்றைய டட்லி அரசாங்கம் நடக்கப்போகும் 1970ஆம் ஆண்டு தேர்தலில் முக்கிய சக்தியாக ஜே.வி.பி.யினர் ஆகிவிடுவார்களோ, தமது அதிகார இருப்புக்கு சவாலாக அமைந்து விடுவார்களோ என்ற பயத்தில் "சேகுவரா பியுரோ" என்ற விசேட புலனாய்வுப் பிரிவை அமைத்து பீதியை கிளப்பியதுடன், விஜேவீர உட்பட பல உறுப்பினர்களையும் சிறையிலடைத்தது. 1970ம் ஆண்டு தேர்தலில் டட்லி அரசாங்கம் தோல்வியுற்று ஸ்ரீ.ல.சு.க தலைமையிலான ஐக்கிய முன்னணி ஆட்சியமைத்த போது மீண்டும் டட்லி வழியையே கடைப்பிடித்து ஜே.வி.பி.யை அடியோடு அழிப்பதற்கான சகல சூழலையும் உருவாக்கியிருந்தது அது.

விடுதலை செய்யப்பட்ட விஜேவீர தலைமையில் நாடெங்கிலும் நடத்தப்பட்ட கூட்டங்களில் பெருந்தொகையான மக்கள் அலையை கண்டு அஞ்சிய சிறிமாவோ தலைமையிலான அரசாங்கம் "அவசரகாலச் சட்டத்தை அமுல் செய்வது, ஜே.வி.பி. இளைஞர்களை அநாவசியமாகக் கைது செய்வது, மரணப்பரிசோதனையின்றி பிணங்களை எரிப்பதற்கான சட்டங்களை கொண்டுவருவது போன்ற பணிகளை செய்யத் தொடங்கியது.

தற்காப்புக்காக தலைமறைவை நோக்கித் தள்ளப்பட்ட ஜே.வி.பி.யானது அரசைக் கவிழ்ப்பதற்கான ஒரு கிளர்ச்சியை செய்யும் நிலைக்கும் தள்ளப்பட்டது. இறுதியில் 1971 ஏப்ரல் கிளர்ச்சியும் வெடித்து இருபதினாயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கொல்லப்பட்டதுடன் பலர் கைது செய்யப்பட்டார்கள். 1977இல் அவசரகாலச் சட்டம் நீக்கப்படும் வரை ஜே.வி.பி.யின் பகிரங்க செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்திருந்தது. 1977இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் "படுகொலை ஆட்சியை" கண்டித்துப் பதவிக்கு வந்த ஜே.ஆர் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதாக பாசாங்கு செய்ததுடன், பல ஜே.வி.பி இயக்கத்தவர்களை விடுதலை பெறவும் செய்தார். ஆனால் 1981 மாவட்ட சபைத் தேர்தலிலும், 1982 ஜனாதிபதித் தேர்தலிலும் ஜே.வி.பி. மூன்றாவது சக்தியாக இனங்காணப்பட்டபோது தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கினார்.


### தலைமறைவுக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட இரண்டாவது சந்தர்ப்பம்

தமது அரசாங்கத்தாலேயே தூண்டப்பட்ட 1983 யூலை இனக்கலவரத்தை ஜே.வி.பி.யின் மீது சுமத்தியதுடன் ஜே.வி.பி., கம்யூனிஸ்ட் கட்சி, நவ சமசமாஜக் கட்சி ஆகிய மூன்றையும் தடை செய்தது ஜே.ஆர்.அரசு.

ஜனநாயக ரீதியில் செயற்பட்டு வந்த ஜே.வி.பி.யால் இதற்கு எதிராக எதுவும் செய்ய இயலவில்லை. தம்மை பயங்கரவாதிகளாகவும், இனக்கலவரத்தை தூண்டுபவர்களாகவும் அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி பாரிய அளவு செய்த பிரச்சாரத்தை முறியடிக்க எந்தவித வாய்ப்புமற்றவர்களாக இருந்த ஜே.வி.பி.யால் மீண்டும் தலைமறைவை மேற்கொள்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. பல இளைஞர்கள் ஜே.வி.பி.யினர் என்ற பேரில் தொடர்ந்தும் கைது செய்யப்பட்டனர்.

பாதுகாப்புப்படையினரின் அட்டூழியங்களால் நிலை தடுமாறிய ஜே.வி.பி. தற்காப்புக்காக ஆயுதம் ஏந்தவும் நிர்ப்பந்திக்கப்பட்டது. பிரேமதாச பதவிக்கு வந்த போது ஜே.வி.பி.யினர் மீதான அடக்கு முறை பாரிய அளவு கட்டவிழ்க்கப்பட்டன. இதன்போது ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் வீதிகளிலும் வதைமுகாம்களிலும் கொலை செய்யப்பட்டார்கள். ஜே.வி.பி.யின் மத்திய குழுவில் சோமவங்கச அமரசிங்க தவிர்ந்த அனைவரும் (அதன் தலைவர் விஜேவீர உட்பட) கொல்லப்பட்ட பின் மீண்டும் ஜே.வி.பி.யின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தன.





### ஜே.வீ.பீ.யின் மீள்வருகை

1994இல் அவசரகால சட்டம் நீக்கப்பட்ட போது ஜே.வி.பி.யின் மீதான தடையும் இயல்பாக நீங்கியது. 1994 பொதுத் தேர்தலில் போட்டியிட்டு ஒரு உறுப்பினரையும் பாராளுமன்றத்துக்கு அனுப்பினார்கள். 1994 ஜனாதிபதித் தேர்தலின் போது "நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை தான் பதவிக்கு வந்தால் ஒழிப்பதாக சந்திரிகா வாக்குறுதியளித்ததைத் தொடர்ந்து அத்தேர்தலிலிருந்தும் விலகிக்கொண்டனர். ஆனால் பதவியிலமர்ந்து இன்று இரண்டரை வருடங்கள் கடந்தும் அந்த ஜனாதிபதிமுறையை நீக்காது ஏமாற்றிவிட்ட சந்திரிகாவை சாடி பல பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் குறுகிய காலத்தில் பல்கலைக்கழக மட்டத்திலும் தென்னிலங்கையில் கிராமப்புறங்களிலும் பல்வேறுபட்ட பிரச்சார செயற்பாட்டு நடவடிக்கைகளால் வேகமாக செல்வாக்கு பெற்று வருகிறது ஜே.வி.பி.

இதனைக் கண்ணுற்ற சந்திரிகா அரசு மீண்டும் கடந்த காலங்களைப் போலவே ஜே.வி.பி.யினரை பயங்கரவாதிகளாக காட்ட பல்வேறுபட்ட சூழலை தமது செல்வாக்கையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி உருவாக்கியது. 1970இல் எவ்வாறு டட்லி, சிறிமாவோவால் ஜே.வி.பி. தலைமறைவுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டதோ அதனை மீண்டும் நினைவுக்கு கொண்டுவரும் வகையில் அண்மைய செயற்பாடுகள் உள்ளன.

### பொ.ஐ.மு. அரசாங்கத்தின் சூழ்ச்சி

குறிப்பாக தென்னிலங்கையில் நடந்த சில கொலைகளுக்கான பழிகள் ஜே.வி.பி.யினர் மீது சுமத்தப்பட்டன. இவற்றுக்கு அரசாங்கத்துக்கு ஆதரவான சில "மாற்றுப் பத்திரிகை"களும் துணை போயின. அப்பத்திரிகைகள் இவற்றுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை வடக்கில் நடத்தப்பட்ட எந்த அரச படுகொலைகளுக்கும் கொடுக்கவில்லை என்பதும் முக்கியமானது.

இதைத் தவிர இனவாத முத்திரை குத்தப்பட்டு பிரச்சாரப்படுத்தப்பட்டது. ஜே.வி.பி. இயக்கம் இனவாதத்துக்கு அப்பாற்பட்ட ஒன்றல்ல என்பது உண்மையே. மரபு மார்க்சீயப் பார்வையில் இருந்து கொண்டே புதிய தேசியவாத சிந்தனைகளைக் கூட உள்வாங்க மறுக்கின்ற குணாம்சங்களைக் களையவில்லை என்பதும் உண்மையே. ஆனால் இக்குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் சந்திரிகா அரசாங்கம் சிங்கள பௌத்த பேரினவாதத்தை பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டே, அவற்றை அதிகாரத்தைப் பாவித்து செயற்படுத்திக் கொண்டே இன்னொரு தரப்பினரைப் பற்றி கூறுவது தான் கேலிக்கூத்தான விடயம்.

இக்குற்றச்சாட்டைத் தவிர நாட்டில் பல்வேறு இடங்களில் பிடிபட்ட கொலைக்கும்பல்களுக்குச் சொந்தமான ஆயுதங்களை அவை ஜே.வி.பி.யினரதே என்று குற்றஞ்சாட்டியதுடன் பல கொள்ளைச் சம்பவங்களையும் ஜே.வி.பி.யினர் மீது சுமத்தியது.

அது தவிர பாதுகாப்பு பிரதியமைச்சர் அனுருத்த ரத்வத்தவினால் பகிரங்கமாகவே மிரட்டல்களுக்கும் உள்ளாயிற்று. "ஜே.வி.பி.க்கு எம்மிடம் சரியான மருந்துண்டு" என்றும் "ஜே.வி.பி. மீண்டும் வளர்வது ஆபத்து" என்றும் பல்வேறு இடங்களில் பேசப்பட்டது.

இம்முறைத் தேர்தலிலும் கூட ஜே.வி.பி.யினர் பேரில் விநியோகிக்கப்பட்டிருந்த அனாமதேய துண்டுப் பிரசுரங்களை, அவை தமது அல்ல என்பதை மக்கள் முன் சொல்ல ஜே.வி.பி.யினர் மிகவும் சிரமப்பட்டிருந்ததையும் காண முடிந்தது.

தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட போது பெப்ரவரி 17ம் திகதியன்று பொலிஸ் தரப்பினரால், போட்டியிடும் ஜே.வி.பி. வேட்பாளர்கள் பற்றிய தனித் தனியான தகவல் கோவைகள் தயாரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எந்தவொரு கட்சிக்கோ குழுவுக்கோ இல்லாத இந்த புதிய விதியை கடுமையாக ஜே.வி.பி.யினர் சாடியிருந்தனர். தம்மை பழைய பாணியில் நசுக்க இந்த அதிகார வர்க்கம் முயற்சி செய்வதாகவே ஜே.வி.யினர் அறிவித்தனர்.

இம்முறை தேர்தலில் ஜே.வி.பியினர் 224 தொகுதிகளில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்த போதும் அவற்றில் 32 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. ஏற்கெனவே ஐ.தே.க மற்றும் பொ.ஐ.மு ஆகியவற்றின் நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களில் 20ஐ மீளவும் ஏற்றுக்கொண்ட தேர்தல் திணைக்களம் ஏன் தமது ஒரு வேட்பு மனுவைக் கூட ஏற்கமுடியாது போனது எனக் கேள்வி எழுப்பியதோடு, அவற்றை நிராகரித்ததற்கான காரணங்களும் கூட தம்மிடம் அறிவிக்கப்படவில்லை எனவும் ஜே.வி.பி.யின் அரசியல் பத்திரிகையான "நியமுவா" தெரிவித்திருந்தது.

இத்தேர்தலில் ஜே.வி.பி. பெற்ற வெற்றியானது நிச்சயம் ஜே.வி.பி. கூட எதிர்பார்த்திராதது தான். ஆனால் தமது "கொள்கைகளுக்காக மக்கள் அளித்த வாக்குகளே இவை" என்ற ஜே.வி.பி.யின் கருத்து கேள்விக்குரியதே. ஏனெனில் ஐ.தே.க.வின் மீது வெறுப்புற்று பொ.ஐ.முவுக்கு வாக்களித்தவர்கள், அதிலும் இன்று விரக்தியுற்ற நிலையில் இரண்டுக்கும் எதிரான ஒரு தரப்பை பலப்படுத்த வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்ததையும் பெருமளவு காணமுடிந்தது. அது தவிர ஏனைய எந்த இடதுசாரி இயக்கங்கள் மீதும் இன்று எவ்வித நம்பிக்கையையும் கொள்ள முடியாத அளவுக்கு போய்விட்டதால் ஓரளவு நம்பிக்கை தரத்தக்க அமைப்பாக இருப்பது இது மட்டுமே என்ற கருத்துடையவர்களும் பரவலாகக் காண முடிந்தது.

தமிழ், மற்றும் மலையக மக்களில் பெரும்பாலும் ஜே.வி.பி. மீதான கசப்புணர்வையே காணமுடிந்தது. அதனை தேர்தல் முடிவுகளிலிருந்தும் ஓரளவு இனங்காணலாம்.

### ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் நம்பிக்கையீனம்

தாம் நேரடியாகவே முகங் கொடுத்து வரும் இனப்பிரச்சினை குறித்தும், தம்மீதான அரச பயங்கரவாதம் குறித்தும் ஆரோக்கியமாக எதுவும் கூறாதது மட்டுமல்லாமல் அரசு திணிக்க முயலும் ஒட்டை தீர்வுத் திட்டத்தைக் கூட "நாட்டை துண்டாடும் தீர்வுப் பொட்டணி" யென்று மேலும் அவ் ஓட்டையை விரிசலாக்க நிர்ப்பந்திக்கும் போக்கை சிறுபான்மை தேசிய இனங்கள் ஏற்றுக்கொள்ளுதல் சாத்தியமில்லை.

எப்படியோ இம்முறை ஜே.வி.பி.யினர் பெற்ற பரவலான வெற்றியானது அதற்கெதிராக வரும் நெருக்கடிகளை முறியடித்து மக்கள் மத்தியில் ஜனநாயக பூர்வமாக (சட்டரீதியாக) செயல்படுவதற்கு பெரும் பலமாக இருக்கும். ஏற்கெனவே ஜே.வி.பி. ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கூடாக கிடைக்கப்பெற்ற வளங்களைப் பயன்படுத்தி வருகின்ற முறையைப் பார்த்தால் அமைப்பின் வளர்ச்சிக்கும் மக்கள் மத்தியில் செயற்படவும் இந்த 101 உறுப்பினர் பதவிகளையும் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் உண்டு.

ஆனால் இதுவே ஜே.வி.பி.யை ஏனைய இடது சாரிக் கட்சிகளைப் போல பாராளுமன்றவாதத்துக்கு இட்டுச் சென்று அதுவே இருப்பாகி விடுமோ என்பது தான் கேள்வி. அது தவிர இந்தப் பதவிகளினால் கிடைக்கப் பெற்ற வளங்களும் கூட ஒடுக்கப்படும் தேசிய இன விடுதலைக்கு விரோதமாக பயன்படுத்தப்படமாட்டாது என்பதற்கான எவ்வித உத்தரவாதமுமில்லை.

www.tamilarangam.net



## மாற்று -நாடகக்கருத்தரங்கு:

# சில அவதானிப்புகளும் கேள்விகளும்!

மார்ச் 5ம்திகதி கொழும்பில் 'மாற்று' என்ற குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட மாதாந்தக் கருத்தரங்கின் முதலாவது கருத்தரங்கத் தொடரில் கலந்து கொண்டேன். நாடகம் பற்றியதாகவே அக் கருத்தரங்கு அமைக்கப்பட்டிருந்தது. அங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்களைப் பற்றி சில கேள்விகளை முன்வைப்பதுடன் அவை தொடர்பாக திறந்த மனதுடன் கருத்துப் பரிமாறல்களை மேற்கொள்வதற்கு ஒரு தளம் அமைப்பதையும் நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரையை வடிவமைக்க முயல்கிறேன்.

விஜித்சிங், ஜெய்சங்கர், சிதம்பரநாதன் ஆகிய மூவரும் மூன்று நிலைகளில் தத்தமது கருத்துக்களை முன்வைத்தனர். அதனை ஒட்டி கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. விஜித்சிங், மக்கள் அரங்கு என்ற தலைப்பில் தனது கருத்துக்களை முன்வைக்கின்ற போது, ஏற்கெனவே எம்மத்தியில் உள்ள நாடகம் சம்பந்தமான கோட்பாடுகளை கேள்விக்கு உட்படுத்துதல் மூலமும், சமூகத்தில் காணப்படுகின்ற முரண்பாடுகளின் வெளிப்பாடாகவும், நாடகக் கோட்பாடுகளினால் உருவான தடைகளை முடிந்த அளவில் களைவது அல்லது பூச்சிய நிலைக்கு கொண்டு வருவதன் மூலமும் நாடகமானது மக்கள் அரங்காக பரிணமிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். நாடகத்தினை நாடகக் கோட்பாடுகளின் வழி வைத்து மாத்திரம் பார்க்காமலும் அங்கிருந்து அதனை மீட்டெடுத்து அடுத்த தளத்தில் மக்களுக்கான அரங்காக அதனை கொண்டு செல்ல வேண்டும் என்றும் கூறினார். மேலும் நெறியாளர், பார்வையாளர் என்ற பதங்களை மீள்பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் என்றும், அவற்றுக்குப் பதிலாக 'நாடகப் பங்காளிகள்' போன்ற பதங்கள் வடிவமைக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார். அதாவது அதிகாரத்திற்கு எதிரான அரங்காகவே மக்கள் அரங்கினை அவர் காண்கின்றார்.

இதன் பின் ஜெய்சங்கரின் கட்டுரை பௌசரினால் வாசிக்கப்பட்டது. 'தகவல் யுகமும் ஈழத்தமிழர் அரங்கும்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையின் சாராம்சத்தினைப் பார்ப்போமானால் வளர்ந்து வருகின்ற நவீன இலத்திரனியல் யுகத்தில் தொலைதொடர்புச் சாதனங்கள் அதிகார வர்க்கத்தின் கைகளிலேயே காணப்படுவதினாலும், அதிகாரத்தின் மையங்களாக மேற்குலக நாடுகள் தொழிற்படுவதாலும் அவர்களின் ஒரு வகையான அடக்குமுறைக் கருவியாகவும் சிந்தனைகளை திணிக்கின்ற இயந்திரமாகவும் தொலைத் தொடர்பு சாதனங்கள் காணப்படுகின்றன. மேலும் இன்று நவீன உலகில் முன்வைக்கப்பட்டுள்ள 'பூகோளமயமாதல்' என்ற எண்ணக் கரு தனிப்பட்ட பண்பாட்டுக் கோலங்கள் அழிக்கப்பட்டு அதிகார வர்க்கத்தின் பண்பாட்டுக் கோலங்கள் முதன்மைப் படுத்தப்படுவதற்கு அடிப்படையாக அமைவதையும் கோடிட்டுக் காட்டினார். மேலும் இத்தகைய மேலாட்சிகளுக்கு எதிராக / மாறாக கீழைத்தேய பண்பாட்டுத் தன்மைகளைப் பிரதிபலிப்பதாகவும் மக்களுடன் அவர்களின் பாசையில் தொடர்பு கொள்ளக் கூடிய கருவியாகவும் அரங்கு காணப்படுகிறது. எனவே மேற்குலக ஆதிக்கம், அதிகார வர்க்கத்தின் தொலைத் தொடர்பு ஆதிக்கம் ஆகியவற்றில் இருந்து விடுபட்டு சுயதேடலின் நாதமாக அரங்கு இந்நவீன விஞ்ஞான யுகத்தில் காணப்படுகின்றது. மேலும் அரங்கானது பல்வேறு சிக்கல்களை, வேறுபாடுகளைக் களைகின்ற அதே வேளையில் தனது தனித்துவத்தையும் பேணிக் கொண்டு சாதாரண மக்களின் அரங்காகக் காணப்படும் எனவும் குறிப்பிடுகின்றார்.

மூன்றாவதாக சிதம்பரநாதன், சமூக மாற்றத்திற்கான அரங்கு பற்றிச் சில கருத்துக்களை முன்வைத்தார். இவரின் கருத்துப்படி அதிகாரத் தன்மை என்பதும் ''நான் பெரியவன், நீ சிறியவன்'' என்ற எண்ணக்கருவும் ஒவ்வொரு மனிதரிடமும் உண்டு. எனவே அதன் அடிப்படைகளிலேயே முரண்பாடுகள் தோற்றம் பெறுகின்றன. இங்கு இம் முரண்பாடுகளையும், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில் நிலவுகின்ற முரண்பாடுளையும் களைவதன் மூலமும், உணர்ச்சி பூர்வமாகத் தமது கருத்துக்களை திறந்த மனத்துடன் பரிமாறிக் கொள்கிறதான அரங்கே சமூக மாற்றத்திற்கு உதவ முடியும்; இதன் அடிப்படையிலேயே சமூகமாற்றத்திற்கான அரங்கு உருவாகின்றது என்கின்றார். மேலும் அரங்கு என்பது இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்ற கருத்து ஒரு மாயை என்பதுடன் அரங்கு என்றால் எப்போதும், எப்படியும், எங்கும் நிகழ்த்தப்படலாம் என்றும் விபரிக்கின்றார். ஆகவே அதிகாரத்திற்கு எதிரான அரங்காகவும் மனிதர்களுக்கிடையே அதிகார முரண்பாடுகளை களைந்து திறந்த மனதுடனான கருத்துப் பரிமாறல்களை மேற்கொள்ளவும் சமூக மாற்றத்திற்கான அரங்கு வழிகோலுகின்றது என்பதுடன் நாடகம் மனித இதயங்களுடன் பேசுகின்றது என்ற கருத்தினையும் முன்வைத்து; இருப்பினும் அது எவ்வளவு தூரத்திற்கு சாத்தியப்படுகின்றது என்ற வினாவையும் கூடவே எழுப்பினார்.

மேற்குறிப்பிட்ட அடிப்படைகளின் சாராம்சத்தினை மது சுருக்கிக் கூறுகின்ற போது, தமிழில் உருவான அரங்குகளில் பெரும் பாலானவை ஏதோவொரு வகையில் அதிகாரத்திற்கு எதிராகவே உருவானவை. எமது இன்றைய நாடக வளர்ச்சிக்கு அல்லது சிந்தனைக்கு இவைகளும் வித்திட்டன. எனவே இவற்றினை முற்று முழுதாகத் தூக்கி எறிந்து விட முடியாது. கனமான மீள்பரிசீலனை அவசியம் எனக் கூறினார்.

இவற்றின் அடிப்படையில் நான் சில கருத்துக்களையும் கேள்விகளையும் உங்கள் முன்வைக்கின்றேன். சமூகமாற்றத்திற்கான அரங்காக அல்லது மக்களுக்கான அரங்காகவே சகல அரங்க அளிக்கைகளும் இருந்து வந்துள்ளன. அது கூத்து தொடக்கம் நவீன நாடகம் வரை விரிந்துள்ளது. விஜித் சிங் கூறிய 'அவர்களது அரங்கு' மக்களின் அரங்கு எனின் அதைத் தவிர்ந்த ஏனைய அரங்க அளிக்கைகள் மக்களுக்கு புறம்பான அரங்குகளா என்பது ஒரு கேள்வி. மேலும் ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்துக்களையும் விவாதங்களையும் முன்வைக்கின்ற போது தங்களுடைய கருத்து நிலையில் இருந்து விடுபட்டு வேறு ஒரு தளத்தில் இருந்து விமர்சனங்களை முன்வைக்கவோ அல்லது உள்வாங்கவோ இல்லை என்பது என் கருத்து. இவர்கள் தங்களுடைய கருத்து நிலை (Ideology) கட்டுப்பாடுக்குள் குறுகிக் கொண்டவர்களாகவும் இருப்பதாகப்படுகிறது. தாமே தொடக்கப்புள்ளி என்ற எண்ணத்தினையும் கொண்டு கருத்துக்களை முன்வைக்கின்ற போது அங்கு நாடகம் பற்றிய கலந்துரையாடலை அடுத்த தளத்திற்கு கொண்டு செல்ல முடியாமல் போய்விடுகின்றது. மேற்கூறிய விடயங்களைத் தொகுத்துப் பார்க்கும் போது எனக்குத் தோன்றியது என்னவெனில் விஜித்சிங்கோ, ஜெய்சங்கரோ, சிதம்பரநாதனோ ஒரே கருத்தினைத் தான் முன் வைத்தனர். அதன் அடிப்படை ஒன்றாகவே இருந்த போதும் வெவ்வேறு கண்ணோட்டங்களில் பார்க்கப்பட்டன. எனவே எல்லோரும் ஒன்றைத்தான் சொல்

→18

பேரை வாவித்தண்ணீர் 'லைம் கிரஷ்' கலராக இருப்பதைப் போன்று, அம்பத்தளை நீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள தண்ணீர் அண்மையில் ''போர்ட்டெலோ'' கலராக மாறிவிட்டது. வானொலியும், தொலைக்காட்சியும் ஊளையிட்டன. நகரத்துக்கு உடனடியாக நீர்வெட்டு அமுல்படுத்தப்பட்டது. வெக்கை மிகுந்த இக்காலத்தில் மிகவும் சிரமப்பட்டுப்போய்விட்டோம். கூடவே வதந்திகள் வேறு. சயனைட்டாம்... ஆசனிக்காம்... அதுவாம்... இதுவாம்... என்று மக்கள் பதறினர். அலறியடிப்பதே எமது அன்றாட வாழ்க்கையாகப் போய் விட்டது இன்று!

பியகம சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள தொழிற்சாலை ஒன்று சுதந்திரத்தை அளவுக்கதிகமாக எடுத்துக் கொண்டு சாயம் கலந்த கழிவுநீரை பெருமளவில் களனி கங்கையில் கலந்து விட்டதால் களனி கங்கை 'களு'கங்கையாக மாறியுள்ளது என புலனாய்ந்து கண்டு பிடித்தார்கள் அதிகாரிகள். உயிராபத்து இல்லையென்று அபயமளித்தார் அமைச்சர். அப்பாடா நிம்மதி என்று பெருமூச்சு விட்டோம் நாங்கள்!

இனிமேல் இவ்வாறு எதுவும் நிகழாது எனவும் இந்த அனர்த்தத்துக்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் உறுதியளித்தார். பெருமளவில் அசுத்தம் ஆற்றில் கலந்தபடியால் தான் இவ்விபரீதம் உணரப்பட்டது. வழமை போல சிறிதளவு அசுத்தமே ஆற்றில் கலந்திருந்தால் நாம் அறிய வழியேதுமில்லை.

தொலைக்காட்சியில் இடையிடையே சுற்றாடல் மாசடைவதைப் பற்றியும், அதன் காரணிகள் பற்றியும் விவரணங்கள் ஒளிபரப்பாவது உண்டு. புத்திசாலித்தனமாக வேறு 'அலைவரிசை'க்கு மாற்றிவிட்டு நானும் நண்பன் 'பராக்கிரமபாகு'வும் அரசியல் பேசுவோம். ''இந்த அழகிய குட்டித்தீவுக்கு நூற்றியெட்டு அரசுகள் எதற்கு? ஒன்றுமே உருப்படியாக நடக்காது பார்த்தாயா!'' என்று தன் கட்சிக்கு வலுசேர்ப்பான் நண்பன். அவனையும் அரசாங்கத்தையும் மனதுக்குக்குள் வைதபடியே ஜன்னல் வழியாக எட்டிவெற்றிலைச் சாற்றை வீதியில் துப்புவேன் நான். துப்புக்கெட்ட ஆண்களாக எங்கள் மீது கூழ் முட்டை அடிக்கும் திருப்தியுடன் வெற்று முட்டைக் கோதுகளை அதே ஜன்னல் வழியாக தெருவில் வீசுவாள் 'பெண் நிலைவாதியான' எனது மனைவி. குழந்தையோ தனது உடைந்த பொம்மையை அதே தெருவில் விட்டெறிந்து விட்டு அதன் மீது சிறுநீர் கழிக்கிறது. எவ்வளவு பொறுப்புள்ள பிரஜைகள் நாம்!




எமது வாழ்வில் இன்பமும் நிம்மதியும் குறைந்து கொண்டே போவதாகக் குறைபட்டுக் கொள்கிறோம். எதையோ இழந்து கொண்டே வருவதாக உணர்கிறோம். எதை? மண்மீதான எமது காதலையும் கடமையையும் நாம் இழந்து கொண்டு வருகிறோம். எமது கவனமெல்லாம் காசு மீது! காசுக்காக எதையும் செய்வதற்கு நாம் தயார். களனிகங்கை களுகங்கையாக மாறாமல் என்ன செய்யும்?

காடுகளுக்குள்ளும் ஊர்களுக்குள்ளும் குண்டுகள் வெடித்து எல்லாம் சாம்பலாகின்ற போது 'ஜயவேவா' என்கிறோம். எப்படி மழை பொழியும்? ஏன் நீர்வெட்டும் மின்வெட்டும் வராது? எமக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனப் பிழையானால் போதும் என்கின்ற அளவுக்கு ஜனநாயகவாதிகள் நாங்கள்! சமாதானம எப்படி வரும்? இன்பமும் நிம்மதியும் எப்படி வரும்?

'அகழ்வாரைத் தாங்கும் நிலம்' என வழங்கிய பொய்யா மொழிப்புலவரின் வார்த்தைகள் பொய்த்து வருகின்றன. அகழ்வார் மீது நிலம் உமிழத் தொடங்கி விட்டது!

சிவராம காரந்தை வாசகர்கள் அறிந்திருப்பீர்கள். அவரது 'மண்ணும் மைந்தரும்' என்ற ஒப்பற்ற நாவலை மறக்க முடியுமா? காரந்த் தற்போது நாவல்கள் எழுதுவதில்லை. இயற்கை மீது வஞ்கம் புரியும் எவர் மீதும் அவரது பேனா கண்டனங்களைப் பொழிகிறது. நுட்ஹம்சனை நாம் அறிவோம். அவரது 'நிலவளம்' என்னும் நாவலையும் போற்றுகிறோம். ஆனால் நாவல் எழுதுவதற்குப் புறம்பாக அவர் மண்ணுக்காக ஆற்றிய பணிகளை அறிய மாட்டோம். மஹ்பூப் நெறிப்படுத்திய ''மதர் இன்டியா'' எனும் திரைப்படத்தை திரும்பத்திரும்பப் பார்க்கிறோம். நௌசாத் இன் மோகன இசையையும், லதா மங்கேஸ்காரின் காந்தர்வ கானத்தையும் சுனில்தத் இன் கம்பீரத்தையும், நர்கீஸ் இன் எழிலுருவத்தையும் ரசித்தபடி மயங்கிக் கிடப்பதை விடுத்து அத்திரைப்படம் எமக்குக் கூற விளையும் செய்திகளைக் கிரகிக்க நாம் முனைந்தோமா?

எங்களது எழுத்தாளர்களும் எழுதிக் குவிக்கிறார்கள். குடுமிப்பிடி சண்டை போடுகிறார்கள். மற்றவர்களது வேட்டியை உருவுவதில் குறியாயிருக்கிறார்கள். தமது சாதனைகளைப் பட்டியலிடுகிறார்கள். நாவல், சிறுகதை, கவிதை... கவிதை சிறுகதை, நாவல்... சிறுகதை, கவிதை,நாவல்... இவற்றைத் தவிர வேறு எதையும் சீந்தியும் பார்ப்பதில்லை.

ஒரு வேளை ஏனையவற்றுக்கும் பொற்கிழிகளும், புகழ்மொழிகளும் உறுதிப்படுத்தப்படும் வரை பொறுத்திருக்கிறார்களோ? என்னவோ!

பிழைக்கும் வழி தெரிந்தவர்கள்!!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒற்றையடிப்பாதையில் எதிராளியைக் கண்டதும் சிரிப்பதா, விடுவதா என்று மனம் குழம்பி தீர்மானமில்லாமலே அண்மித்ததும்; கோபம், ஆத்திரம், இயலாமை, சலிப்பு இன்னும் என்னென்னவோ மண்டைக்குள் சொரிந்திருக்க முகம் மலர முயற்சி செய்தது; எதிராளியும் சிரிப்பை வரவழைத்துத் தான் விலத்திச் சென்றார்.

ஒரு காலம் எவளத்தைப் பேசினோம்? எவளத்தை ரசித்தோம். இறக்கை முளைத்து எங்கெங்கெல்லாமோ பறந்தோம். அதுவும் ஒரு காலம்.

இப்போது கதைக்கலாம் என்றால் எப்படி? மனத்திரை விரிகிறது.

‘ஹெலோ எப்படி?’

‘இருக்கிறம்’

‘சிலருக்கு சில நேரம் ‘இருக்கிறம்’ என்றத சொல்ல வேண்டியிருக்கு என்ன?’

அவுக்கென அமைதி கௌவ்விக்கொள்கிறது. நிஷப்தத்தினூடே விரிந்த மனத்திரையில் நினைவுகள் கரைபுரள ஆட்டம் நடக்கிறது. சதுரங்க ஆட்டத்தில் எனக்கு ‘செக்’.

இதுதான் எனக்கு முதன்முதலான ‘செக்’ அல்ல. ஆறாவதோ, ஏழாவது முறை வீழ்த்தப்பட்டதுக்குச் சமனாக ‘செக்’ ஆகவோ, இதற்கு போக முதலே ஆட்டத்தைக் குழப்பியோ, பொழுதைக் கழிப்பதற்காக ஆட்டத்திலிறங்கி வேண்டுமென்றே ‘செக்’குக்கு ஆளாகியோ, தொடர்ந்த ஆட்டத்தில் அகப்புறச் சூழல்கள் தலையை நீட்ட குழம்பிய ஆட்டம், கிட்டத்தட்ட ‘செக்’காகத்தான். ஆட்டங்கள் எல்லாமே.

ஆடின ஆட்டம் அப்படி? மேடையில் மட்டுமில்லை, தரையிலும் தான். வீட்டில், றோட்டில், போறபோற இடங்களில் எல்லாம் அருமையான ஆட்டம். முகம் தெரிந்தவர்களுக்கு ஒரு ஆட்டம், தெரியாதவர்களுக்கு ஒரு ஆட்டம்.

முன்னது மனித மனம் கொண்ட ஆட்டம். பின்னது சதிராட்டம்.

இந்த இரண்டு ஆட்டங்களும் எனக்கு சரிவராது போலத்தான் கிடக்கு. எனக்கு மட்டுமில்ல எல்லோருக்கும் அப்படித்தான். தொடரும் ‘செக்’ என்னை ஒரு ஆட்டத்தை மட்டும் செய் என்பது போலத்தான் பணிக்கிறது. உண்மையிலேயே முன்னதான ஆட்டத்தில் தான் முழுதுமாக கவனம் செலுத்துகிற வேளை, ஆட்டத்தின் அவசரம் வேறொரு இடத்தில், தருணத்தில் பின்னதான ஆட்டத்தை சங்கடப்படுத்தி ஆடவைத்து விடுகிறது. பிறகென்ன ‘செக்’.


மொத்தத்தில் எனக்கான ‘செக்’கை நானே பிறரின் முடிவாக எடுக்க வைத்துவிடுகிறேன். ஆட்டத்தின் முதலோ ஆட்டத்தின் போதோ இதையெல்லாம் யோசிப்பதில்லை. ‘செக்’ முடிவு தெரிந்த பின்புதான் புலன்களும் ஆராயத் தொடங்குகிறது. ஆராய்வதிலும் என்ன பலன்? ஒரு தருணத்தில் தோல்வி என்றால், மற்றொரு தருணத்துக்காக காத்துக்கிடக்க வேண்டியிருக்கிறது. கட்டாயமாக இது ஆடித்தீர்க்கப்பட வேண்டிய ஒன்று. இதற்கு விதிவிலக்கு நிறைய உண்டு என்பதிலும் பார்க்க அளாப்புவதற்கு நிறைய வாய்ப்புகளுண்டு.

என்னை எதிர்த்தாடுபவரை மிகவும் மானசீக மாக நேசித்துத்தான் ஆட்டத்தில் இறங்குகி றேன். சிலவேளை அந்த நேசிப்பு என் பலவீனத்தால் தான் என்று எதிராளி நினைக்கும் போதுதான் ஆட்டமே ஆட்டம் காண நேருகிறது. என்னுடைய நேசிப்பு ஐயத்துக்கிடமாக இருக்கலாம். ஆனாலும்?

இந்த ஆட்டத்திற்கு முதல் ஆடிய ஒரு ஆட்டத்தில் இருந்து சலிப்புற்று ‘செக்’ சொன்னேன். எதிராளியும் என் வாயால் வரட்டுமே என்று இருந்து விட்டு எழுந்து போய்விட்டார். பின்ன தான ஆட்டத்தை ஆடியதில் முன்னதான ஆட்டம் கிலிகொண்டிருந்தது. அந்த ஆறாத மனச் சகதியில் அடுத்ததற்கான ஆட்டம்.

அது வெள்ளைக் குதிரை. மேலத்தேய நடனத்தை ஆலாவனம் பண்ணுகிற அழகான குதிரை. வெண்பஞ்சு மேகங்கள் அதன் தலையை நிறைத்திருக்கும். கருவண்டு விழிகள் நிலை கொள்ளாது உருளும். அதன் அசைவுகள் அபத்தமாக இருந்தாலும் அழகாக இருக்கும். ஏனெனில், எனக்கு பிடித்ததாக இருந்ததால்! ஆட்டம் எப்பொழுது, எப்படி ஆரம்பமானது என்பதை விட ஆட்டம் தொடங்கிற்று. என்பதே முக்கியமானது.

நான் கறுப்பு அழகில்லை என்பதற்காக ஆட்டம் எனக்கு நிராகரிக்கப்படவில்லை. மேலத்தேய நடனத்தை அறிந்திருக்கவில்லை.




ச.ஜீவாகரன்

ஆனால் தெரிந்திருந்தேன். என்னசைவுகளில் வித்தியாசம் இருப்பினும் அவை ஏனோ முதன்மை பெறவில்லை.

வலிந்து கட்டிக்கொண்டு இறங்கிய ஆட்டம். முதலாடிய ஆட்டத்தின் அதிர்வு இருந்தாலும், முன்னதான ஆட்டத்தையே ஆடுவது, ஆடித்தீர்த்து விடுவது; பின்னதான ஆட்டத்திற்கு இனி இடமே இல்லை. இனி மனதைச் சகதியாக்கி எந்த ஆட்டமும் ஆடுவதில்லை என்ற வன்மம். சகதியைக் கண்டால் விலக்கி நீரைக் கண்டால் கழுவும் நிலை வேண்டாம். பாவம் பொல்லாதது.

மெல்ல மெல்ல பின்னதான அசைவுகள் நம்பமுடியவில்லைத்தான். புலன்கள் ஆராய் வதில் குதித்துவிட்டன. பின்னதும் முன்னதும் ஆட்டத்தில் குதித்து விட போட்டி போட்டன. ஒன்றை ஒன்று வெல்ல பலதரப்பட்ட காரண காரியங்களை முன்வைக்கும். ஆடுமனம் தடுமாறிப் போகும்.

‘‘உந்த ஆட்டம் சரிவராது. வெள்ளையின் பாய்ச்சலோ ஒரு திசையில். உன் நடையோ வயல் வெளியில். வெள்ளையோ நீ அறிந்த வரை எந்தப் பாவமும் செய்யாத அப்பிராணி. நீயோ பல களத்தில் மண்டியிட்ட துரோகி. உன் கைவிரல்களுக்கிடையில் நீண்டு வந்த வாளினால் எத்தனை மனங்களைச் சாய்த்தி ருக்கிறாய். அவை பேசாமல் மௌனம் கொண்டதால் நொந்து கொள்ளாது என்று நீ சொல்லும் நியாயம், அநியாயம். உன் வாளினால் அம்மனங்களை சாய்த்துக்கொள்ள ஆட்டத்தில் என்னென்ன திருகுதாளம் விட்டாய். அந்தத் திருகுதாளத்தைக் கூட உன்னால் ஒழுங்காக வெளிப்படுத்த முடியவில்லை. நீயெல்லாம் கதை சொல்கிறாய்!’’

‘‘வெள்ளையிடம் சகலதையும் ஒப்புவிக்கிறேன். சீவியத்தில் ‘செக்’ சொல்லாதவிடத்து சகலதையும் ஒப்பு விக்கிறேன்’’

‘‘உன் நலத்தைப் பார்த்தாயா? ‘செக்’ சொல்லாது உன்னை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளும் வரை உண்மைகளை நீ மறைக்கப் போகிறாய். ஏற்றதன் பின்னால் தெரியப்போகும் உண்மையால் உன்னை வெறுத்தாலும், காலம்பூராய் கட்டிக் கொண்டு அழவேண்டும் என்று நீ வகுக்கும் ஆட்டம் அபாரம்! நீ முன்னதான ஆட்டம்தான் என்று சொல்லிக்கொண்டு, பின்னதான ஆட்டத்தைத் தான் ஆடுகிறாய்’’

‘‘ஐயோ இல்லை. இதுவரை சொன்ன தொன்றையும் நீ நம்பவில்லையா?’’

‘‘சொன்னாய், இலைமறை காயாய் உன் காயங்களைச் சொன்னாய். அது ஒத்தடத்தை எதிர்பார்த்து நடந்தவை. இத்தோடு ஆட்டத்தை நிப்பாட்டு, எழுந்திரு, போய்விடு’’

தர்க்கம் நடந்தது இதில் என் நான் முந்திக் கொள்கிறது. விரோதமாக நடந்து கொள்ளப் போவதில்லை. ஏனெனில் ஆட்டம் அம்பலத் தில் நடக்கிறது. முன்னைய ஆட்டங்களெல் லாமே திரைமறைவு ஆட்டங்கள் தான்.

வெள்ளையின் அதிருப்தியும், என் திருப்தியும் ஒரு போதும் பொருந்தப் போவதில்லை. வெள்ளையின் அதிருப்தியை திருப்தியாக்கி என் வயல்வெளி நோக்கி திருப்பினால்?

‘‘திரும்பும், போய் மூஞ்சியை நிலத்தில் தேய்த்துக் கொண்டு வா போ’’

பொறுமையிழந்து போய் கதறி மறைந்த போது எனக்குள்ளே திரைமறைவு ஆட்டம் நின்று போக, ஆட்டம் அம்பலத்திலல்லோ நடக்கிறது. இப்பொழுது ஆட்டம் எனக்கும் குதிரைக்குமில்லை. குதிரைக்கும் என் சார்பானவர்களுக்கும் இடையில் என்பேரில்.

‘‘மனக்கோட்டை வேண்டாம்’’ - ‘‘செக்’’

‘‘அறியாத குதிரையை விட, தெரிந்த கழுதை மேல்’’

‘‘செக் - சொல்லுறன்னலே’’

‘போதுமடா நாயே’ மனம் குமுறிக்கொண்டி ருந்தது. திரைமறைவு ஆட்டங்கள் மேலெ ழுந்தன. ஒரு நாள் தெரிந்தோ தெரியாமலோ முன்னழகைக்காட்ட கண்களை பிடுங்கி வேறுதிசைக்குத் திருப்ப முடியவில்லை. ஆழ் மனப்பதிவுகள் மிகவும் ஸ்தூலமாக அலக்கழிக்கிறது.

நான் செய்யிறதற்கு நீ அவமானப்படுவது தான் நியதி என்றால் என்ன செய்ய முடியும். நீ சொன்ன படியே ஆட்டத்தை இடையில் நிற்பாட்டினேன். ஆட்டத்தை எப்படி? எப்போ? நிறுத்தினேன் என்பதல்ல முக்கியம். ஆட்டத்தை நிறுத்தினேன் என்பதே மூக்கியம்.

நப்பாசையும் இருந்தது. ஆட்டத்தில் வெற்றி கிடைத்தால் எழும் பிரச்சினைகளும் இருந்தது. மனதிற்கும் எனக்கும் ஒரு இழுபறி இருந்தது. ஆட்டத்தின் மீது காதலும் இருந்தது.

எல்லாம் முடிந்ததல்ல.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சோலைக்கிளியின் கவிதை பற்றிய விமர்சனம்:

# சில தவறான புரிதல்களும் விளக்கங்களும்!

மு.பொ.

சோலைக்கிளியின் கவிதைகள் பற்றி நான் எழுதியவற்றுக்கு எதிர்வினையாக சுவிஸ் ரவீந்திரன், சிவசேகரம், ஸ்ரீகணேசன் ஆகியோர் எழுதியிருந்தனர். எனது விமர்சனம் தொடர்பாக சிவசேகரம் சொல்லியவற்றிலிருந்த நிதானமும் அதன் வழிவந்த புரிதலும் ரவீந்திரனிடமோ, ஸ்ரீகணேசனிடமோ காணப்படாதது வருத்தத்திற்குரியதே. ஸ்ரீகணேசன், ரவீந்திரன், சிவசேகரம் ஆகியோரின் பதிலில் காணப்பட்ட பின்வரும் விஷயங்கள் தொடர்பாக சுருக்கமாகப் பதில் அளிக்கலாமென நினைக்கிறேன்.

1. சோலைக்கிளியும் ஸ்ரீகணேசன் குறிப்பிடும் படிமம், குறியீடு, உருவகம் சம்பந்தமாகவும்.
2. சோலைக்கிளி அஃறிணைப் பொருட்கள் பாவிப்பதும் அவை பற்றிய சொல்லாடல்கள் பற்றியும் நான் குறிப்பிட்டதை, ரவீந்திரன் ஸ்ரீகணேசன் தவறாகப் புரிந்து கொண்டமை தொடர்பாக.
3. சமூக, வரலாற்று இயக்கம் - இயங்கியல்
4. புதிய இனிவரும் இலக்கியம்.

தமிழில் இலக்கிய விமர்சனம் வளர்ச்சியடைந்துள்ளதோ இல்லையோ ஆனால் ஈழத்துத் தமிழக் கவிதை பற்றிய ஒரு வரன்முறையான விமர்சனம் இங்கு எழுதப்படவில்லை என்பது எவருக்கும் தெரியும். இந்நிலையில் 90களில் சோலைக்கிளி புதிய பாய்ச்சல் காட்டுகிறார் என்றால் 60களில், 70களில், 80களில் என்ன சாதனை எப்படியான சாதனை நடந்துள்ளது என்பது பற்றித் தெரிய வேண்டும். ஆனால் அப்படியான விமர்சன வெளிச்சங்கள் இங்கே இல்லை. இத்தகைய இருண்மையான - அறியாமைப் பின்னணியில் 90களில் சோலைக்கிளி முன்னவர்களைவிட சாதித்துள்ளார் என்று மொட்டையாக இரும்பொறை எழுதியது தர்க்கவழுவுடையதாகும். இவை பற்றி எல்லாம் கேள்விக்குள்ளாக்கும் முகமாகவே எனது விமர்சனம் அமைந்தது. மேலும் நான் சோலைக்கிளியின் 'நான் பாடப்பாடத்தான் வானம் நிலாச் செய்யும்' என்ற கவிதையை முதலில் நையாண்டி செய்யும் பின்னர் பாராட்டியும் முரண்படுவதாகவும் ஸ்ரீகணேசன் அவசர முடிவுக்கு வருகிறார். நான் எங்கேயும் முரண்படவில்லை. 90களில் 'புதிய வீச்சை' அக்கவிதை காட்டுகிறதா என்றால் அதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஆனால் இதுகாலவரை இருந்து வந்த வழமையான நல்ல கவிதைகளில் அதுவும் ஒன்று என்பதே எனது கருத்து. இதில் என்ன முரண்பாடு?

எனக்கு பதில் அளித்தவர்கள் எவரும் சிவசேகரத்தைத் தவிர நிதானமாக ஒன்றையும் சொல்லவில்லை. 'நீலாவணனும் சு.வியும் சேரனும் கொண்டு வந்த படிமங்களின் பாவனை சோலைக்கிளியிடம் முனைப்பாகத் தோன்றுகிறது' என்று ஸ்ரீகணேசன் முனைப்பைத் தடித்த எழுத்துக்களில் போட்டுவிட்டால் மட்டும் சோலைக்கிளி பற்றிய ஆய்வு சரியாகிவிடுமா? அல்லது அதனால் அவர் படிமக் கவிஞராகி விடுவாரா?

சோலைக்கிளியிடம் படிமம் முனைப்புப்பெறவில்லை. படிமம் முனைப்புப் பெற்றதே தருமு சிவராமுவிடந்தான். அவர் போல் படிமங்களையே கையாண்டு கவிதை எழுதியவர்கள் தமிழில் இல்லை என்றே கூறவேண்டும். அவரது படிமங்களுக்குச் சோடை போகாத ஒன்றைத் தான் நீலாவணனின் 'பனியின் விழிநீரில் காட்டினேன். சோலைக்கிளியிடம் முனைப்புப் பெற்றதெல்லாம் உருவகங்களும் குறியீடுகளுமே. இதோ சோலைக்கிளி-

'கட்டிலே கட்டிலே நீ குப்புறக் கிடப்பது எப்போது?' என்று ஆரம்பிக்கும் போதும்

'ஒரு நாயின் தோளில் ஒரு காகம் பயணம் இந்த மனிதம் வெட்கப்பட வேண்டும்.' என்னும் போதும்

'நெட்டி முறித்துக் கொண்டுதான் விடிந்தது காலை. சூரியனுக்கு ஒரு கோப்பி குடித்து விட்டு பீடி ஒன்று பற்றவைக்க எண்ணந்தான்' என்னும் போதும்

'பூமரம் பயங்கரமாக நடந்து வருகிறது நிலம் வெடிக்கும் சத்தத்தில்' என்னும் போதும்

நாம் காண்பது உருவகங்களையும் குறியீடுகளையுமே. படிமங்களை யல்ல. 'கட்டிலே கட்டிலே' என்று அதை எழுப்பும் போதும் சரி, 'சூரியனுக்கு கோப்பி குடித்து விட்டு பீடி பற்றவைக்க எண்ணந்தான்' என்னும் போதும் சரி அவை உயிருள்ள மனிதர்களாக உருவகப் படுத்தப்படுகின்றன. இதோ கம்பராமாயணத்தில் ஒரு கவிதை. சீதையை அசோகவனத்தில் கண்ட அனுமன், தன் அனுபவத்தை இராமனுக்குக் கூறும்போது 'கற்பெனும் பெரியதொன்றும் களிநடம் புரியக்கண்டேன்' என்று கற்பெனும் கருத்தையே உயிருள்ளதொன்றாக உருவகித்து கம்பன் ஆட வைக்கிறார். இவை உருவகம், படிமம் அல்ல. இத்தகையவற்றைத்தான் சோலைக்கிளி தன் கவிதை முழுவதும் இறைத்துள்ளார். மிக அருந்தலாகவே அவர் கவிதைகளில் படிமத்தைக் காணலாம். படிமம் என்பது தனியானது. இதோ ஒரு கவிஞர் மாலை மறைந்து இரவு வருவதைப் பற்றிக் கூறும் போது ''கரியிரவுப் பூவின் இதழ் விரிப்பு'' என்று இரவின் வருகையைப் பெரிய கரிய பூ விரிவதாகச் சொல்கிறார். இதுதான் படிமம். யன்னலூடாக வந்து விழும் காலைச்சூரியனின் ஒளிச்சிதறல்களை கண்ணாடித் துண்டுகள் தெளிவித்துக்கிடப்பதாக மஹாகவி கூறும் போது அங்கே படிமம் எழுகிறது. சண்முகம் சிவலிங்கத்தின் 'பின்னிரவு' என்ற கவிதையில் வரும் ஒவ்வொரு விவரணையும் அதாவது காற்று, அது தென்னோலைகளில் வீழும் 'சளார்' என்ற ஓசை, பின்னிரவு, இருமல், கொக்கல், அனைத்தும் சேர்ந்து அக்கவிதையையே துயரத்தினதும் துன்பத்தினதும், படிமமாகத் திரளவைக்கிறது. எஸ். வைத்தீஸ்வரனின் 'கிணற்றில் விழுந்த நிலவைக் கீழிறங்கித் தூக்கிவிடு' என்ற கவிதையில் வரும் 'கிணற்றில் விழுந்த நிலவு' வழுக்கி விழுந்த பெண்ணொருத்தியின் குறியீடாகவும் படிமமாகவும் நிற்கிறது. ஜோர்ஜ் ஓர்வெல்லின் 'விலங்குப் பண்ணையில்' வரும் மிருகங்கள் ஸ்ரலின் உட்பட அவரது சகாக்களான புக்காரின், ட்றொட்ஸ்கி, லெனின் போன்றோரின் உருவகங்களாகவும் குறியீடுகளாகவும் நிற்கின்றன. சோலைக்கிளியின் கவிதைகள் இத்தகைய உருவகங்களையே அதிகமாகக் கொண்டுள்ளன என்பதை ஏற்கெனவே காட்டினேன். ஆனால் படிமம் பற்றி பல மேற்கோள்கள் காட்டி எழுதியுள்ள ஸ்ரீகணேசன் சோலைக்கிளியின் கவிதைகளில் முனைப்புப் பெற்றிருப்பது உருவகங்களும் குறியீடுகளுமே என்பதை அறியாமல் போனது வியப்புக்குரியதே. 'உவமை உருவகங்களின் படிநிலை வளர்ச்சியே படிமமாகும்' என்று ஸ்ரீகணேசன் கூறுவதை இந்நிலையில் பொருத்திப் பார்த்தால் சோலைக்கிளி இன்னும் பின்னுக்கே தள்ளப்பட வேண்டியவராகிறார். (ஆனால் நான் அப்படிக் கருதவில்லை)

2. சோலைக்கிளி பற்றிய எனது விமர்சனத்தை ரவீந்திரனோ, ஸ்ரீகணேசனோ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றே படுகிறது. சோலைக்கிளி பற்றிய எனது விமர்சனம் இதுதான்: இவர் ஒரே வகையானவற்றையே திரும்பத் திரும்ப போட்டடிக்கிறார். இதுபுதுமையல்ல. அதாவது கவிதையின் ஓர் அம்சமான குறியீடு, உருவகம் என்பவற்றை அளவுக்கு மீறிப் பாவிக்கிறார். பலூன் ஒன்றை ஊதும் போது திடீரென ஒரு பகுதி ஏனையவற்றிலிருந்து வீங்கிக் கொண்டு போவதுபோல்' (அது பின்னர் வெடித்து விடும்!) இவரும் செய்கிறார். தர்மு சிவராமு அளவுக்கு மிஞ்சிப் படிமங்களைக் குவித்தது போல், அதை அபிநயித்து 'வானம் பாடிகள்', 'இரத்த புஷ்ப', 'நாங்கள் நீங்கள்' வகையறாக்களை கொட்டியது போல் சோலைக்கிளியும் அஃறிணைப் பொருள் உருவகங்களை அள்ளிக்கொட்டியுள்ளார்! இது புதுமையாகாமல் கவிதையாகாமல் அலுப்புத்தரும் விவகாரமாக முடிந்துள்ளது.

முதலில் பலபக்கப் பரிமாணங்களைக் காட்டுவதாய் இருக்கும் ஒரு உத்திமுறை திரும்பத்திரும்ப பாவிக்கப்படும் போது ஒற்றைப் பரிமாணம் உடையதாய் மாறுகிறதென்பது சாதாரண விஷயம். விலங்குகளை உருவகித்து ஸ்ரலின் கால ரஷ்யாவை படம் பிடித்துக் காட்டும் 'விலங்குப் பண்ணை' போல் மேலும் வேறு கதைகளை ஜோர்ஜ் ஓர்வெல் எழுதியிருந்தால் முன்னதின் வீர்யத்தையும் பன்முகத் தன்மையையும் பின்னவை பெற்றிருக்கமாட்டா.

ஜேம்ஸ் ஜொய்ஸ் யுலியஸ் நாவல் எழுதியதற்குப் பின்னர் அதே வகையில் சொற்களின் சித்து விளையாட்டு நிறைந்த ஃபினகன்ஸ்வேக் (Finnegans Wake) எழுதியதை இதன் காரணத்திற்காகவே அவர் சகோதரர் எதிர்த்ததும் இருவரிடையே பகைமை ஏற்பட்டதும் உலகப் பிரசித்தம். யூலியஸ் மாதிரி பின்னது எடுபடாமல் போனது நான் கூறுவதை விளக்கும். சோலைக் கிளியும் ஒரே பாணியையே திரும்பத் திரும்பக் கைக்கொண்டதால் அவரது கவிதைகளும் ஒற்றைப் பரிமாணம் உடையவையாக்கப் பட்டன. அதனால்தான் 'மாடு சப்பிய சூரியன்', 'ஆடு சப்பிய', 'எருமை சப்பிய' என்று மாற்றப் படக்கூடிய நிலைக்குள் தள்ளப் பட்டன. இவற்றிலிருந்து மீட்சிபெற வேண்டுமானால் பன்முகப்பரிமாணங்களை ஏற்றும் புதுச்சொற்கையாள்கை, புதுச் சொல்லாடல் முறைமை கையாளப்படவேண்டும் எனக் கூறினேன். இதைப்புரிந்து கொள்ளாது 'சொற்களிற்கு நேரடி அர்த்தங்களை பிரதியீடு செய்வதாக' ரவீந்திரன் என்னைத்தான் குற்றஞ் சாட்டுகிறார் அவ்வாறே ஸ்ரீகணேசனும் என்கருத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு, ''எல்லாவித கவிதை உத்திகளும் இடம் மாறிப் பாவிக்கப்படுபவையே'' என்று தேவையற்ற நீண்ட உதாரணங்களிலும் விளக்கங்களிலும் மினக்கெடுகிறார். யார் இடம்மாறி தலையால் நடந்தால் என்ன, சுவிஸ் சிறுமி காலால் சோறுசாப்பிட்டால் என்ன? ஆனால் எனக்கு இவையே அலுப்புத் தரும் விதத்தில் கவிதையாக காட்டப்படுவதே வருத்தத்திற்குரியதாகும். மேலும் நான் ஏதோ 'நான் - நீ', 'நாங்கள் - நீங்கள்' என்று கவிதை எழுதக்கூடாது என்றோ அப்படி நல்ல கவிதைகள் எழுதப்படவில்லை என்றோ கூறியது மாதிரி ஸ்ரீகணேசன் பல உதாரணங்களைத்தந்து மீண்டும் பக்கங்களை வீணடித்திருக்கிறார். நான் கூறியதெல்லாம் வானம்பாடிக் கவிஞர்கள் 'நீங்கள் - நாங்கள்' என்றும் 'ரத்தப்புஷ்பங்கள்' என்றும் அர்த்தமற்று தி.மு.க. பாணியில் எழுதிய தகரடப்பாக் கவிதைகளையே! இதற்கொரு சமூக, அரசியல் தேவை இருந்தது என்று ஸ்ரீகணேசன் சொல்வாரானால் அத் தேவை தரமற்ற கட்டுமானத்தை கொண்டதாய் இருந்திருக்க வேண்டும். அல்லது இக்கவிதைப்போக்கு அதை தரமற்றதாக்கியிருக்க வேண்டும்!

அடுத்து 'எழுத்து' காலத்து மாற்றத்துடனும் தருமு சிவராமுவின் கவிதைப்போக்குடனும் சமகாலத்து ஈழத்துக் கவிதை வளர்ச்சியை ஒப்பிட முனைந்தது மிக அபத்தமானது என்று விசனப்படும் ஸ்ரீகணேசன் இன்னும் பின்னுக்குச் சென்று 'பாரதி தொடக்கிய ஞாயிறு, சக்தி போன்ற வசனக் கவிதைகளின் இன்னொரு பரிணாம வளர்ச்சிதான் இன்றைய சோலைக்கிளியின் கவிதைகள்'' என்று ஒப்பிடுகிறார்! நான் கூறியதோ தருமு சிவராமு படிமங்களைக் குவித்ததுபோல், வானம்பாடிகள் ரத்தபுஷ்ப வகையறாக்களைக் குவித்தது போல் சோலைக்கிளி அஃறிணை உருவகங்களைக் குவிக்கிறார் என்பதே. 'ஒப்பிடல்' பற்றி ஸ்ரீகணேசனின் அகராதி புதுமையான கருத்துடையதாக இருக்க வேண்டும். இவ்வாறே போதைவஸ்து பாவிக்கும் இளைஞர்கள் பற்றி நான் கூறியதை ரவீந்திரன் தவறாகப் புரிந்துள்ளார். சோலைக்கிளியின் சில ஆழமற்ற போலிமயக்கக்கவிதைகளை உதாரணிக்கவே இதைக் கூறினேனே ஒழிய ஒழுக்கரீதியாகவல்ல. எனது வார்த்தைகள் எவையும் அப்படிச் சுட்டுவதாயும் இல்லை. இளைஞர்கள் என்ன பாவிக்கிறார்கள், எப்படி இயங்குகிறார்கள் என்பது சமூக ஆய்வாளர்களுக்குரியது. இலக்கிய விமர்சகர்களுக்கல்ல.

சோலைக்கிளி பற்றிய எனது விமர்சனம் தொடர்பாக சிவசேகரம் கூறும்போது ''அதியதார்த்த வாதத்தின் மிகையான பிரயோகம் அர்த்தமின்மைக்கும் வழிவகுக்கலாம் என்பதை எடுத்துச் சொல்ல தமிழ்க் கவிதை விமர்சகர்கள் பலரும் தவறிவிட்டோம்'' என்று மிக நிதானமாகக் கூறுகிறார். இதையே ரவீந்திரன் ''... ஆனால் அதுவே மீண்டும் மீண்டும் ஒரே சொல்லாடல்களால் பிரதிபண்ணப்படும் போது அதன் ஜீவன் அழிக்கப்படும். ஆபத்தும் வளர்ந்து செல்கிறது'' என்று ஒப்புக்கொள்கிறார். இந்த ஜீவன் அழிக்கப்படும் ஆபத்துப் பற்றியதுதான் எனது விமர்சனமும். இந்த ஜீவன் அழிக்கப்படும் ஆபத்து பற்றிய உணர்வும், தனது வெளிப் பாட்டு முறையை சோலைக்கிளி மாற்றிக்கொள்ள வேண்டியது பற்றிய ஒப்புக் கொள்ளலும் சோலைக்கிளி பற்றிய விமர்சனத்தின் பின்னரே ஏற்பட்டதென்றால் அவ்விமர்சனம் சோலைக்கிளிக்கு உதவியுள்ள தென்பதும் தமிழ்க் கவிதை விமர்சனத்திற்கு சிறிதளவாயினும் தொண்டாற்றியுள்ளதென்பதும் பெறப்படுகிறது. இதை ஒப்புக்கொள்ளும் அறிவு நேர்மையைப் புறந்தள்ளி 'ரட்சகர்', 'அதிமேதாவி', 'மருத்துவர்' என்னும் மனச்சிக்கல்களுக்குள் விழுவது எவ்வளவு தூரம் விமர்சனத்திற்கு உதவப்போகிறது? விமர்சனம் ஒன்று ஆரம்பமாக எழுதப்படும் போதே அது குறை 'வளர்ச்சியைக் கடப்பதற்கான வழியாகவும் இயங்கத் தொடங்குகிறது என்பது இக்கருத்து - எதிர் கருத்துப் பரிமாற்றங்களே உதாரணம்.

3. அடுத்து ஸ்ரீகணேசன், சிவசேகரம் ஆகியோர் முன்வைத்த சமூக இயக்கம் பற்றியது. எனது விமர்சனம் பற்றி ஸ்ரீகணேசன் கூறுகையில் ''மு.பொ, அல்லது செ. யோகராசா கூறுவதைக் கொண்டு ஈழத்துக் கவிஞர்கள் கவிதைப் போக்கைத் திட்டமிடுவதில்லை. அது இயல்பாய் சமூகத்தின் போக்கிலும் காலத்தின் கோலத்திலும் கரு கொண்டு கவிஞனின் பிரதிபலிப்பாக'' வருவதாய் கூறுகிறார். இப்படிக் கூறும் ஸ்ரீகணேசன் தான் கூறுவதன் படி ஒழுகுவரானால் எந்த வித விமர்சனமும் எழுதத் தேவையில்லை என்பதாகிறது. காரணம் அவர்கருத்துப்படி அது தானாகவே ''இயல்பாய்சமூகத்தின் போக்கில்'' நடைபெற வேண்டும்! உண்மையில் இந்த 'மார்க்சீய' விமர்சகர் ஸ்ரீகணேசன் விளங்கிக் கொள்ள முடியாமல் போனது என்னவெனில் மு.பொ. யோகராசா, ஸ்ரீகணேசன் ஆகியோரும் அந்த சமூகத்தின் இயக்கவியலுக் குட்பட்டவர்கள் என்பதையே!

இவ்வாறே சிவசேகரம் அவர்களும் ''கவிதை பற்றிய கேள்விகளைத் தனக்குள் எழுப்பும் ஒருவன்தான் இனிவரும் கவிதைகள் பற்றித் தீர்மானிப்பான்'' என்று நான் கூறியதை மறுதலித்து, ''கவிதைப் போக்குத் தனிமனிதர்களாலன்றி அவர்களுடைய செயற்பாடும் சமுதாயச் சூழலாயே தீர்மானிக்கப்படுகிறது'' என்கிறார். இதன்படி பார்க்கப் போனால் மேற்படி கட்டுரையில் சிவசேகரம் இறுதியாகக் கூறும் ''இன்னும் சில தசாப்தங்களில் இந்தப் புதிய பரிமாணங்களும் சாதனைகளும் யாருங் கவனிப்பார் அற்றவையாகவே போகவுங்கூடும் என்பதையும் நாம் நினைவில் இருத்துவது பயனுள்ளது என நினைக்கிறேன்'' என்னும் கருத்தை

→ 17

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஸ்மிதா பட்டேல் எனும் சினிமா நடிகை!

கே.எஸ். சிவகுமாரன்

சிதம்பரம் என்ற படத்தை உங்களிற் சிலர் பார்த்திருக்கக் கூடும். கலைத்தரமான படங்கள் பற்றித் தெரிந்து வைத்திருப்பவர்களும், இப்படம் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். மலையாளமும், தமிழும் பேசும்இப்படத்தை நெறிப்படுத்தியிருந்தவர் மறைந்த, தரமான படங்களைத் தந்த ஜி. அரவிந்தன். அந்தப் படத்தில் அருமையாக நடித்திருப்பவர் மறைந்த மராத்திய நடிகை ஸ்மிதா பட்டேல். இவர் நடித்து நான் பார்த்து வியந்து போன மற்றொரு படம் பூமிகா. மராத்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டாலும், அம்மொழியுடன் ஹிந்தி, வங்காளம், குஜராத்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிப் படங்களிலும் இவர் நடித்துப் புகழ் சேர்த்திருக்கிறார்.



1955ஆம் ஆண்டு பிறந்து 1986ம் ஆண்டு தனது 31வது வயதில் இறந்து போன ஸ்மிதா பட்டேல், ஷபனா ஆஸ்மி போன்று தலைசிறந்த ஒரு நடிகை.

கலைத்தரமான படங்களுக்கு இவர் அளித்த பங்களிப்பை நினைவூட்டு முகமாக கடந்த ஜனவரி மாதம் திருவனந்தபுரத்திலே நடந்த இந்தியாவின் 28 வது அனைத்துலகத் திரைப்பட விழாவிலே இவர் நடித்த சில படங்களும் காட்டப்பட்டன.

பத்து ஆண்டுகளுக்குள் (1974-1985) வெவ்வேறு மொழிகளில், 54 படங்களில் அவர் நடித்தார்.

சிதம்பரம் படத்தில் ஸ்மிதா பட்டேலுக்கு சிவகாமி என்ற தமிழ்ப் பெண்ணின் பாத்திரம் கொடுக்கப்பட்டது. இவள் முனியாண்டியின் மனைவி. தனது சொந்த ஊரான தமிழ் நாட்டின் சிதம்பரத்திலிருந்து, கேரளத்தின் குன்றுகள் சார்ந்த பிராந்தியத்துக்குக் கணவனுடன் செல்கிறாள். அன்பார்ந்த புருஷனுடன் இனிதே வாழ்ந்த இவள் மீது, எஜமான் சங்கரன் மையல் கொள்கிறான். இவளுடைய ஆளுமையிலும் புதிய நெகிழ்வுகள் ஏற்படுகின்றன. சங்கரனுக்கும் சிவகாமிக்கும் உள்ள உறவு கூறாமற் கூறப்படுகிறது. நெறியாளரின் ஆற்றல் பாராட்டும் படியாய் உள்ளது. தனது இல்லக்கிழத்தி தனிமையை விரும்புவதும், மலையின் பசுமையை நாடுவதும் ஏன் என்று முனியாண்டிக்குப் புரிவது கஷ்டமாக இருந்தது. அவனுக்கு வாழ்க்கை விளக்கமாகப் புரியவில்லை. தனது கணவன் மீதும் சங்கரன் மீதும் எவ்வாறு அன்பைப் பகிர்ந்துகொள்வது என்று சிவகாமி திண்டாடுகிறாள். அந்த ஊசலாட்டத்தை நடிகை ஸ்மிதா பட்டேல் வெளிப்படுத்தும் பாங்கு கலை நயமாய் அமைகிறது. வறட்சி நிலத்தில் மழை பொழிந்தால், எவ்வித மான குதூகலம் ஏற்படுமோ அவ்விதமே பாத்திரங்களும், பார்வையாளரும் படத்தின் ஈற்றில் களிப்பைப் பகிர்ந்து கொள்கின்றனர். தமிழ்த் தேவாரப் பண்ணிசை படத்தில் ஒலிப்பது இனிய அனுபவம்.

மற்றைய படமான பூமிகா 1977ல் வெளிவந்தது. கொழும்பில் நடைபெற்ற ஓர் இந்தியத் திரைப் படவிழாவிலே இது காண்பிக்கப் பட்டது. உங்களிற் சிலர் பாத்திருப்பீர்கள். ஷியாம் பெனிகல் நெறிப்படுத்தியது. இந்தப்படத்தின் கதாநாயகி ஒரு நடிகை. இப்பாத்திரத்தை வெகு அற்புதமாகச் சித்திரித்தவர் ஸ்மிதா பட்டேல். இந்தப்படத்தில் சிறப்பாக நடித்தமைக்காகச் சிறந்த நடிகை விருது இவருக்கு வழங்கப் பட்டது.

சொந்த வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் நடிகைகள் அனுபவிக்கும் ஏன் அனைத்துப் பெண்களுள் பெரும்பாலானோர் எதிர் நோக்கும், சவால்களைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அவற்றின் சில கூறுகளை ஹன்ஸா வட்கார் என்ற நடிகையின் வரலாற்றிலிருந்து அனுபவத்தைக் கிரகித்து பெற்று உணர்வுடன் ஸ்மிதா பட்டேல் இப்படத்தில் நடித்துக் காண்பித்தார். குழப்ப மனோ நிலை படைத்த, பலராலும் துன்புறுத்தப்பட்ட, ஆண்களால் வஞ்சிக்கப்பட்ட ஒரு பெண் ஹன்ஸா வட்கார். அந்தப்பாத்திரமே உளவியற் பாங்கில் ஸ்மிதா பட்டேலினால் நடித்துக் காண்பிக்கப் பட்டது.

திரைப்படத்துறையில் அவருடைய பங்களிப்பின் வீச்சைக்கண்டு 1985ல் இந்திய ஜனாதிபதியின் பத்மஸ்ரீ பட்டம் வழங்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1984ல், மொன்றியோல் திரைப்பட விழா எட்டாவது தடவையாக நடைபெற்ற போது, அவ்விழாவின் நடுவர்களில் ஒருவராக ஸ்மிதா பட்டேல் செயற்பட்டமையும் இங்கு அவதானிக்கத்தக்கது. லா ரொச்சேல், பாரிஸ் ஆகிய மாநகரங்களில் ஸ்மிதா பட்டேல் நடித்த படங்களிற் சில ஒருங்கே காட்டப்பட்டுள்ளன.

பள்ளிக்கூட நாடகங்களில் நடித்து அனுபவம் பெற்ற ஸ்மிதா பட்டேல், பட்டப்படிப்பை முடித்த பின், மும்பாய் தூர்தர்ஷன் தொலைக் காட்சி அறிவிப்பாளராகப் பணி புரிந்தார்.

பூனேயிலுள்ள திரைப்படத் தொலைக்காட்சிப் பயிற்சிநிலையம் ஆசியாவிலே பிரபல்யம் பெற்ற ஒரு பயிற்சி நிலையம். இந்தியாவின் தலைசிறந்த நடிகர்கள், நெறியாளர்கள், ஒளிப்பதிவாளர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் எல்லாம் இங்கு பயிற்சி பெற்றுத் தேறியவர்கள்தான். நமது பாலு மகேந்திராவும் இவர்களுள் ஒருவர். நமது எழுத்தாளர் செ. கணேசலிங்கன், மற்றும் கே.எஸ் சிவகுமாரன் ஆகியோரும இந்தப் பயிற்சி நிலையத்தில் திரைப்படத் திறனாய்வு தொடர்பான பயிற்சியைப் பெற்றிருக்கிறார்கள்.





பூனே பயிற்சி நிலையத்திலிருந்து வெளியேறிய நெறியாளர்களில் ஒருவர் அருண் கோப்கார். இவர் அங்கு மாணவராயிருந்த பொழுது தயாரித்த குறும் படத்திலே முதன் முதலாக ஸ்மிதா பட்டேல் நடித்தார். அதன் பின்பு ஷியாம் பெனிகல் நெறிப்படுத்திய சரண்தாஸ்சோர் என்ற சிறுவர் படத்திலும், அதே நெறியாளர் உருவாக்கிய மன்தன் என்ற படத்தில் ஹரிஜனப் பெண்ணாகவும் நடித்தார். பால் கூட்டுறவுப்பண்ணையொன்றில் ஒரு புரட்சியையே ஏற்படுத்திவிடும் இப்பெண் பாத்திரம் ஸ்மிதா பட்டேலுக்குப் புகழை ஈட்டிக்கொடுத்தது.

கேத்தன் மேற்தா, மற்றொரு முக்கியமான வட இந்தியத் திரைப்பட நெறியாளர். இவர் நெறிப்படுத்திய படங்களில் ஒன்று பவ்னி பாவாய் கட்டுக்கள் கலைந்த பூர்வீகக் குடிப்பெண்ணாக ஸ்மிதா பட்டேல் நடித்திருக்கிறார்.

ஆர்த் என்ற படத்திலே ''சின்ன வீட்டுப்பெண்''ணாகவும் இவர் நடித்து வித்தியாசமான பாத்திரங்களில் தன் திறமையை இவர் வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

ஸ்மிதா பட்டேலின் இன்னொரு விசேஷம் என்னவென்றால் வணிக நலப் படங்களிலும் தனது நேர்த்தியான நடிப்பை வெளிப்படுத்தியமைதான் என்று இவரின் திறனை மதிப்பீடு செய்த விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

ஷியாம் பெனிகல் நெறிப்படுத்திய பல படங்களில் செழுமை பெற்ற ஸ்மிதா பட்டேல், 1975ல் பெனிகலின் நிஷாந்த் படத்தில நடித்த பின்னர்தான் விமர்சகர்களின் கவனத்தை முழுமையாகப் பெற்றார்.

1980 மேர்ஸா நெறிப்படுத்திய அல்பேட்டோ பின்டோ கோகஸ்ஸா கியூம் ஆத்தா ஹாய் என்ற படத்தில் நடித்து சலசலப்பை ஏற்படுத்தினார். அதே ஆண்டில் மிர்னால் ஸென் என்ற தலைசிறந்த வங்காள நெறியாளர் உருவாக்கிய அகலேர் சந்தனே என்ற படத்தில் நடித்து வங்காளப் பார்வையாளர்களையும் கவர்ந்து கொண்டார்.

முன்ஷி பிரேம்சந்த் எழுதிய கதையொன்றைத் தழுவி சத்காதி என்ற தொலைக்காட்சித் திரைப் படம் எடுக்கப்பட்ட பொழுது அதிலும் ஸ்மிதா பட்டேல் நடித்திருக்கிறார். இதன் நெறியாளர் மறைந்த உலகப் புகழ் பெற்ற சத்யஜித் ராய் என்றால் சொல்லவும் வேண்டுமா?

மராத்திய மொழித் திரைப்பட/நாடக நெறியாளர்களுள் முன்னணியில் நிற்பவர் ஜப்பார் பட்டேல். இவர் நெறிப்படுத்திய படங்களுள் ஒன்று உம்பர்த்தா. இப்படத்திலும்





சாகர் சர்ஹாதி நெறிப்படுத்திய பஸார் போன்ற வணிகப் படங்களிலும் ஸ்மிதா பட்டேல் நடித்திருக்கிறார்.

அமிதாப் பச்சன், ராஜ் கோஸ்லா, சுனில் தத், ராஜ் என் ஸிப்பி, ஜே.ஏ.துத்தா போன்ற வணிகத் திரைப்படப் பிரமுகர்கள் ஸ்மிதா பட்டேலின் தயவை நாடி நின்றனர். ●

## சோலைக்கிளி...

யும் அவர் முன்வைப்பதற்கு உரிமையற்றவராகிறார்! இந்த நோக்கில் இன்றைய சமூக - இயக்கவியல் சிந்தனைக்கெல்லாம் ஊற்றுக்கண்ணாய் இருக்கும் மார்க்சீய சித்தாந்தமே போடப்பட்டிருக்க முடியாது!

4.இறுதியாக நான் கூறவிரும்புவது 'மெய்யுள்' சம்பந்தமாக ஸ்ரீகணேசன் கட்டுரையில் எனக்கு மிகப் பிரயோசனமாக இருந்தது அவர் மெய்யுள் பற்றிக் கூறியதுதான். ஸ்ரீகணேசனுக்கு 'மெய்யுள்' காலத்தால் அள்ளுப்பட்டுப் போனதாகத் தெரியலாம். ஆனால் இன்றைய நவீன இலக்கியம் பற்றிய பிரக்ஞை உள்ளவனுக்கு அது அப்படித் தெரியாது என்றே சொல்லலாம். 'மெய் முதல்வாத' நோக்கில் 'மெய்யுளின்' பின்னணி பற்றிக் கூறும் போது, ''முன்னர் இதிகாச காவிய காலத்தில் கலை இலக்கியத்தில் கற்பனையும் உள்ளுணர்வும் மேலோங்கியிருந்தன. பின்னர் அறிவுவாதத்தின் எழுச்சியில் அவை யதார்த்தத்தையும் சமூகநோக்கையும் தரித்தன. இன்றோ யதார்த்தம் பிரபஞ்ச யதார்த்தமாக விரிய கலை இலக்கியத்தில் மீண்டும் உள்ளுணர்வு மேலோங்குகிறது'' என்று கூறும் மு.த. ''இனி எழுத்துக்கும் வாழ்வுக்கும் உள்ள இடைவெளியைப் பேணும் பழைய கலை இலக்கிய வகைகளை இவை அழித்து உண்மையை நோக்கி ஆற்றுப்படுத்தும் புதிய கலை இலக்கிய வகைகளாக இவை மாறும்'' என்கிறார். இதன் வெளிக்காட்டலாகவே மு.த. 'உள்ளும் புறமும் மெய்', 'அண்டை வீடுகள்', கலைஞனின் தாகம்' போன்ற படைப்புக்களைத்தந்தார். சுந்தர ராமசாமி எழுதிய 'ஜே.ஜே.. சில குறிப்புகள்' என்னும் 'புதிய நாவல்' கலைஞனின் தாகத்தின் வேறொரு வெளிக்காட்டலாகவே நான் கொள்ளுவேன். 1989ல் காலமான லத்தீன் அமெரிக்க எழுத்தாளரான ஜோர்ஜ் லூயி போர்கே, ''மனிதக் கற்பனையின் அத்தியாவசியக் கதைகள் யாவும் எப்போதோ சொல்லப்பட்டும் எழுதப் பட்டும் விட்டதால் கதை சொல்பவனின் கலை 'மறுசிந்தனை', மறு சொல்லல்'' ஆகியவற்றில் காட்டப் படவேண்டும்'' என்று கூறுவது எனக்கு மு.த.வின் நோக்கைத்தான் அழுத்துவதாகப்படும். ஜோர்ஜ் போர்கே வாழ்வுக்கும் தன் எழுத்துக்கும் அதிக இடைவெளி இல்லாது வாழ்ந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. எனது எழுத்தாக்கங்கள் யாவும் - காலி லீலை, நோயில் இருத்தல், புனித நீர் ஆகியவெளி வரவிருக்கும் நூல்கள் எல்லாம் - 'மெய்யுளி'ன் உள்ளோடிய பாதிப்பின் வெளிக்காட்டல்களே. இன்று கலை இலக்கிய உலகில் பழைய உருவங்களுக்கு ஏற்பட்டுவரும் நெருக்கடி, உண்மை வாழ்க்கை சார்ந்த (Autobiography) படைப்புகளுக்கு ஏற்பட்டு வரும் கிராக்கி எல்லாம் மெய்யுளின் வலுவையே சுட்டும். கடைசியாக வெளிவந்த வியூகம் இதழுக்கு பேட்டி கொடுத்த கலாநிதி நுஃமான், தன் கருத்துக்களை வெளிப்படுத்த புதிய வெளிபபாட்டு முறைபற்றி - ஒரு வித டொகியூமென்டரி தன்மையொத்த - சிந்திப்பதாக கூறியதெல்லாம் எனக்கு மெய்யுள் சார்ந்த சிந்தனையாகவே படும். ஆனால் அதற்காக இவர்கள் எல்லாம் மெய்யுள்தான் தாம் எழுதுவதற்காகக் கூறவேண்டும் என்றில்லை. அப்படி இவர்கள் கூறவில்லையே என்று ஸ்ரீகணேசன் கேட்டால் முன்பொருமுறை மு.த. தன்னைப்பார்த்து ஒருவர் இது சம்பந்தமாகக் கேலியாகக் கேட்ட போது 1968 பிரஞ்சுப் புரட்சிக்காலத்தில் மாணவர்கள் முன்வைத்த சுலோகம் ஒன்றைப் பதிலாகக் கூறியதையே நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்தச் சுலோகம் பின்வருமாறு:

*'அறிஞன் சந்திரனைச் சுட்டினால்*
*முட்டாள் அவன் விரலைப்*
*பார்க்கிறான்'* ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொருளியல் கல்விக்கு தமிழில் காத்திரமான நூலொன்று தேவை

பொருளியல்
ஜனனி-ரகுராகவன்
கு.தம்பையா
யுனைடெட் வெளியீட்டகம்
விலை 250.00

இலங்கையில் தமிழ் முஸ்லிம் மக்களின் பொருளியல் கல்விச் சிந்தனை வரலாறு 1960களில் தேசிய மொழிகளில் போதனை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து தொடங்குகின்றது. அக்காலத்திலிருந்து பொருளியலை முக்கியமான ஒரு பாட நெறியாகப் பெருந்தொகையான மாணவர்கள் கற்கத்தொடங்கியதிலிருந்து இன்று வரை ஆயிரக்கணக்கான மாணவர்கள் உயர்கல்வி நிலையங்களிலிருந்து வெளியேறி உள்ளனர். 36 வருடங்களுக்கு மேற்பட்ட பொருளியற் கல்விச் சிந்தனையின் ஒரு நீண்ட வரலாற்றின் அறுவடையாக இன்று எமக்குக் கிடைத்திருப்பது ஒரு சில பொருளியல் பேராசிரியர்(?)களே. பொருளியல் பாடத்தில் மிகத்திறமையும் சுய ஆர்வமும் கொண்ட பல மாணவர்கள் ஒழுங்கமைப்புக்குட்பட்டு வளர்த்தெடுக்கப்படவில்லை.

அக்கால விரிவுரையாளர்களும் ஓர் இரண்டாம் தலைமுறையினரை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற அக்கறையற்று இருந்தனர். தமது கல்வித் தராதரங்களை உயர்த்திக் கொள்வதன் மூலம் தான் எதிர்கால சந்ததியினரை மேன்நிலைக்கு வழி நடத்த முடியும் என்பதைக் கவனத்திற்கொள்ளாததினால் பொருளியலைக் கற்கும் மாணவர்கள் தமது முதுகலைமாணிப்பட்டத்துக்கான ஆலோசகர்களைக் கண்டுபிடிப்பதில் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். கலாநிதிப் பட்டம் பெற்ற ஒருவர் தான் எம்.ஏ.பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவருக்கு வழிகாட்டமுடியும். இதற்கு மாறாக எம்.ஏ. பட்டத்தையுடைய ஒருவர் கலாநிதிப்பட்டத்துக்கும், எம் பில் பட்டத்துக்கும் வழிகாட்டும் ஒரு துரதிருஷ்டவசமான நிலைமை இன்று தமிழ் பேசும் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஒரு சமூகத்தை அறிவுபூர்வமாக வளர்த்தெடுப்பதைத் தகர்த்தெறியும் இம்முயற்சியின் பிரதிபலிப்பை அண்மைக் காலங்களில் நாம் கண்டு வருகின்றோம்.

அண்மைக்காலங்களிற் பிரதேச ரீதியான பல்கலைக்கழகங்களின் தோற்றம், ஆய்வுகளின்றி இருந்த பல விரிவுரையாளர்களுக்கு பதவி என்னும் ஆசையைத் தூண்டி விட்டது!. இதனால் நிர்வாக விடயங்களில் அதிக கவனம் செலுத்தினரேயன்றி பொருளியற் கல்விச் சிந்தனைக்கு உறுதியான ஓர் அடித்தளத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. இலங்கையின் தேசியரீதியான பொருளியற்கல்விச் சிந்தனையில் தமிழ் பேசும் விரிவுரையாளர்களின் பங்களிப்பு எனக் கூறக்கூடியதாக ஓரிருவரது கட்டுரைகளே காணப்படுகின்றன. ஆனால் சிங்கள மொழி பேசும் பொருளியலாளரின் ஆயிரக்கணக்கான கட்டுரைகள் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இலங்கையின் தேசிய பொருளியற் சிந்தனை வரலாற்றில் தமிழ் பேசும் பொருளியலாளரின் பங்களிப்பின் சுவடுகளே காணப்படவில்லை. திறமையான மாணவர்கள் இருந்த காலத்தில் தமது குறுகிய நோக்கங்களை விடுத்து அம்மாணவர்களை ஊக்குவிக்கத் தவறியமையும், அதிகாரம் தமது கைகளுக்கு வந்த பின் பெருந்தொகையில் உயர்சித்திகளை வழங்கித் திறமையை மழுங்கடிக்கும் செயல்களில் ஈடுபட்டமையுமே இதற்குக் காரணமாகும். இனிமேல் சிறந்த பொருளியல் மாணவர்கள் இவர்களின் கீழ் வளர்ச்சி பெறுவார்களா என்பதும் சந்தேகமே.

கலாநிதிப் பட்டங்களைப்பெற்று, பொருளியலின் நவீன முறையியலைக் கற்று மிளிரும் பல சிங்கள மொழி மூலமான விரிவுரையாளர்கள், பேராசிரியர்களே இன்று தமிழ் பேசும் மாணவர்களின் உயர்கல்விக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காக உள்ளனர். புதிய தலைமுறை எம்.ஏ. கலாநிதிப்பட்டங்களைப் பெற்று உயர்நிலை அடையும் வரை இன்று நிலவும் இருண்ட காலம் விலகப்போவதில்லை. அணிந்துரைகளையும், ஆறுதல் வார்த்தைகளையும் கூறுவதற்கான பணியையும் அவைகளை மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் செய்வதற்கான அதிகாரத்தினையுமே எம்மவர்கள் கொண்டிருந்தனர். 1965களில் சொல்லப்பட்ட அதே கேள்வி - நிரம்பல் விளக்கங்களே 1997களிலும் கேட்கின்றன.

பொருளியற் கல்விச் சிந்தனையின் இந்தப்பகைப்புலத்தில் ஜனனி ரகுராகவன், குமாரவேலு தம்பையா ஆகிய இருவரினால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டிருக்கும் ''பொருளியல்'' என்னும் நூல் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இந்நூலின் அணிந்துரையில் குறிப்பிடப்படுவது போன்று ''ஆயிரக்கணக்கான தமிழ் மொழிமூல மாணவர்களுக்கு தாய் மொழியில் வேறு நூல்கள் இல்லாத நிலையில்'' இந்நூல் வெளி வந்துள்ளது.

14 அத்தியாயங்களில் பொருளியலின் பல்வேறு அம்சங்களையும் இந்நூல் விளக்குகின்றதுடன் 277 பக்கங்களையும் கொண்டுள்ளது. ''அடிப்படைப் பொருளாதார அறிவையும், ஆற்றல் ஆர்வத்தையும், ஆக்கத்தினையும் இந்நூல் வழங்கும்'' என்ற ஆசிரியர்களின் முகவுரையுடன் உள்ளே நுழைந்த பல மாணவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது. நவீன காலத்துக்கும், பாடத் திட்டத்திற்கும் ஒவ்வாத இத்தகைய மரபு வழிப் பொருளியல் நூல் மாணவர் சமூகத்திற்கு எவ்விதப் பயனையும் தரப்போவதில்லை. என முகவுரையில் கூறிய ஆசிரியர்கள் ஆதாரமாக 21 நூல்களை உசாத் துணையாகத் தந்துள்ளனர். உண்மையில் இவ் ஆங்கில நூல்களை அடிப்படையாகக்கொண்டு இந்நூல் எழுதப்பட்டிருந்தால் இந்நூல் மிகத் தரமான, மாணவர்களுக்குப் பயன்மிக்க ஒரு நூலாக இருந்திருக்கும். மாறாக இந்நூலின் சில பகுதிகள், தமிழில் முன்பு வெளியிடப்பட்ட பொருளியல் நூல்கள் மற்றும் சஞ்சிகைகளின் தழுவல்கள் என்பதை வெளிப்படையாகவே காட்டி நிற்கின்றன. பொருளியல் மாணவர்கள் இதனை வெளிப்படையாகவே தெரிவித்துள்ளனர். ''கேள்வியும் நிரம்பலும்'' என்ற நூலிலிருந்தும், பொருளியலாளன் என்ற சஞ்சிகையிலிருந்தும் படித்த பல விடயங்களை அதே வசன நடையுடன் இங்கு காண முடிகின்றது.

''க.பொ.த. உயர்தர கலை, வர்த்தக, விஞ்ஞானப் பிரிவுகளில் பொருளியலை ஒரு பாடமாகப் பயில்வோருக்கும், பல்கலைக்கழக உள்வாரி, வெளிவாரி மாணவர்களுக்கும் பயனளிக்கக் கூடிய வகையில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது'' என முகவுரையில் கூறப்பட்டாலும் இவ்விரு பிரிவினருக்கும் இந்நூல் பொருத்தமற்றதாகவே உள்ளது. வெவ்வேறான விடயங்களைக் கற்கும் இருபிரிவினரையும் ஒரு நூல் திருப்தி செய்ய முடியாது.

பல்கலைக்கழக மட்டத்தில் பொருளியல் பாடம் இன்று கணித அணுகுமுறையை அதிகம் உள்வாங்கிக்கொண்டுள்ளது. இதனால் அண்மைக் காலங்களில் மாணவர்கள் அதனைக் கற்பதில் பெரும் சிரமங்களையே எதிர்நோக்குகின்றனர். இந்நூலில் கணித அணுகுமுறையின் வாசனையே காணப்படவில்லை.

அவ்வாறாயின் இந்நூல் யாரைத் திருப்தி செய்ய எழுதப்பட்டது. பல்கலைக்கழக உயர்வு நிபந்தனைகளை நிறைவு செய்ய நூல்கள் எழுத வேண்டும் என்பதற்காகத் தகுதியற்ற நூல்களைப் பதிப்பித்து வரும் தற்கால செல் நெறிகளை ஆசிரியர்கள் நன்கு உள்வாங்கி விட்டார்கள் போலுள்ளது.

இந்நூலில் வரைபடரீதியான விளக்கத்திற்கும், கணிதரீதியான அணுகுமுறைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. குறிப்பாக கேள்வி - நிரம்பல், உற்பத்திச் சாத்திய வளையி, சந்தைச் சமநிலை என்பனவற்றின் கணித ரீதியான விளக்கங்கள் இன்று மிகவும் முக்கியமானவை. அவற்றினடிப்படையிலேயே இன்று பொருளியல் கற்பிக்கப்பட்டு வருகின்றது. இத்தகைய விளக்கங்கள் எதுவுமின்றி விவரண ரீதியான விளக்கங்களே இந்நூல் முழுவதும் விரவிக்கிடக்கின்றது. '''பல்கலைக்கழக உள்வாரி, வெளிவாரி மாணவர்களின் தேவையை ஒட்டி இந்நூலின் சில பகுதிகளை ஆழமாகவும், அகலமாகவும் கொண்டு வர எண்ணியுள்ளோம்'' என்ற ஆசிரியர்களின் கூற்று இதிலிருந்து தப்புவதற்கான ஒரு வழியாகவே இருக்கின்றது. அகலமாகச் செய்யப்பட்ட இந்நூலிலேயே அதனைக் குறிப்பிட்டிருக்கலாமே.

ஒவ்வொரு விடயங்களும் விளக்கப்படும் பொழுது அதற்கருகிலேயே வரைபடங்களும் கொடுக்கப்படுவது அவசியம். ஆனால் இந்நூலில் அவை எங்கெங்கோ கொடுக்கப்பட்டுள்ளது. தனியுரிமைச் சந்தை பற்றிய விளக்கத்தில் ''விலை பேதப்படுத்தல்'' என்பதற்கு விளக்கம் கொடுத்திருக்கவேண்டும். சிலருரிமைச் சந்தை அமைப்புக்கள் பற்றிய விளக்கம் எதிர்பார்த்த அளவிற்குக் கொடுக்கப்படவில்லை. எண்கணித ரீதியான தரவுகள் சில தவறாகக் கணிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, மாறா அளவுத்திட்ட வளைவு விதிக் கணிப்பீட்டைக் குறிப்பிடலாம்.

சில சொற்றொடர்களுக்கு உதாரணமாக, இணைக்கிணை நிதியம் போன்றவற்றிற்கு விளக்கம் கொடுக்கப்படவில்லை. நீண்ட காலச் சராசரிச் செலவுக் கோடு விளக்கப்பட்டிருப்பது போன்று நீண்ட கால எல்லைச் செலவு விளக்கப்பட்டிருக்கவேண்டும். பல்கலைக்கழக மட்டத்தில் பொருளியலை ஒரு பாடமாகக் கற்பிப்பதோடு(?), க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பிரதம பரீட்சகர்களாகக் கடமையாற்றிய அனுபவம் பெற்ற இந்நூலின் ஆசிரியர்கள் (அணிந்துரையைப் பார்க்கவும்), உயர்தர மாணவர்களை இலக்காகக் கொண்டு எழுதப்பட்ட இந்நூலில் சில எண்ணக் கருக்களுக்குச் சுருக்கமாக வேணும் விளக்கம் அளிக்கத் தவறியதேன்? கேள்விக்கு அடிப்படையாக அமையும் எல்லைப் பயன் தத்துவத்தினை விளக்க முனைந்தமை சிறப்பானது எனினும் எல்லைப் பயனூடாகக் கேள்விக் கோடு வரைபட ரீதியாக விளக்கப்பட்டிருப்பின் சிறப்பாக அமைந்திருக்கும்.

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்குமென எழுதப்பெற்ற

இந்நூல் தனது தேவையைப் பூரணமாக நிறைவேற்றியுள்ளதா என நோக்கும் போது எதிர்பார்த்த அளவிற்குப் பலாபலனைக் கொடுக்கவில்லையென்றே குறிப்பிட வேண்டும். நிறைந்த விடயங்களை விளக்கமின்றிக் கொடுப்பதை விட குறைந்த விடயங்களையாவது தெளிவான விளக்கத்துடன் கொடுத்திருப்பின் இந்நூல் தனது நோக்கினை அடைந்திருக்கும்.

இன்று எமது பொருளியல் மாணவர்களுக்கு தேவையானது அடிப்படையான அம்சங்களை அதற்கேயுரிய சர்வதேச செல்நெறிகளுடனும், கணித ரீதியான அணுகுமுறைகளுடனும் விளங்கிக்கொள்வதற்கான நூல்களே, இவைதான் மாணவர்களின் பொருளியல் அறிவை ஒரு காத்திரமான அத்திவாரத்தில் கட்டியெழுப்பக் கூடியவை. நமது கடந்த கால பொருளியல் கல்வி வரலாறு சுவடு தெரியாமல் மறைந்து போனமைக்கு இவ்வடிப்படையின்மையே காரணமாகும்.

மாணவர்களுக்கு (உயர்தர/பல்கலைக்கழக) சிறிதும் பயனற்ற இந்நூலினைத் துணிந்து வெளியிட்ட ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள். ஆனால் ஆழமின்மையும், அனுபவமின்மையும், பொருளியல் பற்றிய முறையியலுடன் கூடிய அடிப்படையின்மையும், அவசரக் கோலமும் ஆசிரியர்களின் எழுத்துக்களில் தொனிக்கின்றன. கடந்த கால எமது முன்னவர்கள் போன்று பொருளியல்தலைமுறையை சுயநல நோக்குகளுடன் சிதறடித்து விடாது. சிறந்ததொரு பொருளியல் சமூகத்தைக் கட்டியெழுப்ப அடுத்த நூலிலாவது முயற்சிப்பது அவசியம். ○

— சசிராணி

4→

# மாற்று...

கின்றனர். ஆனால் தன் முனைப்பு (ego), தத்துவார்த்த கருத்து நிலை (ideology Concepts) போன்ற பல்வேறு மனநிலைகளில் கட்டுப்பட்டுள்ளதனால் நாடகக் கருத்துப் பரிமாற்றங்களை உள்வாங்கி அடுத்த தளத்திற்கு நகர்த்த முற்படவில்லை. இதனை நான் தொடர்ச்சியாகப் பல கலந்துரையாடல்களில் கவனித்து வந்துள்ளேன். வெவ்வேறான கருத்துப்பள்ளிகளில் (School of thoughts) இருந்து வந்தவர்கள் அவற்றுள் மட்டுமே நின்று விடுகின்றமை துரதிருஷ்டவசமானது. எனவே இவற்றில் இருந்து விடுபட்டு ஒரு பொதுத்தளத்தில் இருந்து விடயங்களைப் பரிமாறிக் கொள்வது நாடகமும் சமூகமும் வளர வழி வகுப்பதாகும். எல்லோரும் கூறியது போல் சமூக முரண்பாடுகளின் வெளிப்பாடாக நாடகம் அமைகின்ற போது கால்மார்க்ஸ் கூறியதுபோல் அரசு அற்ற சமூகம் (Stateless Society) ஒன்று உருவாகி அங்கு முரண்பாடுகள் அற்ற உன்னத சமூகம் ஒன்று உருவாகினால் அப்போது நாடகம் என்ற வடிவம் இல்லாமல் போய் விடுமா அல்லது அதற்குத் தேவை இருக்காதா என்பது இன்னொரு கேள்வி. இது ஒரு கற்பனைவாதம் எனினும் இதனையிட்டு சிந்திக்க வேண்டியும் உள்ளது.

எல்லோரும் ஒரு இலக்கை அடைய முடிவு செய்து பல்வேறு பாதைகளை தெரிவு செய்கின்றார்கள். ஆனால் இலக்கு ஒன்றாகவே இருக்கும். சமூக மாற்றம், மனிதம், மனித நேயம் என்பதே இலக்குகளாக இருக்கின்றது. அதனை அடைய பல்வேறு வகையான நாடக உத்திகள், அளிக்கைகள், நிகழ்வுகள், மூலம் பல்வேறு நாடகவியலாளர்கள் முயல்கின்றனர். எனவே இவர்கள் ஏன் தம்முள் முரண்பட்டுக் கொண்டும், தாமே தொடக்கப் புள்ளி என்றும் கூறி விடயங்களை சிக்கல்படுத்துகின்றனர் என்பது புரியவில்லை. மேலும் இதனை அவர்கள் அடைய வேண்டிய மனிதம், மனித நேயம் போன்ற விடயங்களை அவர்களே போட்டு உடைத்துக் கொள்கின்றனர். இதன் அடிப்படை யாது என்பது இன்னொரு கேள்வி.

எனவே ஒரு அவதானிப்பாளன் என்ற வகையில் எனது மனதில் தோன்றிய சில சிந்தனைகளையும், அவதானிப்புகளையும், கேள்விகளையும் சரிநிகர் வாசகர்கள் முன்வைக்கிறேன். எதிர்காலத்தில் இதனை அடிப்படையாகக் கொண்டு அல்லது இன்னொரு தளத்தில் இருந்து பல்வேறு கருத்துப் பரிமாறல்கள் (விவாதங்கள் அல்ல) தொடர வேண்டும். இதன் அடுத்த தளத்தில் தன்முனைப்பு(ego), தத்துவார்த்த கருத்து நிலை (ideology Concepts) வெவ்வேறு கருத்துப் பள்ளிகள் School of thoughts போன்ற குறுகிய எல்லைகளில் இருந்து விடுபட்டு ஒரு வேறு புதிய தளத்தில் இருந்து கருத்துப் பரிமாற்றங்கள், உள்வாங்கல்கள் இடம்பெறவேண்டும். கருத்து பரிமாற்றல்களின் போது தொடர்ச்சியாக நண்பர்களாக இருப்பதும் தமது கருத்துக்களை சுதந்திரமாக சொல்வதும் பின், தொடர்ந்து நண்பர்களாக இருப்பதும் ஒரு புதிய தளத்தின் யுகத்தின் களமாக மாறும். அதன் மூலம் நாடக வளர்ச்சியினை இன்னொரு தளத்திற்கு இட்டுச் செல்ல முடியும் என நான் நம்புகிறேன். ○

மௌ. சித்தார்த்தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வாசகர் செ(ா)ல்லடி



# ஔவையின் முடிவு சரியானதல்ல!

கவிஞர் ஔவை அவர்களின் கவனத்திற்கு எனது கட்டுரையும் உட்பட்டதையிட்டு மகிழ்ச்சி. ஆயினும், அது அவரை ''அதிர்ச்சிக்குள்ளாக்கியது'' என்றும், ''அடிப்படையான பெண்ணியம் பற்றிய பார்வை குறைபாடு கொண்டதாக இருக்கிறது'' என்றும் அவர் குற்றஞ் சாட்டியிருக்கிறார். ''பெண்ணியம் பெண்களைப் போகப் பொருளாகப் பார்ப்பதை எதிர்க்கிறது'' என்றும், பெண்ணை கலாபூர்வமாகப் பார்த்தாலும், அது ''ஆண் மேலாதிக்கக் கண்ணோட்டத்தில் இருந்து உருவான பெண்ணைப் போகப் பொருளாகப் பார்க்கும் பார்வையேதான்'' என்றும் திட்டவட்டமாக அவர் கூறிவிடுகிறார். இதற்கு விளக்கமாக அவர் இன்னும் சில வரிகளை எழுதி ...ண்ணை ஒரு சமூகப் பிராணியாக ஆண்கள் கருதுவதில்லை என்ற முடிவுக்கும் வந்து விடுகிறார்.

கவிஞர் ஔவை அவர்களின் கருத்துக்கள் அவருக்கே உரித்தானவை. அவை பற்றி நான் வாதிட விரும்பவில்லை. ஏனெனில், அவர் நிராகரிக்கும் அழகியல் பற்றி நிறையவே எழுத வேண்டியிருக்கும். ஆண் பெண்ணை இரசிப்பதும், பெண் ஆணை இரசிப்பதும் வெறும் ''உடல் சம்பந்தப்பட்ட தேவை மட்டுமே'' அல்ல. அதற்கும் மேலாக பல உறவுகள் உள்ளன. பெண்களின் அழகையும், கவர்ச்சியையும் கலா ரீதியாக ஆண்கள் மாத்திரமல்ல, பெண்களும் இரசிப்பதுண்டு. பெண்ணை இரசிப்பதனால் வெறும் போகப்பொருளாக ...திரமே ஆணாதிக்கக்காரர்கள் அவளை நோக்குகிறார்கள் என்பது சரியான முடிவல்ல.

பெண்கள் போகப்பொருள், கவர்ச்சிப் பொருளாகச் சித்தரிக்கப்படுகிறார்கள் என்பதை மறுக்கவில்லை. ஆயினும் எல்லோருமே அவ்வாறு சித்திரிக்கிறார்கள், நோக்குகிறார்கள் என்பது சரியல்ல. ''கலாபூர்வமாகக் காட்டினாலும் என்ன, கேவலமாகக் காட்டினாலும் என்ன, அது அடிப்படையில் ஆண் மேலாதிக்க கண்ணோட்டத்தில் இருந்து உருவான பெண்ணைப் போகப்பொருளாகப் பார்க்கும் பார்வையேதான்'' என்று ஔவை அவர்கள் கூறுவதை கலை, இலக்கிய மாணவனாகிய என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. காரணம் மனித உணர்ச்சிகளையே நான் நிராகரிக்க வேண்டும். பெண்ணை வெறும் சடப்பொருளாக மாத்திரமே அணுகவேண்டியிருக்கும். பெண்ணை ஓர் ஆணாகவே உருவகப்படுத்தி உறவுகொள்ள வேண்டியிருக்கும். ''எதிர்மறைகளின் ''கவர்ச்சி'' (Attraction of the Opposites) என்ற கருத்தோட்டத்தை மறுதலிக்க வேண்டியிருக்கும். ''எத்தனை கோடி இன்பம் படைத்தாய் இறைவா'' என்ற பாரதியின் வியப்புக்குள் பெண்மையும் அடங்கும்.

பெண்ணின் அழகு கலைக்கண்ணோட்டத்தில் பார்ப்பவர்களுக்குப் பரவசமூட்டுவது மாத்திரமல்ல வாழ்வின் உந்து சக்தியுமாகும்.

''ஆபாசக் கண்ணோட்டமாக எல்லா ஆண்களும் பார்க்கிறார்கள். ஆணாதிக்கத்தின் வெளிப்பாடு அது'' என்ற கருத்துப்பட ஔவை அவர்கள் கூறுவது நியாயமற்றது. பற்பல காரணங்களுக்காக பெண்கள் தமது இரசனையை வெளிப்படையாகத் தெரிவிப்பதில்லை. ஆண்கள் செய்கிறார்கள். இதுதான் உண்மை. அதேவேளையில் இப்பொழுதெல்லாம் பெண் எழுத்தாளர்களும், பெண் திரைப்பட நெறியாளர்களும் பெண்ணை மாத்திரமல்ல, ஆணைக்கூடக் கலாபூர்வமாகச் சித்திரிக்கிறார்கள். உதாரணங்கள் நிறைய இருக்கின்றன.

ஔவை அவர்கள் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி என்று அறிகிறேன். எதனையுமே நிரூபணத்துடன் எதிர்பார்ப்பவர்களுக்குக் கலைகளை துய்ப்பது கொஞ்சம் புதிராகத்தான் இருக்கும். கலாபூர்வமாகப் பார்ப்பதற்கும் ஆணாதிக்கத்திற்கும் தொடர்பு இருக்கிறது என நான் நினைக்கவில்லை.

நீங்கள் என்னதான் முடிவுகட்டினாலும், என்னைப் பொறுத்த மட்டில் அழகை (அது பெண்ணுருவத்தில் இருந்தாலும் கூட) கலாபூர்வமாக நான் இரசிக்கவே செய்வேன்.

*கே.எஸ்.எஸ்.*

# புலிகளுக்கு தெளிவு இருந்தது!

115வது இதழில் வந்த குஜ்ரால் பற்றிய நாசமறுப்பானின் கட்டுரை எழுந்தமானத்தில் எழுதப்பட்டுள்ளது. புலிகள் தமது போராட்டத்தில் 87க்கு முன்னிருந்தே இந்தியாவின் தலையீடு அல்லது ஈடுபாடு பற்றி மிகுந்த தெளிவுடன் இருந்தனர். ஒரு அரசியல் ரீதியாகக் கட்டியெழுப்பப்படாத இராணுவ ரீதியாகக்கட்டியெழுப்பட்ட இயக்கமாகிய புலிகளில் இந்தியா தொடர்பாக மிகத்தெளிவான கண்ணோட்டமிருந்தது மெச்சத்தக்கது.

1986ல் கரவெட்டியில் ஒரு பட்டிமன்றம் இந்தியப் படைகளின் வருகை தமிழீழப் போராட்டத்திற்கு அவசியமானதா அவசியமற்றதா எனுந்தலைப்பில் நடைபெற்றது. விவாதம் முடிவடைந்த பின்னர் நடுவர் பார்வையாளர் தரப்பிலிருந்தும் இருவரை தமது கருத்துக்களைச் சொல்ல அனுமதித்தார். ஒரு சாமானிய குடும்பப்பெண்மணி இந்தியப் படைகளின் வருகையை அவாவி உரையாற்றினார். மறுபக்கத்தில் அப்போது அதிகம் பிரபல்யமடைந்திராத விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு உறுப்பினரான செங்கதிர் இந்தியப் படைகளின் வருகை தமிழீழப் போராட்டத்திற்கு எவ்விதம் குந்தகமாக அமையும் என மிகத்தெளிவாகவும் வரலாற்று ஆதாரங்களோடும் பேசினார்.

*நட்சித்திரன் செவ்விந்தியன்*

# ஜன்னலைத் திறந்து வைப்போம்!

சரிநிகர் இதழ் 118இல் ஆழ்வார்க்குட்டியின் ''மறுபக்கம்'' பார்த்தோம் -

இதுவரை ஆழ்வார்க்குட்டியின் ஒரு பக்கத்தை தெரிந்திருந்த எமக்கு, ஆழ்வார்க்குட்டியின் மறுபக்கமான மனப்பிறழ்வு கொண்ட மலிவான ஒரு பக்கத்தை பார்த்ததும் இதை எழுத வேண்டுமென உறுதியாக தீர்மானித்துக்கொண்டோம். ஆழ்வார்க்குட்டியின் கமலினி செல்வராசாவின் பேச்சுத் தொடர்பான பார்வையானது கமலினி செல்வராசனை மட்டுமன்றி, ஒட்டுமொத்தமாக பெண்களின் ஆத்மாக்களையே கொச்சைப்படுத்தியிருக்கிறது. இதுவொரு மலிவான எழுத்தின் மறுபக்கம்தான்.

இதற்கு மேலாக ''சரிநிகர்'' தொடர்பான எமது அபிப்பிராயம் அதிகம் கேள்விக்குள்ளாகிறது. 117வது. இதழை சரிநிகர் பெண்ணியச் சிறப்பிதழாகப் போட்டு விட்டு சூடுதணியுமுன் அதன் அடுத்த இதழிலேயே இன்றைய எமது சமூக அமைப்பில் ஒரு பெண் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அப்பெண் இச்சமூகத்தின் முன் பகிரங்கமாகவும் ஆவேசமாகவும் தீர்க்கமாகவும் முன்வைக்கும்போது அதனை அதன் யதார்த்தத்தை தரிசிக்க மறுக்கும் ஆழ்வார்க்குட்டியின் குறைந்த தவறான பார்வைக்கு பெண்ணியத்திற்காக குரல் எழுப்பும் ''சரிநிகர்'' இடமளித்தது கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டியதே!

''தனக்குச் சொந்தமான பஸ், பல சரக்குக்கடை அனுபவங்களையும் பகிர்ந்தளிக்கத்தொடங்கிய போது விழா களை கட்டியது. பெட்டைகளோடு சேட்டை விடுறதுக்கு சில புதுச் சொற்பிரயோகங்களையும் செய்முறை விளக்கங்களையும் அறிந்து கொண்டதாக சில **'மம்முதக்குஞ்சுகள்'** திருப்தி தெரிவித்தார்கள்'' என ஆழ்வார்க்குட்டி கண்டுபிடித்து எழுதியிருக்கிறார்.

இது என்ன? இந்த எழுத்தின் பெறுமானம் யாது? கமலினி செல்வராசன் பெண்களுடன் உரசுவதற்கும் சைட் அடிப்பதற்குமா வகுப்பு நடத்தினார்? ஆழ்வார்க்குட்டியின் கோளாறுகளில் இருந்தும் இந்த ஆணாதிக்க பிற்போக்கான சமூக அமைப்புகளின் பார்வையில் இருந்தும் இப்படித்தான் எழுத முடியும். பார்க்க முடியும்.

இனி ஆழ்வார்க்குட்டி விமர்சனம் எழுதும் புத்தக வெளியீட்டு விழாக்களில் விழா களை கட்ட? விழா ஏற்பாட்டாளர்கள் செத்துப் போன மர்லின் மன்றோ தொடக்கம் அனுராதாக்களையும் கொண்டு வந்து டான்ஸ் ஆட வைத்தால்தான் விழா களை (?) கட்டியது என எழுதுவார் போலிருக்கிறது.

ஆழ்வார்க்குட்டியின் மறுபக்கம் உண்மையில் சிந்தனை வழியில் தமிழ் மரபில் கட்டிப்போன ஒரு பார்வைதான்.

பொறுப்பில்லாததும், மானுட, சமூக அக்கறை இல்லாத எழுத்துகளுக்கும் சரிநிகர் இனியும் இடமளிக்குமா? சரிநிகருக்கு எப்போதும் சமூக வரலாற்றுக் கடமை இருப்பதை சரிநிகர் ஆசிரியர் பீடம் மறந்து விடக்கூடாது! வீரகேசரியில் ''மீரா'' எழுதியது போல் சரிநிகரில் எழுதலாமா - எங்களைப் பொறுத்தவரை வீரகேசரியும் சரிநிகரும் ஒன்றல்லவே - இனியாவது எங்கள் நம்பிக்கையைக் காப்பாற்றுங்கள்.

118வது சரிநிகரில் ஆழ்வார்க்குட்டியையும் சரிநிகரையும் பார்க்கும்போது சரிநிகரும் ஆணாதிக்க சிந்தனை வெளிப்பாட்டிலிருந்து இன்னும் மீளவில்லையோ எனக் கேட்கத் தோன்றுகிறது.

ஆழ்வார்க்குட்டி சரி - சரிநிகருமா இப்படி?

''ஜன்னல்களை திறந்து வைப்போம். புதியகாற்றுக்கள் உள்வரட்டும்''

*எம். பௌசர் + மதுசூதனன்,*
*கொழும்பு - 5*

# தெய்வம் நின்று கொல்வதில்லை!

''தம்பி சற்று மெலிந்தானானால் அண்ணன் தானடிமை கொள்ளலாமா?'' இப்படி எழுதும் ஜெயபாலன் அவர்கள் முஸ்லிம்கள் மீதான தமிழ் இயக்கங்களின் பிரதானமாக, புலிகளின் நடவடிக்கைகளையிட்டு மிகவும் வருந்தும் நபராக காணப்படுகிறார். நேர்மையாக இப்பிரச்சினையைப் பார்க்கும் எவரும் இவ்விடயமாக கவலையே கொள்வர். அது நிவர்த்தியாக்கப்பட வேண்டுமென உள்ளார்த்தமாக விரும்புவர். வ.ஐ.ச. ஜெயபாலன் இவ்விடயமாக எழுதுவதெல்லாம் சரியான விடயங்களே எனலாம். ஆனால், கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயம் ஜெயபாலன் அவர்கள் மூடத்தனமான கருத்தியல் நம்பிக்கைகளுக்கும், முதலாளித்துவ தேச திரிபுகளுக்கும் புத்துயிர் வழங்குபவராக இருக்கக் கூடாது என்பது தான். இது சமூக விஞ்ஞான யதார்த்த இயக்கத்தை ஒவ்வொருத்தரும் புரிந்து கொண்டதை அடிப்படையாகக் கொண்டுதான் உருவாகுவது. ஜெயபாலன் அவர்களின் புரிதல் எங்கேயோ தெரியவில்லை.

''தெய்வம் நின்று கொல்லும்'' என்பது ஹிட்லர், முசோலினி போன்ற கொடூரமானவர்களின் அதிகார ஆட்சி முடிவிற்கு வந்ததின் ஊடாக எமது வாழ்வியகக்கத்தின் ஆதார நம்பிக்கைகளாகி விட்டதாக அதிக நம்பிக்கை தொனிக்கும் சொற்களைப்பாவித்து எழுதுகிறார். இடையில் ஸ்டாலின், பொல்பொட் ஆகியவர்களையும் கொடூரமானவர்களின் வரிசையில் குறிப்பிடுகிறார்.

இதில் ஸ்டாலினை எடுத்துக் கொண்டால் இன்று ரஷ்யாவில் அவரது உருவப்படங்களைத்தாங்கி பல்லாயிரக்கணக்கான மக்கள் அணிதிரள்கிறார்கள் என்ற உண்மை ஜெயபாலனை எட்டவில்லையோ? ரொட்ஸ்கிய கும்பலின் கபடமான வக்கிரமான அதிகாரத்தைக் கைப்பற்றும் எண்ணங்களை லெனினிற்குப்பிறகு ஸ்டாலின் பல ஆண்டுகள் விட்டுக்கொடுத்து அணுகினார் என்பதற்கு நிறையவே ஆதாரங்கள் உண்டு. நான்காவது அகிலத்தின் வாக்கு மூலத்திலிருந்து என்னும் ''சமர்'' குழுவினரின் வெளியீட்டை ஜெயபாலன் படிக்க வேண்டும். படித்திருந்தால் நேர்மை, ஆரோக்கியம் சார்ந்த விமர்சனங்களை வாசர்களுக்குத் தரமுடிந்திருக்கும். அதுதான் அறவெழுத்துக்கு வலிமை. ஜெயபாலன் அவர்கள் ஸ்டாலின் பற்றி என்ன நினைத்தாரோ தெரியவில்லை, ஹிட்லரின் வரிசையில் சேர்க்கவில்லை. இங்குள்ள முதலாளித்துவ பத்திரிகைகள், தொலைக் காட்சிகள் எல்லாம் அதைத்தான் செய்து கொண்டிருக்கின்றன.

''தெய்வம் நின்று கொல்லும்'' என்ற வாழ்வியக்க ஆதாரநம்பிக்கை இலங்கையில் பொய்த்து விட்டதை ஜெயபாலன் அறியவில்லையோ!? பல ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களை கொன்றொழித்த சிறிமாவோ மீண்டும் பிரதமர் பதவியை தனதாக்கிக்கொண்டதை என்னவென்பது?

எல்லாவற்றுக்கும் மேலாக பாதிரிகளால் காட்டுமிராண்டித்தனமாக, தீ வைத்து கழுகுமரத்தில் குத்தி கொல்லப்பட்ட அந்த மகத்தான விஞ்ஞானிகளின் பட்டியலை சரிநிகர் அண்மையில் தானே வெளியிட்டு இருந்தது.

இந்தப்பாதிரிகளின் நிறுவனம் இன்னும் மக்களின் வரிப்பணத்தில் தானே சுகபோகமாக வாழ்கிறது. இன்னும் ஆவி எழுப்பி ஏய்க்கிறது. தெய்வம் நின்று அழித்ததா? மக்கள் மதவாதிகளின் பிற்போக்குக் கருத்துக்களை நம்பிக்கொண்டிருப்பதால் அந்நிறுவனம் உயிர்வாழ்கிறது என்பதை புரிய முடியாமல் இருக்கிறதா? மக்களின் சிந்தனை விஞ்ஞானப் பார்வைகொண்ட நிலைக்கு மாற்றப்படுமானால் துய்ப்பவர்கள் தாமாகவே அழிந்து போவார்கள்.

அதைவிடுத்துத் தெய்வம் நின்று கொல்லும் என்றெல்லாம் குழப்பாதீர்கள். மக்களின் ஆராய்வுச் சிந்தனைகளை மென்மேலும் மழுங்கடிக்காதீர்கள். மக்கள் துரோகிகளை அச்சமூட்டி பிரச்சினையைத் தீர்க்கலாமென நினைக்காதீர்கள்.

இது அல்ல பிரச்சினைக்குத் தீர்வு முற்போக்குச் சிந்தனையுடைய தலைமைகள் (இவர்கள் மதவாதிகளாக இருக்க முடியாது) அதை அனுசரித்து ஏற்கக் கூடிய மக்கள் சக்தியினூடாகவே இப்பிரச்சினை தீர்க்கப்படலாம். அதற்காக எழுதுங்கள். வரலாற்றுத் துரோகிகள் மக்களால் தூக்கியெறியப்பட்டதை உதாரணம் காட்டுங்கள். கடவுளர்களால் அல்ல என்பதை மக்களுக்குச் சொல்லுங்கள்.

*நா. திலகராசா, (சுவிஸ்)*

## அதிகார...

பெப். 12 ராசிக் குழுவினரால் கைது செய்யப்பட்ட மூனித்தம்பி விக்னேஸ்வரன் (38), முத்தையா அருண் (24) ஆகிய இருவரது சடலங்கள் மார்ச் 22 களுவங்கேணியில் உருக்குலைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

பெப். 4 காலை 9மணியளவில் புன்னச்சோனைக் கிராமம் மாமாங்கப் பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து வேலை செய்விக்கப்பட்டனர். பெரிய கல்லாற்றில் இருக்கும் வி.அ.படையினர் விறகு வெட்ட செல்வதற்காக பெப். 2 அன்று இளைஞர்கள் சிலரை அழைத்துச் சென்றனர். பெப். 3 அன்று குறுமன்வெளி, மடுமகிளூர் கிராமங்கள் குறுமன் வெளி வி.அ படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு இதில் சந்தேகத்துக்கிடமான இளைஞர்கள் சிலரை முகாமில் வைத்து நையப்புடைத்து விட்டு விடுதலை செய்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a news paper in Srilanka

## நாக்குத் தொங்கல்

● "மலையக மக்களின் தலைவர் எனக் கூறிக்கொண்டு பிரதான கட்சிகள் இரண்டினதும் தலைமைகளை இதுவரை ஏமாற்றிவந்த தொண்டமானின் இனவாத அரசியலுக்கு முழுக்குப் போட மக்கள் தயாராகிவிட்டார்கள் என்பது இந்தத் தேர்தல் முடிவிலிருந்து தெளிவாகியுள்ளது. கட்சிகள் இரண்டுடனும் பெருமிதத்துடன் சென்ற தொண்டமானின் இனவாத அரசியலுக்கு இத்தேர்தல் நல்லதொரு பாடம்"

-ஐ.தே.க எம்.பி.சுசில் முணசிங்க (லங்காதீப-26.3.97)

இம்முறை, எம்மை ஏமாற்றி வந்த தொண்டமானின் மக்களை நாம் ஏமாற்றி விட்டோம் என்கிற வெற்றிக் களிப்பு அவருக்கு.

● "நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை நீக்குவதற்கான அங்கீகாரத்தை பாராளுமன்ற தெரிவுக்குழு வழங்கிவிட்டது."

-நீதியமைச்சர் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் (தினமின 27.3.97)

பூனைக்கு மணி கட்டும் சுண்டெலிகளின் தீர்மானம்!

● நாட்டில் இருப்பது இனப்பிரச்சினையல்ல ஆயுதந் தாங்கியவர்களை அடக்குவதற்காக நடக்கும் சண்டையே!"

-ஜனாதிபதி சந்திரிகா திவய்ன-(21.3.97)

அப்போ பிரபாகரன் செய்வது சரி என்கிறாரோ ஜனாதிபதி

● "மிரட்டல்களுக்குப் பயந்து நாட்டுக்கு வெளியே சந்திரிகா இருந்த போது நான் தான் ஸ்ரீ.ல.சு.கவை தோளில் சுமந்து காத்தேன். இந்த அரசாங்கம் சொல்கிறது எனது தகப்பனாரை கொன்றவர்கள் ஐ.தே.கவினராம். பண்டாரநாயக்கா வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் ஸ்ரீ.ல.சு.க. உறுப்பினர்களே!

-வெயங்கொட கூட்டத்தில் அனுர பண்டாரநாயக்க (திவய்ன-18.3.97)

தகப்பனாரை கொன்றவர்களைச் சுமந்த பாவி நான் என்கிறாரோ அனுரா? காலம் தப்பி வந்த ஞானம்.

● "வடக்கு பிரபாகரனுக்கு, கிழக்கு அஷ்ரப்புக்கு, மலையகம் தொண்டமானுக்கு, கொழும்பு கணேசலிங்கத்துக்கா?"

தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தினேஷ் குணவர்தன. ((திவய்ன-18.3.97)

அதனாலென்ன, உங்களுக்கு குப்பைக் கூடை இருக்கிறது தானே எனக் கூறிவிட்டார்கள் வாக்காளர்கள்

● "சிங்களவரின் நாடு சிங்களவருக்கு இல்லாமல் போகும் இந்த கட்டத்தில் பாவிக்க வேண்டிய இறுதித் தேர்தல் தான் இது"

தினேஸ் குணவர்தன-(திவய்ன-19.3.97)

அடுத்த தேர்தலில் அவர் போட்டியிட மாட்டார் என்கிறார் போலும். அன்னிய நாட்டில் போட்டியிட முடியுமா என்ன?

● "வடக்கில் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த 95 சதவீதமான நிலப்பகுதியில் 70 சதவீதத்தை விடுவித்துள்ளோம். இன்னும் சில நாட்களில் எஞ்சியவற்றையும் விடுவித்துவிடுவோம்!"

பிரச்சாரக் கூட்டத்தில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த-(திவய்ன-19.3.97)

அதற்குள் அவர் காணி அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டு விடுவார். பிடித்த நிலத்தை விடமுடியுமா என்ன?

● "நாடு, இனம், மதம் பற்றி அக்கறையுள்ள சிங்களவர்கள் உள்ளார்களெனில் இம்முறை பொ.ஐ.முவுக்கு வாக்களிக்க மாட்டார்கள். ஆனால் இன்று சிங்களவர்கள் முஸ்லிம் வேட்பாளர்களுக்கு "வாழ்க" என கத்தித் திரிகிறார்கள்"

பௌத்த சம்மேளன கூட்டத்தில் தம்மானந்த தேரோ (திவய்ன-19.3.97)

சிங்களவர்கள் இஸ்லாத்தில் சேர்ந்துவிட்டார்கள் என்று கவலை அவருக்கு. அதுதான்.

● "அரசாங்கம் நடத்துவது ஈழம்வாதிகளுக்கு கப்பம் வழங்கும் உத்தியோகபூர்வமற்ற தேர்தலையே"

தேர்தல் கூட்டத்தில் ஜே.வி.பி தொழிலாளர் சங்க செயலாளர்.சேனாரத்ன சில்வா-(திவய்ன-20.3.97)

கப்பத்தில் தமக்குக் கிடைத்த பங்கு போதாது என்று சொல்கிறார்கள் அவ்வளவுதான்.

● "10-15 வாக்குகளை பெற்ற 16 பேரும் தேசிய பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட 26 பேரும் பாராளுமன்றத்தில் உள்ளனர். இவர்கள் தான் சட்டங்களை உருவாக்குகிறார்கள். சிங்கப்பூரில் 39வது பிரிவு சட்டத்தின் படி தேசியப்பட்டியல் உறுப்பினர்களுக்கு அரசியல்யாப்பு திருத்தம் செய்யும் அதிகாரம் இல்லை.!"

-ஹரிச்சந்திர விஜேதுங்க-தலைவர்:-சிங்களயே மகா சம்மத்த பூமி புத்திர பக்ஷய-(திவய்ன-23.3.97)

105 வாக்கு பெற்ற எமக்கு அந்த அதிகாரத்தை தந்தால் என்ன என்கிறார் போலும் விஜேதுங்க

● "அரசின் தீர்வு யோசனைகளுக்கு மக்கள் அளித்த ஆணையையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன."

அமைச்சர் அலவி மௌலானா (வீரகேசரி-23.3.97)

எந்த யோசனைகளை அமைச்சர் சொல்கிற..

● "சிறுபான்மையினரின் வாக்குகள் ஐ.தே.கவுக்குப் போய்விட்டன. தமிழ் மக்களின் வாக்குகள் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே கணேசலிங்கத்தையும் நியமித்திருந்தோம்"

அமைச்சர்-ஏ.எச்.எம்.பௌசி (வீரகேசரி-23.3.97)

முஸ்லிம் வாக்குகளுக்காக மகனைப் போட்ட விடயத்தை அவர் மறந்து விட்டார் வேறொன்றுமில்லை.

● "தீர்வுத் திட்டத்தை சிங்கள மக்கள் ஆதரிப்பதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன"

கூட்டணி தலைவர் சிவசிதம்பரம் (வீரகேசரி-24.3.97)

தமிழ் மக்கள் ஆதரிக்கவில்லை என்பதை தலைவர் குறிப்பால் உணர்த்துகிறார் போலும்!

● "கொழும்புக்கு என்ன ஆனது "-ஜனாதிபதி சந்திரிகா

"கொழும்பில் தொண்டமானுக்கு கூடுதலான வேட்பாளர்களை வழங்கியதே தோற்றதற்கு காரணம்"-பௌசி

லங்கா தீப 30.3.97

அதுசரி, மலையகத்துக்கு என்ன ஆனது? உங்களுக்கு இடம் தந்ததுதான் தொண்டமான் தோற்றதற்கு காரணமோ?

நாலு வார்த்தை

# மட்டக்களப்பு: அதிகாரத்தின் கர்ச்சனை

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வவுணதீவு, மங்கிக்கட்டு, காயான்மடு, குறிஞ்சாமுனை, கன்னன்குடா ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளைபாதுகாப்புக் காரணங்களுக்காக மூடிவிடுமாறு மட்டக்களப்பு மாவட்ட பிரிகேடியர் உத்தரவிட்டிருக்கிறார்.

வவுணதீவு பாலம் உடைக்கப்பட்ட பின்னரும் பாவனையிலிருந்த கட்டைக்காடு பாலம் தற்போது உடைக்கப்பட்டிருக்கிறது. அப்பகுதியூடாக மக்கள் போக்குவரத்தில் ஈடுபடுவது தமக்குப் பாதுகாப்பற்றது எனப் படையினர் கருதியதால் படையினரே அதனை உடைத்துள்ளதாகப் பேசப்படுகிறது.

மட்டக்களப்பு இருதயபுரத்தில் மார்ச் 16 நள்ளிரவு 1.30மணியளவில் கிங்ஸ்லி ஏக்கஸ் (மேளின்) சி.எஸ்.யு. பொலிஸ் பிரிவினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஏக்கஸின் கணவர் கிங்ஸ்லி துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சப் இன்ஸ்பெக்டர் ஒருவருக்கும் இருதயபுரத்தில் உள்ள ஒரு பெண்ணுக்கும் காதல் தொடர்பு இருந்தது. இத்தொடர்பினால் இப்பெண் கற்பமடைந்ததால், ஏற்கெனவே இப்பெண்ணை காதலித்த கிறிஸ்டி ஏக்கஸ் தம்பதிகளின் மகனை வற்புறுத்தலின் பேரில் திருமணம் முடித்து வைத்தனர். இச்சம்பவம் கிறிஸ்டியினுடைய மகனால் நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டு தீர்ப்பு சாதகமாக முடிந்ததால் அதிகாரத்தைப் பயன்படுத்தி வற்புறுத்தித் திருமணம் செய்து வைத்தார் என்ற குற்றச்சாட்டின் மீது சப்இன்ஸ்பெக்டர் வேலையில் இருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார். இதற்குப் பழிவாங்கும் முகமாகவே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாகப் பேசப்படுகிறது. தங்களைச் சுட்டது பொலிசாரே, அவர்களை அடையாளம் காட்ட தங்களால் முடியும் என கிறிஸ்டி கூறுகின்றார்.

இதேவேளை மார்ச் 10 அன்று இரவு 8.15 மணியளவில் மட்டக்களப்பு புத்தூரைச் சேர்ந்த சிவனேசராசு அமலதாஸ் வைத்தியசாலையில் வைத்து சுடப்பட்டார். இவர் ஏற்கெனவே விடுதலைப் புலிகளிடம் இருந்து இராணுவத்திடம் சரணடைந்து விடுதலை செய்யப்பட்டவர். பின்பு இவர் புளொட் இயக்கத்துடன் சிறிது காலம் செயற்பட்டவர். சம்பவதினம் இராணுவத்தினர் தங்களது புலனாய்வு முகாமுக்கு மாலை 6மணிக்கு வருமாறும் இவருக்கு அழைப்பு விடுத்திருந்தனர். இந்த முகாமில் இருந்து 100யார் தூரத்திலே இவரது உடல் கிடந்தது. வவுணதீவு இராணுவ முகாம் தாக்குதலின் பின் மீண்டும் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் கன்னங்குடாவில் இருந்து நகருக்கு வரஎத்தனித்த 12 பொது மக்கள் மார்ச் 12 அன்று சுட்டு வவுணதீவு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்துக்கு முன் எரிக்கப்பட்டனர்.

சாளம்பக் கேணியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை, ஈச்சந்தீவைச் சேர்ந்த சதாசிவம் ஆகியோர் மார்ச் 12 அன்று வீட்டில் இருந்து புறப்பட்ட போதிலும் இன்னமும் வீடு திரும்பவில்லை. மார்ச் 11ம்திகதி இரவு 10மணியளவில் அதிகார் வீதி, வைத்தியசாலை வீதி போன்ற இடங்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. மார்ச் 12 அன்று அமிர்தகழியைச் சேர்ந்த சாந்தகுமார் (இந்துக்கல்லூரி), மூர்த்தி (அமிர்தகழி சித்திவிநாயகர் வித்தியாலயம்) ஆகிய இருவரும் மாமாங்கம் பொலிசாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தினமும் முகாமுக்குக் கையொப்பமிட செல்ல வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளனர்.

மார்ச் 16அன்று புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப்படையினர் காடு வெட்டுவதற்காக ஆசிரியர்கள், மாணவர்கள், அரசாங்க ஊழியர்கள் அனைவரையும் அழைத்து சென்றனர். அன்றைய தினம் குருக்கள் மடம் வி.அ.படையினர் கிரான் குளத்து இளைஞர்களை காடு வெட்டுவதற்கு அழைத்துச் சென்றனர்.

மார்ச் 14அன்று மாவடி வேம்பு கிராமம் இங்குள்ள இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு ஆண்களும், பெண்களும் வந்தாறுமூலை மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இப்பகுதியில் எங்களுக்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் உங்கள் அம்மாமாரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவோம் என மாவடி வேம்பு இராணுவ முகாம் தலைமை அதிகாரி கூறினாராம். களுவாஞ்சிக்குடி வி.அ.படையினரால் கல்லாறு, களுவாஞ்சிக்குடி, ஒந்தாச்சிமடம் ஆகிய கிராமங்களில் இருந்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றவர்கள் ஒவ்வொரு ஞாயிறு தினம் இம்முகாமுக்கு சென்று கையெடுத்து இட்டு வர வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளனர். அந்நேரத்தில் அவர்களுக்கு வேலி அடைத்தல், பதுங்குகுழிகள் அமைத்தல், விறகு வெட்ட கூட்டி செல்லுதல் போன்ற வேலைகளுக்கு படையினர் பயன்படுத்துகின்றனர்.

மட்டக்களப்பு மயிலம்பாவெளியில் மார்ச் 17 அன்று இரவு 11மணியளவில் வீடு ஒன்றில் புகுந்து இராணுவத்தினர் 4பேரை பாலியல் பலாத்காரம் புரிந்து கொடுமைப்படுத்தியுள்ளனர். பாதிக்கப்பட்ட இருவரும் சகோதரிகள் ஆவர். ஒருவர் கடந்த வன்செயலின் போது கணவனை இழந்த 36 வயதுடைய விதவையாகும், இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றார்கள். மற்றவர் திருமணமாகாத 28 வயதுடைய இளம் பெண்ணாகும். சம்பவதினம் மயிலம்பாவெளி இராணுவ முகாமைச் சேர்ந்த 4 பேர் வீட்டினுள் இருந்த வயோதிபத் தாயொருவரை கட்டிவைத்து விட்டே இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். →19

4→

## பொல்கொட...

கோரியிருக்க வேண்டும்.ஆனால் அப்படி ஒரு கோரிக்கை வராமலேயே வழக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஏற்கெனவே காணாமல் போனோர் தொடர்பான மூன்று ஆணைக்குழுக்களில் இரண்டினது (வட கிழக்கு தவிர்ந்த) அறிக்கையை வெளியிடப் போவதாக பல தடவைகள் அறிவித்த போதும் இன்னும் ஒன்றும் வெளியிடப்படவில்லை.

அண்மையில் ஒரு மனித உரிமை இயக்க பெண்மணி ஒருவர் "நிச்சயமாக வெளியிடும் என்கிற நம்பிக்கை எனக்குக் கிடையாது. அப்படி வெளியிட்டாலும் நியாயமான ஒன்றாக இருக்கவும் போவதில்லை. ஏனெனில் அவ்வறிக்கை நீதியாக வெளியிடப்பட்டால் இராணுவத்தினரில் 20-25 வீதத்தினர் குற்றஞ் சாட்டப்படுவார்கள். அப்படி குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் குறைந்தபட்சம் இராணுவத்தை விட்டு நீக்குகின்ற தண்டனைக்கும் உள்ளாக நேரிடும். அரசு யுத்தத்துக்கு ஆட்பற்றாக்குறையை எதிர் நோக்கி வருகின்ற நிலையில் அவ்வளவு பெரிய தொகையினரை இழக்க விரும்பாது" என்றார்.

உண்மை தான். குற்றவாளிகளான பல படையினர் இன்று பெரிய அதிகாரிகளாக பதவியுயர்த்தப்பட்டு வடகிழக்கில் காடைத்தனங்களை கட்டவிழ்த்து விட அனுப்பப்பட்டுள்ளார்கள்.

இந் நிலையில் பொல்கொட சம்பவத்துடன் தொடர்புடைய பலபடை அதிகாரிகள் உட்பட இன்னும்பலபடையினரை அரசு எப்படி இழக்க விரும்பும். எனவே அவர்கள் தொடர்ந்து சுதந்திரமாக அவர்களது காடைத்தனங்களையும் அடுழியங்களையும் வெற்றிகரமாக நடாத்த எவ்வித தடையுமில்லை.

சுதா -


## வாருங்கள்!

ஏப்ரல் 5ம் திகதி காலை 9 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் தொடங்கும் சிறப்பு நாடகக் கருத்தாடலில் கலந்து அதனை ஆரோக்கியமாக வளர்த்துச் செல்வது எம் எல்லோரினதும் கடமை.

கடமையை நிறைவேற்ற வாருங்கள்!

### ஈழத்துத் தமிழ் அரங்கின் பரிமாணங்கள்

| | |
|---|---|
| தமிழ் நாடக வரலாறு எழுதும் எழுத்தியலில் உள்ள பிரச்சினைகள் | -பேரா.கா.சிவத்தம்பி |
| சமூகச் சமவினங்களும் அரங்கு வளர்ச்சியும் | -கலாநிதி சி.மௌனகுரு |
| தமிழ் அரங்கின் அரசியல் | -சி.ஜெயசங்கர் |
| குறியீட்டு அளிக்கையும் மாற்றுக் கருத்துக்கான தேடலும் | -விஜித்சிங் |
| ஈழத்து அரங்கும் தமிழக அரங்கும்: ஓர் ஒப்பீட்டுப் பார்வை | -பாலசுகுமார் |
| கற்கை நெறியாக நாடகமும் அரங்கியலும்: ஓர் கற்கை நெறியான நோக்கு | -காண்டீபன் |
| சிங்கள நாடக அரங்கினது பரிமாணங்கள்: ஓர் அறிமுகம் | -கலாநிதி சுனில் விஜேசிறிவர்தன |

இது ஓர் முழுநாள் கருத்தாடல்
குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்
ஒழுங்கமைப்பு:
விபவி மாற்றுக் கலாசார மையம்
17/1, ராஜகிரிய வீதி, ராஜகிரிய, தொலைபேசி இல-874996


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்